# தமிழ்மொழி

# செயல் நூல்

## ஆண்டு - 9

[விடைக்குறிப்புக்கள் சேர்ந்தது]

திருத்திய பதிப்பு
1997

9 ஆம் ஆண்டுக்குரிய புதிய பாடத்திட்டத்தைப் பூரணமாகப் பின்பற்றியும் தமிழ் ஆண்டு 9 என்னும் புதிய பாடநூலைத் தழுவியும் ஆக்கப்பெற்றது.

ஆக்கம்:
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு.வே)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.
நூலகம்
முக்கிய அறிவித்தல்.

இப்புத்தகம் உங்களுடைய சொத்தாகும். இதில் கீறுதல், கிழித்தல், வெட்டுதல், மடித்தல், அழுக்குப்படியவிடுதல், போன்ற ஊறுகளைச் செய்ய வேண்டாம் என அன்புடன் வேண்டுகின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் இருப்பின் உடன் ஆசிரிய நூலகருக்குத் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்லநிலையில் இருந்ததாகக்கருதி அதற்காக விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

-ஆசிரிய நூலகர்-

DONATED BY ADB FUNDED
...ARY EDUCATION DEVELOPMENT ...
...Y OF EDUCATION & ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி

# செயல் நூல்

## ஆண்டு-9

153

SARAVANA BAVANANTHA VIR. ALAVEDDY (?)
DATE----------
LIBRARY

ஆக்கம்:

பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு.வே)

வெளியீடு:

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

235, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்.

விலை ரூபா 75/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் பதிப்பு: 1992
ஆறாம் பதிப்பு : 1997

பதிப்புரிமை ஆசிரியர்க்கு

பதிப்பாளர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

கொழும்பில் அச்சிட்டு வெளியிடுவோர்:
**லங்கா புத்தகசாலை**
G.L 1/2 டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு 12
☎ 341942

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புக்குரிய ஆசிரியர்களுக்கு.....

★ இச் செயல்நூல், கல்வியமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலைய வெளியீடான, 1987ம் ஆண்டு முதற் செயல்முறைப்படுத்தப்படுகின்ற ஆண்டு 9 - 11, பாடத்திட்டங்களில் ஆண்டு 9 பாடநெறியைப் பூரணமாகத் தழுவி ஆக்கப்பெற்றது.

★ புதிய பாடத்திட்டத்தில் இடம்பெறும் தொடர் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் ஒப்படைகள் முதலிய அம்சங்களை அளவிடுவதற்கான பயிற்சிகளும் இச் செயல்நூலில் இடம்பெறுகின்றன.

★ ஆண்டு 9 ஆம் வகுப்புக்குரிய "தமிழ் 9" என்னும்பாடநூலில் 9 பாடங்களே இடம்பெற இச்செயல் நூலில் 18 செயல்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான காரணங்கள் மூன்று. (1) 208 பக்கங்கள் கொண்ட பாடநூலில் உள்ள 9 பாடங்களும் சராசரியாக 23 பக்கங்களை உள்ளடக்குகின்றன. அந்த 23 பக்கங்களில் உரைப்பகுதிப் பாடம் ஏறக்குறைய 5 பக்கங்களைக்கொள்ள மிகுதியான 18 பக்கங்களிலும் மொழியறிவு எனப்படும் அடிப்படை இலக்கணம் விரிவாக விளக்கப்படுகிறது. இந்த அடிப்படை இலக்கணப் பரப்பை மாணாக்கர் ஒரு செயல் மூலம் பயிலுதல் சாத்தியமற்றது. (2) ஆண்டு 9 பாடநூலில் இலக்கியப்பகுதி (செய்யுள்) ஒன்றேனும் இடம்பெறவில்லை. அந்தக் குறைபாடு சில இலக்கியப் பகுதிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிவிர்த்தி செய்யப்பட வேண்டும். 9 செயல்களாயின் 9 செய்யுட் பகுகளையே அறிமுகப்படுத்தல் இயலும்: 8 செயல்களாயின் குறைந்தளவு 18 செய்யுட் பகுதிகளையாவது அறிமுகப்படுத்தலாமே என்ற அங்கலாய்ப்பு, (3) ஒத்த கருத்துச் சொல் பழமொழி முதலியனவாக அமையும் மொழித்திறனிலும் இவ்வாண்டு மாணவர் கூடிய பயிற்சி பெறவேண்டும் என்னும் குறிக்கோள், எனவே, இச்செயல் நூலில் இவ்வாறான அமைப்பை எங்கள் தாய் மொழியாந் தமிழைக் கற்பிக்கும் தீர்க்கதரிசனமுடைய ஆசிரியர்கள் வரவேற்பார்கள் என எண்ணுகிறேன்.

★ இந்நூலில் உள்ள ஒவ்வொரு செயலும் இரு பகுதி கொண்டது. பகுதி 1. பலதேர்வு வினாக்கள் இவற்றில் பாடங்கள் சம்பந்தமான வினாக்களும் மொழித்திறனை விருத்தி செய்யும் வகையில் அமைந்த வினாக்களும் பத்துக்கு மேற்பட்ட அடிப்படை இலக்கண வினாக்களும் இடம்பெறுகின்றன. பகுதி 11: இதில், முதலிலே சீராகப் பந்தி எழுதுவதற்கான பலவேறு உத்தி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, படிமுறையான, பயிற்சிகள் வாயிலாக மாணவர் சுயமாகக் கட்டுரை எழுதத் தூண்டப்படுகிறார்கள். அன்றியும் இப் பகுதியில் பாடங்கள் சம்பந்தமான வினாக்களுக்கு விடை எழுதும் திறனும் செய்யுள், உரைநடைப் பகுதிகளைப் படித்து விளங்கி விடையிறுக்கும் திறனும் அளவிடப்படுகின்றன.

★ ஒவ்வொரு பாடமும் கற்பிக்கப்பட்ட பின்னர், அதற்குரிய இரு செயல்களைச் செய்விப்பதன் மூலம் அந்தந்தப் பாடங்களில் மாணவர் நிறையறிவு பெற வாய்ப்பு உண்டாகும்.

★ மாணாக்கர் தாமாகவே செய்யுள்களைப் படித்துப் பொருள் விளங்கி நயத்தற்கு ஏற்ற முறையில் இச் செயல்நூலில் 18 செய்யுட் பகுதிகளுக்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன.

★ பல்தேர்வு வினாக்களில் சரியான விடையை மாணவர் அறிவதோடல்லாது ஏனைய மூன்று விடைகளின் பொருள் நிலையையும் இயல்பையும் மாணாக்கர் அறியுமாறு வழிகாட்டல் பரந்த அறிவினை அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பாகும். பகுதி 11 இலும் குறிப்பிடப்பட்ட வினாவுக்குரிய விடையினை அறிவதோடு, ஏனைய வினாவுக்குமுரிய விடையினை அறிய வழிகாட்டல் சாலச் சிறந்தது.

★ அட்டவணை போட்டு நெட்டுருப் பண்ணச் செய்து மாணவர்கள் மனத்தில் சுமையேற்றும் வகையில் இச் செயல்நூல் அமைந்ததன்று. அவ்வச் சந்தர்ப்பங்களில் அவ்வவ்விடயங்களை அறிவிக்கும் பாங்கில் அமைந்தது.

★ ஏனைய செயல்நூல்களை உவந்தேற்றுப் பயன்செய்த ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நூலையும் விருப்புடனேற்றுப் பயன்படுத்துவர் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

-ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்:1

# செயல் : 1

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக:

1. சிரமமானதொரு கணக்கைச் செய்யும் போது நிகழ்வது,
(1) தலைசுற்றி மயக்கம் உண்டாதல் (2) மூளைக்கு அதிக இரத்தம் செல்லுதல்
(3) உடல் சோருதல் (4) இருதயம் வேகமாகத் துடித்தல்

2. உடலுறுதிக்காக உலாவச் செல்லும் மூளை வேலை செய்வோரிடமுள்ள குறைபாடு,
(1) உடல் உறுதிபெற வேண்டுமென எண்ணாமை (2) மனத்தை அலைய விடுதல்
(3) சிந்தனையில் மூழ்கி நடத்தல் (4) இயற்கையை அனுபவித்தல்

3. குற்றமிழைத்து வருந்தும் ஒருவரின் வியர்வைப் பரிசோதனை முடிவு காட்டுவது,
(1) வியர்வை நீலநிறமாயிருத்தல் (2) வியர்வை சிவப்பு நிறமாயிருத்தல்
(3) வியர்வை மஞ்சளாய் இருத்தல் (4) வியர்வை வெளிறிய சிவப்பாயிருத்தல்

4. குருடியான கெலன் கெல்லரிடமிருந்த சிறப்பாற்றல்,
(1) குரலைக்கேட்டு ஆளையறிதல் (2) தடவிப்பார்த்து நிறத்தையறிதல்
(3) தானாக வழிகண்டு நடத்தல் (4) பேச்சில் திறமை காட்டல்

5. வன்மையான எண்ணத்தின் இயல்பு,
(1) மூளையை மாத்திரம் பாவித்தல் (2) உடலணுக்களனைத்தையும் பாதித்தல்
(3) கண்ணைச் சிவக்கச் செய்தல் (4) வியர்வையை வெளியேற்றல்

2. பின்வருவனவற்றுள் ஒத்த கருத்தற்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.

6. நல்குரவு, இலம்பாடு, அரும்பாடு, மிடிமை
7. கண்படை, கண்ணோய், தூக்கம், உறக்கம்
8. யமன், மறலி, தருமன், கூற்றுவன்

3. பொருத்தமான விடையைத் தெரிக.

9. காகம் கரையும் என்பதுபோலப் புறா,
(1) இரையும் (2) அகவும் (3) குறுகுறுக்கும் (4) கீச்சிடும்

10. பூனையின் பெண் பெட்டை எனப்படுவதுபோல குரங்கின் பெண்,
(1) கடுவன் (2) மந்தி (3) பிணா (4) வடவை

4. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

11. பேச்சு மொழியிற் சொற்களுக்கு அடிப்படையாக விளங்கும் மூலஒலிகள்,
(1) எழுத்துக்கள் (2) ஒலியன்கள் (3) சொற்கள் (4) வாக்கியங்கள்

12. ஒலியன்களின் சேர்க்கையால் உண்டாவன,
(1) பெயர்கள் (2) வாக்கியங்கள் (3) எழுத்துக்கள் (4) உருபன்கள்

13. வரிவடிவம் ஒன்றாயிருக்க இடத்துக்கிடம் சிறிதுசிறிது வேறுபடும் ஒலிகள்,
(1) நெடுங்கணக்கு (2) பேச்சுவழக்கு (3) மாற்றொலியன்கள் (4) சொற்களஞ்சியம்

14. தமிழிலுள்ள 247 எழுத்துக்களும் ஒழுங்குமுறையில் அமைந்த அட்டவணை,
(1) நெடுங்கணக்கு (2) வரிவடிவம் (3) அகராதி (4) கண்டுணர் சொற்களஞ்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இலக்கியங்களை ஆராய்ந்து ஒழுங்குற அமைந்த வரம்பு,
(1) காவியம் (2) தொல்காப்பியம் (3) மரபுத் தொடர்மொழி (4) இலக்கணம்

5. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. தமிழிலுள்ள மூல ஒலியன்களின் தொகை,
(1) 18 (2) 12 (3) 216 (4) 30

17. தனிநிலை உருபனுக்கு உதாரணமாய் அமைந்த சொல்,
(1) குளநெல் (2) குளத்தில் (3) குளம் (4) குளத்திலா

18. "க" என்னும் வரிவடிவம் ஒன்றாயிருக்க ஒலிப்பு முறையால் வேறுபடுஞ் சொல்,
(1) கடல் (2) காகம் (3) பக்கம் (4) கதிர்

19. பின்வருவனவற்றில் சொல் எனக் கருதப்படத்தக்கது,
(1) பூபோ (2) அட்பு (3) வொறி (4) அன்பு

20. மனக் கருத்துக்கள் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படும் இருவகை வடிவங்கள்,
(1) உரையும் ஓவியமும் (2) செய்யுளும் சிற்பமும்
(3) உரையும் பாட்டும் (4) பாட்டும் கூத்தும்

# பகுதி 11

1. பின்வருவன ஒவ்வொன்றையும் பற்றி 50 சொற்கள் அளவில் எழுதுக.
(அ) மரங்களின் வேர் என்பது பற்றி விளக்க முறையில் அமையும் ஒரு பந்தி.
(ஆ) நிர்மலமான நீலவானம் என்பது பற்றி வருணனை முறையில் அமையும் ஒரு பந்தி.
(இ) எங்கள் வீட்டு பசுவிற் கன்று பால் குடிக்கிறது இந் நிகழ்ச்சியை விபரித்து ஒரு பந்தி.

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:
(அ) "எண்ணம் உடலை வன்மையுடன் ஆட்சி செய்கிறது." இவ்வுண்மையை நிருபிக்கப் பல்கலைக்கழகப் பேராசிரியர் செய்த ஆய்வுகளில் ஒன்றை எழுதுக.
(ஆ) கொல்லனின் புயம் திரண்டு உறுதி பெறாதிருக்க உடற்பயிற்சியாளனின் புயம் திரண்டு உறுதி பெறுவதற்கான காரணத்தை விளக்குக.
(இ) மிகுந்த அச்சம் அளவுகடந்த மகிழ்ச்சி என்பன உடலமைப்பைச் சீர்குலைக்கும் என்பதற்கு உதாரணங்கள் எழுதுக.

3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

பாய் இழைப்பவர்களில் ஒருவன் என்னையும் என் நண்பர் இருவரையும் அழைத்துச் சென்று பாய் இழைக்கும் முறையைக் காண்பித்து "இத் தொழிலை மறுபடியும் முன்னுக்குக் கொண்டு வருவது எப்படி?" என்று என்னைக் கேட்டான். அதற்குரிய விடை அப்போது எனக்குத் தெரியவில்லை. பிறகு அவன் தனது சொற்ப ஆகாரத்தைப் பகிர்ந்துகொள்ளுமாறு எங்களை அழைத்தான். நாங்கள் உள்ளே சென்றதும் ஒரு பக்கத்தில் என் நண்பர்கள் உட்காருவதற்காக இரண்டு கோரைப்பாய்களை விரித்தான். இன்னொரு பக்கத்தில் நான் உட்காருவதற்காக மற்றொரு பாயை விரித்தான். அந்தப் பாயைக் கண்டதும் நான் பிரமித்து அவனை நோக்கி "உன்னுடைய தொழிலின் அழிவுக்குக் காரணம் இப்போது தான் தெரிகிறது. அதற்குக் காரணம் உன்னுடைய மனப்பான்மையே" என்றேன். நான் சொன்னதன் கருத்து அவனுக்கு விளங்கவில்லை. என் நண்பர்களுக்கு விரித்திருக்கும் பாயைக் காண்பித்து "இவை ஏது?" என்று கேட்டேன். அவன் தனது தோட்டத்தின் புல்லைக்கொண்டு தான் இழைத்தது என்றான். எனக்காக விரித்த புலியுருவம் பொறித்த பாயைக் காண்பித்து "இது ஏது?" என்று கேட்டேன். "கடையில் வாங்கியது" என்று அவன் சொன்னான். "இவ்விதம் உன்னுடைய பாயைவிட இந்த யப்பான் பாய் உயர்ந்தது என்று நீ எண்ணினால் மற்றவர்களும் அவ்விதமே நினைத்து உன்னுடைய பாயை வாங்காமல் யப்பான் பாயை வாங்குவதில் தவறு என்ன? உன் தொழிலுக்கு நீ மதிப்புக் கொடுத்து அந்நிய நாட்டுப் பாயை வாங்காமல் இருந்தால் தான் பிறரும் உன்னுடைய பாயை வாங்கி உன் தொழிலை ஆதரிப்பார்கள்" என்றேன். (குமரப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) "இத் தொழிலை மறுபடியும் முன்னுக்குக் கொண்டு வருவது எப்படி" என்று பாயிழைப்பவன் கேட்ட கேள்விக்கு மறுமொழி யாது?

(ஆ) இவ்வுரைப்பகுதி ஆசிரியருக்குப் பாயிழைப்பவன் யப்பான் பாய் விரித்தமைக்குக் காரணம் யாதாயிருக்கலாம்?

(இ) பாயிழைப்பவனின் மனப்பான்மை யாது? அது பற்றிய உமது அபிப்பிராயம் யாது?

(ஈ) அவர் தமது கருத்தை வாசகர் மனதில் பதிக்கக் கையாளும் உத்தி அல்லது முறை யாது?

4. பின்வரும் கவிதைகளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

(1) "அன்பு கொண்டொரு றோசாமலர்ச்செடி அருமையென்மகன்சாந்தம் வளர்த்தனன்.
முன்பு வாசலில் நின்று தளிர்த்தது முகிழரும்பி நெகிழ்ந் தொருகாலையில்
பொன்பு னைந்த அவன் முகம் போலொரு பூமலர்ந்த தப்பூவி னழகினில்
இன்பு கொண்டன னீடுபட்டிம்மலர் எழிலுக்கெம்மலர் தானிணையோவென்றான்"

(2) "மாலை வந்தவன்பார்க்கையி லம்மலர் வாடிமுன்பு வயங்கு மழகும் போய்
காலை வண்டிசை பாடும் மலர்ச்செடி கவலை மூழ்கிக் குமைவதும் கண்டனன்
காலை பூத்தபின் மாலையிலே யெழில் கருகி வாடும் மலரினைப் போலவே
ஞால மீதினில் மனிதர்தம் வாழ்வென நவிலும் இம்மலர் காணெனச் செப்பினேன்"

(புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை)

(அ) சாந்தம் காலையிற் கண்டது யாது? மாலையிற் கண்டது யாது?

(ஆ) மலர்ச்செடி கவலை மூழ்கிக் குமைந்தது ஏன்?

(இ) இப்பாடல்களில் வந்த இரு உவமைகளையும் உவமேயங்களையும் கூறுக:

(ஈ) இப்பாடல்கள் வாயிலாகப் புலவர்மணி புலப்படுத்த விரும்பும் கருத்து யாது?

(உ) பிரதான கருத்தைப் புலப்படுத்த கையாளப்பட்ட உத்தி யாது?

5. பழிக்குப் பழி வாங்காது விட்டால் என்பேரை மாற்றி அழை என்று சிறைச்சாலை செல்பவன் கூறினான். அதனைக் கேட்ட அவன் பகைவன் நீ என்ன செய்வாய் அதை நானுங் காணத்தான் இருக்கிறேன் என்றான்.

(அ) இவ்வுரைப் பகுதிக்கு ஏற்ற குறியீடு இட்டுத் திருப்பி எழுதுக.

(ஆ) இவ்வுரைப் பகுதியில் வந்த தன்கூற்றுப் பகுதிகளை பிறன்கூற்றாக்கி எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல் : 2

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக:
   1. நாய் உணவின் மணத்தை மோப்பம் பிடித்தவுடன் நிகழ்வது
      (1) இரத்தம் அதிகமாக மூளைக்குச் செல்கிறது. (2) வாயில் செரிக்கச் செய்யும் நீர் ஊறுகிறது.
      (3) இரத்தம் வயிற்றுக்கு அதிகமாகச் செல்கிறது. (4) வயிற்றில் செரிக்கச் செய்யும் நீர் சுரக்கிறது.

   2. வயிற்று வலி உண்டாகும் போது உடல் முழுவதும் துன்புறக் காரணம்
      (1) உடம்பின் பிரதான உறுப்பு வயிறு.
      (2) உடலணுக்கள் ஒன்றோடொன்று பிணைந்திருத்தல்.
      (3) உடல் முழுவதும் இரத்தம் குறைவாய் ஓடுதல்.
      (4) வயிற்று வலி கொடிய நோயாய் இருத்தல்.

   3. வெறும் கோதுமை மாவால் நோயாளி குணமடையக் காரணம்.
      (1) கோதுமை மாவில் மருந்துச் சத்து இருந்தமை.
      (2) கோதுமை மா சில வியாதிகளைக் குணப்படுத்தும்.
      (3) கோதுமை மா கொடுத்த மருத்துவர் மீதிருந்த நம்பிக்கை.
      (4) மருத்துவர் கைராசியுடையவராய் இருந்தமை.

   4. எண்ணம் உடலை வன்மையாக ஆட்சி செய்கிறது எனக் கூறிய கவிஞர்
      (1) கேதே (2) பைரன் (3) மில்டன் (4) ஷெல்லி

   5. துன்பச் செய்தியைக் கேட்டவர் மாரடைப்பால் இறக்கக் காரணம்
      (1) துக்கத்தைத் தாங்க முடியாமை.
      (2) முன்னரே மாரடைப்பு நோய் இருந்தமை.
      (3) எண்ணம் உடலமைப்பை நிலைகுலையச் செய்தமை.
      (4) பெலவீனமான இருதயம்.

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக:
   6. இரு நாடுகளுக்கிடையே கைதிகள் பரிமாற்றம் நிகழ்ந்தது - பரிமாற்றம் என்றால்
      (1) விட்டுக் கொடுத்தல் (2) குதிரைகளை மாற்றிக்கொள்ளல்
      (3) விற்பனை செய்தல் (4) கொடுத்து வாங்குதல்

   7. பெண்களிலே சீதை இலட்சணமான பெண் இலட்சணம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
      (1) இலக்கணம் (2) எழில் (3) கற்பு (4) தோற்றம்

   8. அன்னை இந்திராகாந்தி மறைந்தபோது உலகத் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர் அஞ்சலி என்பதன் ஒத்த கருத்துச்சொல்
      (1) இரங்கலுரை (2) வாழ்த்து (3) வணக்கம் (4) காணிக்கை

   9. படைவீரரின் அட்டூழியத்தைக் கண்டு மக்கள் அஞ்சினர் அட்டூழியம் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்
      (1) கொடுமை (2) பணிவு (3) இரக்கம் (4) நற்செயல்

   10. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" வந்தனை என்பதன் எதிர்ச்சொல்
       (1) நிந்தனை (2) சிந்தனை (3) விந்தனை (4) ஒப்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இடைவெளிகளை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.

11. தன்னைவிடக் கெட்டிக்காரன் இல்லை என்ற ...... குமரனுக்கு உண்டு.
(1) வாய்க்கொழுப்பு (2) தான்தோன்றித்தனம் (3) தலைக்கனம் (4) ஏட்டிக்குப்போட்டி

12. குதர்க்கம் பேசியவரை மேலும் பேசமுடியாதவாறு அப்பெரியார்...... கொடுத்தார்
(1) வாயாப்பு (2) தண்டனை (3) தட்சணை (4) கையுறை

13. தான் செய்த குற்றத்தை எண்ணுந்தோறும் குற்றஞ்செய்தவன் மனம் .....
(1) விறுவிறுக்கும் (2) கலகலக்கும் (3) நெறுநெறுக்கும் (4) குறுகுறுக்கும்

14. ஆயிரம்பேரை ..... அனுப்பியவரை அரை வைத்தியன் என்று பொதுமக்கள் கூறுவர்
(1) மருத்துவநிலையத்துக்கு (2) எமனுலகுக்கு
(3) சுகப்படுத்தி வீட்டுக்கு (4) சிறைச்சாலைக்கு

15. ஆசிரியர் கூறிய அறிவுரைகள் அந்த மாணவனுக்கு....... பயனற்றனவாயின.
(1) குளிக்கப்போய்ச் சேறு பூசினது போல (2) நீர்க்குமிழிபோல
(3) செவிடன் காதில் ஊதிய சங்கு போல (4) நிறைகுடம்போல

4. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக:

16. "து" என்னும் வரிவடிவம் ஒன்றாயிருக்க ஒலிப்பு முறையால் வேறுபடுஞ் சொல்
(1) துன்பம் (2) அது (3) தும்பி (4) பருந்து

17. மாற்றொலியன் இடம்பெறாத ஒரு சொல்
(1) அகம் (2) பாகம் (3) கனவு (4) நாகம்

18. சொல்லின் வரைவிலக்கணத்திற்குப் பொருத்தமற்றது
(1) பொருளைக் குறிப்பது (2) செயலைக் குறிப்பது
(3) குறிப்பை உணர்த்துவது (4) வினாவைக் குறிப்பது

19. மொழி எப்போது நிலைபேறுடையதாகிறது?
(1) பேச்சு மொழியாகும் போது (2) எழுத்து மொழியாகும் போது
(3) ஒலியனாய் இருக்கும் போது (4) உருபனாய் அமையும் போது

20. சார்பு நிலை உருபனுக்குரிய உதாரணம் அல்லாதது
(1) மக்களா (2) மக்களை (3) மக்களின் (4) மக்கள்

## பகுதி : 11

1. பின்வருவனவற்றுள் ஒவ்வொன்றையும் பற்றி 50 சொற்கள் அளவில் எழுதுக:

(அ) "அந்த உணவுச்சாலை முதலாளி மாதாமாதம் தமது ஊழியரைக் கோவிலுக்கு அனுப்பி மொட்டை அடித்துவரப் பணம் கொடுக்கிறார்"- இத்துணுக்கை விபரித்து நகைச்சுவை தோன்ற அமையும் ஒரு பந்தி.

(ஆ) வெள்ளைப் பிரம்புடன் குருடன் ஒருவன் தெருவில் நடக்கிறான் - அவன் நடக்கும் முறையை விபரித்து இரக்க உணர்வு தோன்றும் வகையில் ஒரு பந்தி.

(இ) "காலில் கல் அடித்தது" இக் கூற்றில் கல் குற்றவாளியா நாம் குற்றவாளியா என்பதைக் காட்டும் வகையில் நியாயம் கூறி ஒரு பந்தி.

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:

(அ) "எண்ணம் உடலின் ஒவ்வோர் அணுவையும் பாதிக்கிறது" - இக் கூற்றை உதாரணந் தந்து விளக்குக.

(ஆ) "தவறான எண்ணத்தினால் சிலர் நோய் கொண்டு வருந்துவதுண்டு"- இதற்கு உதாரணமாய் அமைந்த நிகழ்வு ஒன்றை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) மனத்தை அடக்கியாளும் மனவலி கொண்ட பேராசிரியர் செய்த பரிசோதனையையும் விளைவையும் கூறுக.

3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

சங்க இலக்கியங்களில் ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவர் இயற்றிய செய்யுள்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தினின்று இவர் மதுரைக்குச் சென்றிருக்கக்கூடுமென்று ஊகிப்பதற்கு இடமிருக்கிறது. பூதன் என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் இப்போதும் வழங்கி வருவதாகும். சங்க காலத்துச் சொற்களில் சில இந்தக்காலத்திலும் யாழ்ப்பாணத்திற் கல்வித் தேர்ச்சியில்லாத சாதாரண மக்களின் பேச்சுவழக்கில் இருக்கின்றன. ஐது என்பது சங்க இலக்கியச் சொல்லாகும். யாழ்ப்பாணத்திற் காய்கறித் தோட்டங்களில் வேலை செய்வோர் "பயிர்களை ஐதாக நடு" என்று சொல்வார்கள். ஐது, சிறிது அகன்றுள்ளவற்றைக் குறிக்கும் சொல்லாக இங்கு வழங்கப்படுகின்றது. அதர் என்ற சொல் வெட்டப்பட்ட குறுகிய வழியைக் குறிக்கும் பொருளில் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் அதர் வெட்டுதல் என்பது சாதாரண பேச்சு வழக்கில் உள்ளது. நொதுமலாளர் என்ற பிரயோகம் புறநானூற்றில் வருகிறது. இரண்டு பக்கங்களிலும் சாராமல் இருப்பவரை "அவர் நொதுமலில் இருக்கிறார்" என்று யாழ்ப்பாணத்து மக்கள் கூறுவார்கள். நிரை (வரிசை) முகில் (மேகம்) திரை (அலை) போன்ற சொற்கள் யாழ்ப்பாணத்தில் சாதாரண பேச்சு வழக்கில் இருக்கின்றன. தென்னிந்தியாவில் இச்சொற்களின் பொருளைத் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்களே அறிவார்கள். மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பெண் குழந்தையை "மகளே" என்று அழைக்கும் வழக்கத்தைக் குறிக்கும் ஒரு சொல்லுண்டு. இவ்வழக்கம் தென்னிந்தியாவில் அறவே மறைந்தொழிந்து போயினும் யாழ்ப்பாணத்தில் இன்றும் நிலவுகின்றது. யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் சங்க காலத்திலும் நிலைபெற்றிருந்தனர் என்பது பல காரணங்களால் உறுதிப்படுகின்றது.

- திரு.சு.நடேசபிள்ளை -

(அ) இப்பந்தியிற் "பூதன்" என்ற சொல்லோடு தொடர்புடையதாகக் கூறப்படும் செய்திகள் எவை?

(ஆ) சங்க காலச் சொற்களாக யாழ்ப்பாணத்தில் வழங்கும் சொற்களில் மூன்றுக்கு விளக்கம் தருக.

(இ) தொல்காப்பியத்திற்கும் யாழ்ப்பாணத் தமிழுக்கும் இருக்கும் தொடர்பினை விளக்குக.

(ஈ) நொதுமலாளர் என்னும் சொற்பிரயோகம் பற்றிக் குறிப்பிடப்படுவது யாது?

(உ) இப்பந்தியை எழுதிய ஆசிரியரின் நோக்கம் எதுவென எண்ணுகிறீர்?

(ஊ) அவர் தம் எண்ணத்தை வாசகன் மனதில் பதிக்க எத்தகைய முறையைக் கையாண்டிருக்கிறார்?

(எ) இவ்வுரைப் பகுதியின் பொருளை 25 சொற்களில் சுருக்கி எழுதுக.

4. பின்வருஞ் செய்யுள்களைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

(1) "எஃகிய பஞ்சினைப் போலத் - தமிழ்
எல்லாள மன்னன் இருதயம் போல
வெஃகிய வெண்முகிற கூட்டம் - இந்து
வெண்டிரை மேய எழுந்திடு மன்றே"

(2) "ஈயாத வற்சரின் வெளவி - நல்ல
இரவலர்க் கீகின்ற புரவலர் போல
ஓயா வுவர்கட லள்ளி - மிக
உருண்டு திரண்டு புரண்டெழு மேகம்"

(3) செங்கதி ரோன்றனை யெள்ளி - நின்று
சிரிப்பது போல விடையிடை மின்னி
அங்கவ னோடறை கூவி - எதிர்த்
தார்ப்பது போல விடித்து முழங்கும்"

(சோமசுந்தரப் புலவர்)



DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அரும்பதம்: எ.்.கிய - நெகிழ்ந்த, மென்மையான; வெ.்.கிய: - விரும்பிய இந்து - இந்துசமுத்திரம்: திரை - கடலலை, ஈயாத - கொடாத: வற்சா் - உலோபிகள்: வௌவி - கவா்ந்து: புரவலா் - வள்ளல்: செங்கதிரோன் - சூரியன்: எள்ளி - பரிகசித்து, அறைகூவல் - போருக்கழைத்தல்: ஆா்ப்பது - சத்தஞ்செய்வது)

குறிப்பு: விடைகள் முழுமையாக வசனநடையில் அமைத்தல் வேண்டும்.

(அ) (1) வெண்முகிற் கூட்டத்துக்குக் கூறப்பட்ட உவமைகள் எவை?
(2) பொதுத் தன்மைகள் எவை? (3) வெண்முகிற்கூட்டம் எதனை விரும்பியது?

(ஆ) (1) ஈயாத வற்சா் போன்றது எது? (2) இரவலா் போன்றது எதுவாயிருக்கலாம்?
(3) புரவலா் போன்றது எது?

(இ) (1) மின்னியது எது? (2) அது மின்னிய செயல் எது போலிருந்தது?
(3) முழங்கியது எது? (4) முழக்கம் எது போலிருந்தது?

(ஈ) பின்வரும் தொடா்கள் மூலம் நீா் அறிவனவற்றை எழுதுக.
(1) வெண்டிரை மேய எழுந்திடும் (2) உருண்டு திரண்டு புரண்டெழும்

(உ) இச்செய்யுளைப் படித்து நீா் கண்ட காட்சியை வசனநடையில் எழுதுக.

5. பின்வருவனவற்றை அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியத்தில் அமைக்க.
(அ) வெஞ்சினம் (ஆ) குய்யோ முறையோவெனக்கூவி (இ) பரிமாற்றம்
(ஈ) பிரதிபலிப்பு (உ) வேரும் வேரடி மண்ணும் இல்லாமல்

## பாடம்: 2 செயல்: 3

## பகுதி: 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.
 1. தவஞ் செய்வோா் எனப்படுவோா்
 (1) தியானஞ் செய்வோா் (2) காட்டிலும் மலைக்குகைகளிலும் இருப்போா்
 (3) தங்கருமம் செய்வோா் (4) நீரோ உணவோ இன்றி விரதம் இருப்போா்

 2. பொருள் சோ்த்து வைக்கும் சேமநிதி வங்கி எதுவென வள்ளுவா் கூறுகிறாா்?
 (1) வறியவா்களின் பசித்த வயிறு (2) விவசாய முயற்சிகளில் செலவிடல்
 (3) தேசிய சேமிப்பு வங்கி (4) குடும்பத்துக்கு உண்டியும் உறையுளும் அளித்தல்

 3. திருவள்ளுவா் கூறிய முதலுபதேசம் எதுவெனக் கட்டுரையாசிரியா் கூறுகிறாா்?
 (1) பிறா் நலன் கருது (2) வறியவா்க்கு வாரிவழங்கு
 (3) தெய்வபக்தியுடையவனாய் இரு (4) சுயநலக்காரனாய் இரு

 4. அமுத சுரபி என்னும் பாத்திரத்தை வைத்திருந்தவா்
 (1) காஞ்சனன் (2) ஆபுத்திரன் (3) ஆதிரை (4) உதயகுமரன்

 5. சமயி எனக் கருதப்படுவோனுக்கு இருக்க வேண்டிய தகுதி
 (1) எல்லோரும் வாழவேண்டும் என்னும் மனநிலை
 (2) காலையும் மாலையும் கோயிலுக்குப் போதல்
 (3) எல்லா விரதங்களையும் அனுட்டித்தல்
 (4) நல்லொழுக்கம் உடையனவாய் இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

6. சிவகாமி எல்லாப் பாக்கியங்களும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தாள் - பாக்கியம் என்பதன் ஒத்த கருத்துச்சொல்
(1) சௌகரியம் (2) செல்வம் (3) சிறப்பு (4) கணவனும் சுற்றமும்

7. ஆண்டவன் அனுக்கிரகத்தால் அவளுக்குப் பிள்ளைச் செல்வம் கிடைத்தது - அனுக்கிரகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) பக்தி (2) அருள் (3) நல்ல கிரகநிலை (4) செயல்

8. "ஊருக்கு உபதேசம்: உனக்கல்லடி மகளே" - உபதேசம் என்பதன் ஒத்த கருத்துச்சொல்
(1) சாதனை (2) தொண்டு (3) போதனை (4) பிரசங்கம்

9. "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" - புலர்தல் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்
(1) விடிதல் (2) உதித்தல் (3) மறைதல் (4) இருளல்

10. அவர்கள் இருவரும் மிகுந்த கேண்மை உடையவர்கள் - கேண்மை என்பதன் எதிர்க்கருத்துச்சொல்
(1) பகைமை (2) செல்வம் (3) தோழமை (4) பயம்

3. பின்வரும் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.

11. தேவர்களுக்கு மண்ணிலுள்ளார் வழங்கும் உணவு
(1) அமுதம் (2) ஆலம் (3) அவி (4) புற்கை

12. விரும்பியனவற்றைக் கொடுக்கும் தேவலோகத்து மரம்
(1) பனை (2) கற்பகதரு (3) கற்பனைமரம் (4) விந்தைவிருட்சம்

13. எடுக்குந்தோறும் குறைவின்றி உணவைப் பெருக்கும் பாத்திரம்
(1) அதியசுரபி (2) கோமுகி (3) ஊண்சுரபி (4) அமுதசுரபி

4. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

14. அவன் நினைத்த காரியம் கைகூடிற்று - கைகூடல் என்னும் மரபுத்தொடரின் பொருள்
(1) நிறைவேற்றுதல் (2) கையிற்சேர்தல்
(3) உண்மையாதல் (4) உருவமாதல்.

15. "பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்" என்னும் பழமொழியின் கருத்து
(1) தன்னுயிர் போல மன்னுயிரையும் நினை (2) தருமம் என்றுமே அழிவதில்லை
(3) பிறர்க்குச் செய்யும் நன்மைகள் தனக்கு நன்மையாக விளையும்
(4) ஒருவனுக்கு நன்மையுந் தீமையும் பிறரால் வருவதில்லை.

16. தாய் தன் ஒரேயொரு மகனை ...... காத்தாள் - இடைவெளியில் நிரப்பத்தக்க உவமைத்தொடர்
(1) நகமும் சதையும் போல (2) பூவும் மணமும் போல
(3) வெண்ணிலாவும் வானும் போல (4) கண்ணை இமை காப்பது போல

5. இடைவெளியில் நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

17. வீக்கத்திற்குச் சுடுசோற்றினால்...... கொடுத்தார்
(1) ஒத்தடம் (2) ஒத்தணம் (3) ஒற்றடம் (4) ஒற்றணம்

18. பேரனும்.....கோவிலுக்குச் சென்றனர்
(1) பேத்தி (2) போர்த்தி (3) பேற்றி (4) பேற்பத்தி

19. பின்னால் இருந்து வந்த......ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்
(1) சீழ்க்கை (2) சீக்காய் (3) சீழ்க்காய் (4) சீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

20. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் தொகை
(1) 216 (2) 30 (3) 126 (4) 247

21. உயிரோடாயினும் மெய்யோடாயினும் சேர்த்து காணப்படாத எழுத்து
(1) வினாவெழுத்து (2) ஆய்ந்தவெழுத்து (3) சுட்டெழுத்து (4) குற்றெழுத்து

22. பின்வருவனவற்றிலே தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் அமைந்த மெய்யெழுத்துத் தொகுதி
(1) ம்,ச்,ந்,க் (2) த்,ப்,ய்,வ் (3) க்,ச்,ண்,ட் (4) வ்,ழ்,ப்,த்

23. "கோ" என்னும் உயிர்மெய் எழுத்தின் மாத்திரை
(1) அரை (2) ஒன்று (3) இரண்டு (4) இரண்டரை

24. பின்வருவனவற்றின் அகச்சுட்டாய் அமைந்த சொல்
(1) அது (2) அம்மரம் (3) இத்தலம் (4) உவ்வீடு

25. இனவெழுத்து இல்லாத எழுத்துக் கூட்டம்
(1) வல்லினம் (2) மெல்லினம் (3) இடையினம் (4) நெடில்

26. குற்றியலுகரம் அல்லாத உகரம் இறுதியில் வந்த சொல்
(1) நாடு (2) வயிறு (3) கதவு (4) பாம்பு

27. பின்வருவனவற்றில் வந்த இடைத்தொடர்க் குற்றியலுகரம்
(1) பாக்கு (2) சொண்டு (3) பயறு (4) செய்து

28. மொழியிடையில் ட்,ற் என்னும் மெய்கள் எவ்வெவ் மெய்களோடு மயங்கி வரும்
(1) ண்,ட்,ந் (2) க்,ச்,ப் (3) ல்,ள்,ர் (4) ண்,ம்,ன்

29. பன்னிரண்டு உயிரோடு சேர்ந்த மொழிக்கு முதலில் வரத்தக்க எழுத்துக்கூட்டம்
(1) ல்,ள்,வ், ய் (2) ம்,ந்,ஞ்,ங் (3) க்,ச்,ந்,ம் (4) ச்,ட்,ப்,வ்

30. பின்வரும் சொற்களில் தமிழ் ஒலி மரபுக்கு ஒத்து வராத சொல்
(1) இராமன் (2) புத்தகம் (3) இலக்கணம் (4) லாபம்

# பகுதி 11

1. ஒழுங்கின்றி அமைந்துள்ள பின்வரும் வாக்கியங்களை ஒழுங்காக்கி கருத்துத் தொடர்புள்ள ஒரு பந்தியாக்கி எழுதுங்கள்.

1. (அ) அந்தப் பாறைகளையும் குன்றுகளையும் குடைந்து கோயில்களையும் விகாரைகளையும் அமைக்கும் ஆசையினால் தான் அத்தகைய போட்டி உண்டாயிற்று. (ஆ) பெயர்பெற்ற சிற்பிகளிடமும் சித்திரக் கலைஞர்களிடமும் நாலு மதத்தினரும் வந்து மன்றாடி நின்றார்கள். (இ)பாறைகளுக்கும் குன்றுகளுக்கும் கூடப் பெரிய போட்டி ஏற்பட்டது. (ஈ) அதே மாதிரி சிற்பிகள் சித்திரக் கலைஞர்களின் விஷயத்திலும் பலமான போட்டி ஏற்பட்டிருந்தது.(உ) ஒவ்வொரு மதத்தினரும் "இது எங்கள் குன்று! எங்கள் பாறை" என்று பாத்தியதை கொண்டாடினார்கள். (முதல்வாக்கியம்:இ)

2. (அ) கும்பக மாலையணிந்த சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோலத்தைக் தரிசித்து வியந்து இவர் 'சம்பக சுந்தரர்' என்று சொல்லி வணங்கினான். (ஆ) வமிச சூடாமணி பாண்டியன், சோமசுந்தரக் கடவுள் பொருட்டுத் திருநந்தவனம் உண்டாகிச் சம்பகவனமும் தனியே வைத்தான். (இ) அவருக்குச் சம்பகமாலை சாத்துவித்த காரணத்தாலே வமிச சூடாமணி பாண்டியனும் சம்பக பாண்டியன் எனப் பெயர் பெற்றான். (ஈ) அதிலே மலர்ந்த சம்பகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களைக் கொய்து இண்டை முதலிய பலவித மாலைகளைத் தொடுத்துச் சோமசுந்தரக் கடவுளுக்குச் சாத்துவித்தான். (உ) இன்றைக்கும் அக்கடவுளுக்கு அத்திருநாமம் வழங்குகிறது. (முதல்வாக்கியம்:அ)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "அற்றார்அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" இக்குறட்பாவின் பொருளை உமது வசன நடையில் எழுதுக.

(ஆ) திருவள்ளுவர் தம்மிடம் வந்தவருக்குக் கூறிய மூன்றாவது உபதேசம் என்ன? விளக்குக.

(இ) ஆபுத்திரனைப் பற்றிக் கூறப்படும் செய்தி யாது? அவனைப் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?

3. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

"இரவிடை மதியம் என்பான் ஆடிப்போய் மறையும் எல்லை
விரியிருள் எழினி நீக்கி விசும்பெனும் அரங்கு தன்னில்
கரைகடல் மூழவ மார்ப்பக் கதிரெனும் கைகள் வட்டித்து
எரிகதிர் என்னுங் கூத்தன் ஆடுவான் எழுந்து போந்தான்." (வீரசோழியம்)

(அரும்பதம்): மதியம் - சந்திரன்: எழினி - திரைச்சீலை: விசும்பு - வானம்: கரைகடல் - சத்தஞ் செய்யும் கடல்: முழவம் - மத்தளம்: கதிர் - ஒளிக்கதிர்: வட்டித்து - சுழற்றி: எரிகதிர் - சூரியன்: ஆடுவான் - ஆடும்பொருட்டு)

(அ) இப்பாடலில் புலவர் புலப்படுத்த விரும்பும் காட்சி யாது?

(ஆ) (1) இரவில் ஆடிய கூத்தன் யார்? (2) அவன் ஆடிய களம் எது?
(3) மறையும் எல்லை என்பதனாற் புலப்படும் காலம் எது?
(4) "மறையும் எல்லை" என்னுந் தொடரைக் கொண்டு இங்குக் கூறப்படுஞ் சந்திரன் பிறைச்சந்திரனா, பூரண சந்திரனா? ஏன்?

(இ) (1) மதியம் மறையும் எல்லையில் எழுந்து வந்த கூத்தன் யார்?
(2) அவனது ஆடுகளம் எது? (3) அவன் நீக்கிய திரை எது?
(4) அவனது கூத்துக்கு முழவமாய் அமைந்தது எது? (5) அவன் எவ்வாறு கூத்தாடினான்?

(ஈ) புலவர் தாம் புலப்படுத்த விரும்பிய காட்சியை எத்தகைய முறையைக் கையாண்டு காட்டுகிறார்?

(உ) இப்பாடலில் நீர் காணும் காட்சியை விபரித்து சிறுச்சிறு வசனமாக உமது வசன நடையில் எழுதுக.

4. பின்வரும் சோடிச்சொற்கள் ஒவ்வொன்றையும் வைத்து வாக்கியம் எழுதுங்கள்.

(அ) தொண்டு - தொன்று (ஆ) கணம் - கனம் (இ) விலங்கு - விளங்கு
(ஈ) விழைவு - விளைவு (உ) குரங்கு - குறங்கு (ஊ) குரவர் - குறவர்

5. தாய் தன்மகளை விளித்து அவள் அந்த ஏழையை ஏன் துன்புறுத்துகிறாள் என்றும் ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்பதை அவள் அறியாளா என்றும் கேட்டாள்.

(அ) இதில் பிறர் கூற்றாய் அமைந்த பகுதியைத் தன்கூற்றாக்கிப் பந்தியை எழுதுக.
(ஆ) நீர் எழுதிய பகுதிக்கு ஏற்ற நிறுத்தக் குறி இடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம்: 2

## செயல்: 4
## பகுதி: 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்
   1. "வாழ்க்கையின் மூன்று படிகள்" என்னும் கட்டுரையின் ஆசிரியர் சுயநலக்காரன் என்பதற்குக் கூறும் பொருள்,
      (1) பிறருக்கு உதவி செய்யாதவன் (2) பிறர் பொருளை விரும்பாதவன்
      (3) தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பவன் (4) பிறருக்குத் தீமை செய்யாதவன்

   2. திருவள்ளுவர் கூறிய இரண்டாவது உபதேசம்
      (1) சுயநலமுள்ளவனாய் இரு (2) வறியவர் பசியை மாற்று
      (3) பொறாமை கொள்ளாதிரு (4) மனத்தை ஒருநிலைப்படுத்தித் தவம்செய்

   3. முனிவர்கள் தவஞ் செய்வதற்குக் கட்டுரையாசிரியர் கூறும் காரணம்
      (1) முத்தியின்பம் பெறுதல் (2) வளமான வாழ்வு வாழ்தல்
      (3) பொறாமையைப் போக்குதல் (4) பெரும் புகழ் பெறுதல்

   4. ஆபுத்திரன் கதையைக் கூறும் நூல்
      (1) மணிமேகலை (2) சிலப்பதிகாரம் (3) சிந்தாமணி (4) வளையாபதி

   5. ஈயாப்பத்தன் வீட்டில் எறும்பு ஊராமைக்குக் காரணம்
      (1) எறும்பு ஊராது மருந்து தெளித்தமை (2) எறும்பு எடுக்கத்தக்க பொருள் இல்லாமை
      (3) வீடு மிகவும் சுத்தமாய் இருந்தமை (4) எறும்பின் உணவு சிந்திச் சிதறிக் கிடவாமை

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.
   6. அவன் தனது சம்பாத்தியத்தை வீண் செலவு செய்தான் - சம்பாத்தியம்
      (1) முன்னோர் வழிவந்த பொருள் (2) சீதனமாய் வந்த பொருள்
      (3) தானே தேடிய பொருள் (4) நன்கொடையாய் வந்த பொருள்

   7. மனத்தின்கண் உள்ள மாசைப் போக்கியவனே உத்தமன் - மாசு என்பதன் ஒத்த கருத்துச் சொல்
      (1) துன்பம் (2) ஆசை (3) நோய் (4) குற்றம்

   8. இந்திரன் இன்னல் இலம்பாட்டினால் இன்னல் அடைந்தான் - இலம்பாடு என்பதன் ஒத்த கருத்துச் சொல்
      (1) ஒருவகை நோய் (2) வறுமை (3) பட்டினி (4) அயலார்

   9. வீமன் ஆவேசங் கொண்டு கதைமேற் கைவைத்தான் - ஆவேசம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
      (1) கோபம் (2) துயரம் (3) பணிவு (4) சாந்தம்

   10. நாட்டிலுள்ள இனங்களுக்கிடையே சமன்பாடு நிலவுதல் வேண்டும் சமன்பாடு என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்
      (1) ஒற்றுமை (2) முரண்பாடு (3) பெரும்பாடு (4) சீர்குலைவு

3. இடைவெளியை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.
   11. அண்மையில் பூரண சந்திர........................ நிகழ்ந்தது.
      (1) கிராணம் (2) கிரணம் (3) கிரகணம் (4) கிறாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ............................... கறிக்கு மணமும் குணமும் அளிக்கிறது.
(1) கருவேப்பிலை (2) கருவப்பிலை (3) கரிவேப்பிலை (4) கறிவேப்பிலை

13. மகாவலிகங்கையில் விக்டோரியா ........................ உண்டு.
(1) நீர்விட்சி (2) நீர்விழ்ச்சி (3) நீர்வீட்சி (4) நீர்வீழ்ச்சி

4. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

14. கோள்கள் நிற்கும் நிலைகளை ஆராய்ந்து முக்காலப் பயன்களையும் கூறுவோன்.
(1) சோதிடன் (2) குருக்கள் (3) தீர்க்கதரிசி (4) வானியலாளர்

15. பிற்காலத் தேவைக்காகச் சம்பாதித்துச் சேமிக்கப்படும் செல்வம்.
(1) தாயகம் (2) சம்பாத்தியம் (3) சேமநிதி (4) திரவியம்

16. விரும்பியவற்றை வழங்கும் தேவலோகப்பசு
(1) கோமாதா (2) காமதேனு (3) புனிற்றா (4) சேயா

5. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

17. "தவஞ் செய்வார்........." என்னும் குறளைப் படித்தபோது பல எண்ணங்கள் தலைதூக்கின. தலைதூக்கல் என்னும் மரபுத்தொடரின் பொருள்
(1) தலைநிமிர்தல் (2) செருக்கடைதல் (3) கலத்தல் (4) தோன்றுதல்

18. கடை மாணாக்கருக்கு கல்வி கற்பிப்பது.................. மிகக்கஷ்டமான காரியம். இடைவெளிக்குப் பொருத்தமான உவமைத்தொடர்
(1) புறக்குடத்தில் வார்த்த நீர்போல (2) கல்லில் நார் உரிப்பதுபோல
(3) மணலை கயிறாகத் திரிப்பது போல (4) குளிக்கப் போய்ச் சேறு பூசினதுபோல

19. எத்தகைய பொழுதுபோக்குகளில் ஈடுபட்டாலும் தன்தன் கருமத்திற்கண்ணாய் இருத்தல் வேண்டும் இப் பொருளைப் புலப்படுத்தும் பழமொழி
(1) ஆங்காலம் ஆகும் போங்காலம் போகும் (2) ஆறின கஞ்சி பழங்கஞ்சி
(3) தனக்குக் கண்டு தானம் வழங்கு (4) ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிரு

6. சரியான விடையின் கீழ் கீறிடுக.

20. தமிழிலுள்ள முதலெழுத்துகளின் தொகை
(1) 30 (2) 247 (3) 18 (4) 126

21. பின்வருவனவற்றில் புறச்சுட்டாய் அமைந்த சொல்
(1) இது (2) அவை (3) அம்மான் (4) அவள்

22. மொழி முதலிலும் இறுதியிலும் வரும் வினாவெழுத்து
(1) எ (2) யா (3) ஒ (4) ஏ

23. ஒலிமயக்கம் விளைவிக்கும் எழுத்துக்கள் அல்லாதவை
(1) ப,வ (2) ல,ள (3) ழ,ள (4) ர,ற

24. முற்றியலுகரம் அல்லாத உகரம் இறுதியில் அமைந்த சொல்
(1) தேய்வு (2) நாகு (3) ஏழு (4) நெல்லு

25. பின்வருவனவற்றில் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
(1) மார்பு (2) காசு (3) உழுந்து (4) முயிறு

26. மொழியிறுதியில் வராத மெய்யெழுத்துக் கூட்டம்
(1) ல்,வ்,ய் (2) க்,ச்,த் (3) ண்,ன்,ம் (4) ர்,ல்,வ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. மொழியிடையில் மூன்று மெய்கள் மயங்கி வந்தமைக்கு உதாரணம்
(1) பயிற்று (2) அண்ணம் (3) வேட்கை (4) காய்ச்சல்

28. மொழியிடையில் இரட்டித்தன்றி வேறு மெய்களோடு சேர்ந்து வராத எழுத்துக்கூட்டம்
(1) க்,ச்,த்,ப் (2) ங்,ஞ்,ண்,ன் (3) ய்,ர்,ல்,ழ் (4) ம்,ய்,ல்,ழ்

29. பின்வருவனவற்றில் வந்த போலி எழுத்துக் கொண்ட சொல்
(1) மஞ்ஞை (2) மஞ்சு (3) சாம்பர் (4) ஐயர்

30. லஷம் என்பதைத் தமிழ் நடைப்படுத்தினால் வருவது
(1) இலக்கம் (2) லட்சம் (3) இலட்சம் (4) லக்கம்

# பகுதி 11

1. ஒழுங்கின்றி அமைந்துள்ள பின்வரும் வாக்கியங்களை ஒழுங்காக்கிக் கருத்துத் தொடர்புள்ள ஒரு பந்தியாக்கி எழுதுக.

 1. (அ) பகலவன் ஒளியால் இதழ் விரிந்து இலங்கிய ஒரு செந்தாமரை மலரிலே வெள்ளை அன்னமொன்று இனிதமர்ந்திருந்தது. (ஆ) அப்போது அந்தப் பொய்கையிலுள்ள செந்தாமரை மலர்கள் மலர்ந்தன. (இ) நுகர்ந்த அவ்வன்னம் தெள்ளிய திரைகள் தாலாட்டக் கமலப் பள்ளியில் இனிது துயின்றது. (ஈ) நீலத்திரை விரித்த வானத்திலே கதிரவன், ஒளிவீசி எழுந்தான். (உ) அவ்வண்ணம் காலைப்பொழுதில் வீசிய இளங்காற்றின் இனிமையை நுகர்ந்தது. (ஊ) அவற்றிலே கள்ளுண்டு களிக்கும் கருவண்டுகள் மலர்களைச் சுற்றிச் சுழன்று இசை பாடின. முதல்வாக்கியம் (ஈ).

 11. (அ) அந்தப் பிள்ளையை அவன் கண்ணாற் பார்க்கிறதுமில்லை: கையால் தொடுகிறதுமில்லை. (ஆ) மூத்தபிள்ளை நன்மை செய்தாலும் அது தகப்பனுக்குத் தீமையாகத் தோன்றும். (இ) அவனுக்கு இரண்டு புத்திரர்கள். (ஈ) மூத்தபிள்ளை அவனுக்கு வேம்பாகவும் இளையபிள்ளை அவனுக்கு கரும்பாகவும் ஆகிவிட்டார்கள். (உ) சில காலத்துக்கு முன் தஞ்சை நகரத்திலே சுப்பையன் என்பவன் ஒருவன் இருந்தான். (ஊ) இளையபிள்ளை செய்கின்ற தீமையெல்லாம் நன்மையாகத் தோன்றும். (எ) அவர்களில் மூத்தவனுடைய சாதக பலன் தகப்பனுக்கு ஆகாதென்று சாதகத்திற் குறிக்கப்பட்டிருந்தபடியால் அவனைத் தகப்பன் சத்துரு பாவமாக எண்ணத் தலைப்பட்டான். முதல்வாக்கியம் (உ)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

 (அ) தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றும்
 துன்னற்க தீவினைப் பால்" இக் குறளின் கருத்தை விளக்கமாக எழுதுக.

 (ஆ) ஈயாப்பத்தன் கதையைச் சுருக்கமாக எழுதுக. அக்கதையின் உட்பொருள் யாதென எண்ணுகிறீர்.

 (இ) திருவள்ளுவர் கூறிய மூன்று உபதேசங்கள் எவையென ஆசிரியர் கூறுகிறார்? ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

3. பின்வரும் பாடல்களைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

 (1) "தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
 தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
 நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
 அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
 மன்னர்க் கிருக்க நிழலா கும்மே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) "தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே" (வெற்றி வேற்கை)

(அரும்பதம்; சிறுபழத் தொருவிதை - சிறிய பழத்திலுள்ள பன்னூறு சிறிய விதைகளின் ஒருவிதை; தெண்ணீர் - தெளிந்த நீர்; கயம் - குளம்; சினை - முட்டை; நுண்ணியது - மிகச் சிறியது: அண்ணல் - பெருமை: அணி - அழகு: புரவி - குதிரை, ஆள் - காவலாள்; யானை, தேர், குதிரை, காலாள் என்பன நால்வகைப் படைகள்; தேம் - இனிமை)

(அ) (1) ஆலம் பழத்தின் ஒரு விதையின் சிறிய அளவுக்கு ஒப்பிடப்பட்ட பொருள் என்ன?
(2) 'சிறுமீன் சினை' என்பதால், மேலும் புலனாவது யாது?

(ஆ) (1) நுண்ணிய ஒரு விதை முளைத்து வளர்ந்து மரமாகித் தரும் நிழலின் பேரளவு எவ்வாறு காட்டப்படுகிறது? (2) சிறுவிதை பெருநிழல் தருகிறது எனக் கொண்டால் முதலாம் பாடலில் மறைந்திருக்கும் குறிப்புப் பொருள் யாதாய் இருக்கலாம்?

(இ) (1) ஆலம்பழத்தின் ஒரு விதையோடு பனம்பழத்தின் ஒரு விதையை ஒப்பிட்டால் நீர் உணர்வது யாது? பனை உயர்ந்து "வளம் பெற வளரினும்" எனக் கூறப்பட்ட காரணம் யாதாய் இருக்கலாம்? (3) "ஒருவர்க் கிருக்க நிழலாகாது" என்பதன் மூலம் பனைமர நிழல் பற்றி என்ன அறிகிறீர்?

(ஈ) பனம் விதை; அது தந்த நிழல் - இவையிரண்டையும் இணைத்துப் பார்க்கும் போது இரண்டாம் பாடலில் மறைந்துள்ள குறிப்புப் பொருள் யாதாய் இருக்கலாம்?

(உ) இரு பாடல்களின் குறிப்புப் பொருளையும் நோக்கும்போது புலவர் இரசிகர்களுக்குப் புலப்படுத்த விரும்பிய கருத்து யாது?

4. பின்வரும் சோடிச் சொற்களின் பொருள் விளங்குமாறு ஒவ்வொரு சொல்லையும் வைத்து வாக்கியம் எழுதுக.
(1) கிலி, கிளி (2) மனை, மணை (3) நிருத்தம், நிறுத்தம் (4) கிழவி, கிளவி

## பாடம்: 3 செயல்: 5

## பகுதி: 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. விமானத்திலுள்ள நூற்றுக்கணக்கான பொறிகள் உறுதிப்படுத்துவனவற்றுள் பொருத்தமற்றது,
(1) விமானத்தின் பாதுகாப்பு (2) உணவு விநியோகம்
(3) ஓட்டத்தின் பாதுகாப்பு (4) தானியங்கிகளின் செயற்பாடு

2. பறவைகள் பெற்றுள்ள உயர்வான இசைவாக்கம் எனக் கருதப்படுவது.
(1) சின்னஞ்சிறிய பொருளை அறிதல் (2) கோள்களின் நிலையை அறிதல்
(3) நிறவேறுபாடுகளை உணர்தல்
(4) சின்னஞ்சிறிய பொருளையும் நிற வேறுபாடுகளையும் உணர்தல்

3. ஆந்தை தவிர்ந்த பறவைகள் பக்கவாட்டில் எவ்வாறு பார்க்கின்றன?
(1) இரு கண்களாலும் பார்க்கின்றன (2) தலையைத் திருப்பிப் பார்க்கின்றன
(3) தனித்தனிக் கண்களால் பாாக்கின்றன (4) உடலை வளைத்துப் பார்க்கின்றன

4. பறவைகள் தெளிவாக அறியமுடியாத ஒரு நிறம்
(1) சிவப்பு (2) நீலம் (3) மஞ்சள் (4) பச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பறவைகளின் இசைவாக்கம் என்னும் கட்டுரையை எழுதியவர்
(1) க. சச்சிதானந்தன் (2) பொ. நித்தியானந்தன்
(3) ஏ.எம்.ஏ அஸிஸ் (4) மறைமலையடிகள்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்.

6. சிறிய பொருள்களின் சாயையைக் கூடப் பறவைகள் அறியும் - சாயை என்பதன் ஒத்த கருத்துச்சொல்
(1) சாய்வு (2) நிறம் (3) நிழல் (4) அசைவு

7. பறவைகள் எந்நேரமும் உணவில் வேட்கை கொண்டிருக்கும் - வேட்கை என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) வெறுப்பு (2) பெருவிருப்பு (3) கோபம் (4) வேகம்

8. வாணியின் நிருத்தத்தை கண்டு பாராட்டாதவர் இல்லை - நிருத்தம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) நாடகம் (2) பேச்சு (3) திறமை (4) நடனம்

9. வளிமண்டலத்தின் தட்பத்தையும் பறவைகள் அறியும் - தட்பம் என்பதன் எதிர் கருத்துச் சொல்
(1) வெப்பம் (2) நுட்பம் (3) குளிர்ச்சி (4) வெட்பம்

10. விமானத்தின் முன்னறையில் பல நவீனமான பொறிகள் உண்டு - நவீனம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
(1) புதுமை (2) குற்றம் (3) புராதனம் (4) அழிவு

3. பின்வரும் முற்பகுதிக்கேற்ற பிற்பகுதியைத் தெரிக

11. அந்தக் காட்சியைக் கண்டிருந்தால்
(1) நீ வியப்பு அடைவாய் (2) நீ வியப்பு அடைந்தாய்
(3) நீ வியப்பு அடைகிறாய் (4) நீ வியப்பு அடைந்திருப்பாய்.

12. நாளைக்கு நான் அவனிடம் செல்லும்போது,
(1) அவன் நிச்சயமாக விளையாடினான் (2) நிச்சயமாக விளையாடுகிறான்
(3) நிச்சயமாக விளையாடிக்கொண்டிருப்பான் (4) நிச்சயமாக விளையாடி விட்டான்

13. அவன் பாடிய பாடல்கள்,
(1) இன்பமூட்டுவதாய் இருந்தது (2) இன்பமூட்டுவனவாய் இருந்தன
(3) இன்பமூட்டுவதாய் இருந்தன (4) இன்பமூட்டுவனவாய் இருந்தது

4. பின்வருந் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

14. விமானத்தை விண்வெளியில் செலுத்துபவன்
(1) சாரதி (2) வலவன் (3) பாகன் (4) இயக்குநன்

15. விமானம், கப்பல் முதலியவற்றைக் குறித்த திசைக்குத் திருப்புங்கருவி
(1) சுக்கான் (2) சுங்கான் (3) நங்கூரம் (4) அணியம்

16. மிகச்சிறிய பொருளையும் பார்க்கக்கூடிய சக்திவாய்ந்த கண்ணாடி,
(1) தொலைக்காட்டி (2) குழிவாடி (3) நுணுக்குக்காட்டி (4) குவிவாடி

5. இடைவெளியில் நிரப்பத்தக்க சொல்லைத் தெரிக.

17. யானைக்குப் பாகன் போலக் கப்பலுக்கு.....
(1) வலவன் (2) சாரதி (3) கண்காணி (4) மீகாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஆட்டின் இளையது குட்டிபோலச் சிங்கத்தின் இளையது.....
(1) பிள்ளை (2) குருளை (3) கன்று (4) போத்து

19. மாட்டின் மலம் சாணம் போலக் கழுதையின் மலம்......
(1) பிழுக்கை (2) இலத்தி (3) விட்டை (4) எச்சம்

6. சரியான விடையைத் தெரிந்து கீறிடுக.

20. ஓரெழுத்தொரு மொழியாய் அமைந்த சொல்
(1) சோ (2) கோ (3) வோ (4) மோ

21. பெயர்ப் பகாப்பதமாய் மாத்திரம் வந்த சொல்,
(1) பல் (2) செல் (3) கொல் (4) நில்

22. உரிப்பகாப்பதமாய் வந்த சொல்
(1) இனி (2) நனி (3) குனி (4) பனி

23. சொல்நிலையாற் பகுபதமாயும் பொருள் நிலையாற் பகாப்பதமாயும் அமைந்த சொல்,
(1) காடு (2) செம்மை (3) ஓடுவான் (4) காலம்

24. பெயர்ப் பகாப்பதமாயும் வினைப் பகாப்பதமாயும் வரும் சொல்,
(1) மல் (2) வெல் (3) ஆடு (4) ஆணி

25. மூன்று பகுபத வுறுப்புக் கொண்டு முடிந்த சொல்,
(1) படித்தான் (2) ஆடினாள் (3) நடந்தான் (4) அலைந்தனர்

26. பெயரடியாகப் பிறந்த தெரிநிலை வினைப்பகுபதம்
(1) கதைத்தான் (2) பாடினாள் (3) போன்றாள் (4) மாண்டார்

27. பகுபதத்தின் பகுதியாய் அமைவது,
(1) பெயர்ப்பதம் (2) வினைப்பதம் (3) இடைப்பதம் (4) பகாப்பதம்

28. பின்வருவனவற்றில் காலங்காட்டும் தொழிற்பெயராய் அமையத்தக்க சொல்,
(1) நடந்தது (2) நடந்தான் (3) நடந்து (4) நடந்த

29. காலங்காட்டாத இடைநிலை பெற்று வந்த சொல்,
(1) கற்றார் (2) கலைஞன் (3) நடித்தான் (4) ஆடினார்

30. பெயராயும் குறிப்பு வினை முற்றாயும் வரத்தக்க சொல்,
(1) பெரிய (2) இலங்கை (3) பெரியள் (4) ஆடினாள்

## பகுதி 11

1. பின்வருவன ஒவ்வொன்றையும் பற்றி ஒவ்வொன்றும் 50 சொற்கள் கொண்ட இரு பந்தி எழுதுக. (ஒவ்வொரு பந்தியும் கருத்தொழுங்குடையதாய் இருத்தல் வேண்டும். இரு பந்திகளுக்குமிடையில இயையும் இருத்தல் வேண்டும்.)

(அ) திருமணவீடொன்றில் நீர் கண்ட (1) முகப்பு அலங்காரம் (2) பந்தல் அலங்காரம் (வருணனை முறை)

(ஆ) ஒளி நேர்கோட்டிற் செல்லும் என்பதைக் காட்டும் இரு பரிசோதனை விளக்கமுறை (படங்கள் தேவையில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) பறவைகளின் உணர்வு அறியுந் தொகுதியும் நரம்புத் தொகுதியும் செய்யும் வியத்தகு செயல்கள் எவை?

(ஆ) பருந்து இரைதேடும் போது நிகழுஞ் செயற்பாடுகளைப் படிமுறையாய் எழுதுக.

(இ) பறவைகளினது கண்பார்வையின் சிறப்பியல்புகளைத் தொகுத்தெழுதுக.

3. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"நாராய் நாராய்! செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த்து இருக்கும் எம்மனை வியைக்கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே"

(சத்திமுத்தப் புலவர்)

(குறும்பதம்: பவளம் - பவளம் போலச் சிவந்த: தென்திசைக் குமரிஆடி - தெற்கேயுள்ள கன்னியாகுமரியில் நீராடி: ஏகுவீர் - செல்வீர்: நனைசுவர்க் கூரை - மழையில் நனைகின்ற சுவரையுடைய கூரைவீடு: பல்லிபாடு - பல்லி சொற்பலன்: எம்கோன் - எமது அரசன்: மாறன் வழுதி பாண்டியன்; கூடல் - மதுரை; வாடை - குளிர்காற்று; காலது கொண்டு மேலது தழீஇ காலினாலே அரையின் மேற்பாகத்தைப் பொத்திக் கொண்டு (குந்திக் கொண்டு); பேழை - பெட்டி; உயிர்க்கும் - மூச்சுவிடும்)

(அ) (1) நாரையின் சொண்டுக்குக் கூறப்பட்ட உவமை என்ன? (2) அதன் பொருத்தப்பாட்டினை விளக்குக. (3) நாரை பற்றிய வருணனையைக் கூறுக.

(ஆ) (1) புலவரின் வீடு எப்படிப்பட்டது? (2) அவ்வீட்டில் இருந்து, "பல்லிபாடு பார்த்திருக்கும் மனைவி" என்பதன் மூலம் அந்த மனைவியின் மனநிலை எப்படிப்பட்டது?

(இ) (1) புலவர் பாண்டியனைக் காண மதுரைக்குச் சென்ற காரணம் யாதாயிருக்கலாம்? (2) எப்பருவகாலத்தில் மதுரைக்குச் சென்றார்? (3) "ஆடையின்றி" என்றதொடர் மூலம் நீர் உணர்வது யாது? (4) அதனால் புலவர் குளிரைப் போக்கக் கையாண்ட முயற்சிகள் எவை? (5) 'பேழையுள் இருக்கும் பாம்பு என உயிர்க்கும்' என்பதனால் புலவரின் மூச்சு எத்தகையது? (6) அவர் அவ்வாறு மூச்சு விடக் காரணம் என்ன?

(ஈ) (1) இப்பாடலிற் புலவரின் வறுமை நிலையைப் புலப்படுத்தும் தொடர்கள் எவை? (2) அவற்றை விளக்கி புலவரின் வறுமை நிலையை வெளிப்படுத்துக.

(உ) பாண்டியன் மாறுவேடம் பூண்டு வரும்போது புலவரின் இப்பாடலைக் கேட்கிறான். அப்போது அவன் மனநிலை எவ்வாறிருக்கும்?

(ஊ) இப்பாடலின் கருத்தை உமது வசனநடையில் எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின்வரும் வாக்கியங்களை ஒரு வினைமுற்றுப் பயனிலை கொண்ட வாக்கியமாக ஏற்றவாறு இணைத்து எழுதுக.

(அ) அது ஒரு உயர்ந்த மலை (ஆ) அதன் உச்சியில் அடர்ந்த காடு உண்டு (இ) அந்தக்காடு கருமுகிற் கூட்டத்தைத் தடுத்து நிறுத்தும் தன்மையது (ஈ) அதனால் அந்த மலையில் நித்த நித்தம் மழை பொழியும். (உ) அங்கு பல பல ஆறுகள் உற்பத்தியாகி ஓடும்.

## பாடம்: 3 செயல்: 6

## பகுதி: 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்.

1. பறவைகளின் நரம்புத் தொகுதியில் அடங்கியிருக்கும் வியத்தகு அமிசம்,
(1) குருதிச்சுற்றோட்டம் (2) பறவைக்கு வழுவும் வனப்பும் அளித்தல்
(3) நுண்ணிய மிருதுவான தசைத்துணிக்கை (4) ஆயிரக் கணக்கான பொறியுணர்வுகள்

2. பறவைகளின் தனித்தனிப் பார்வையில் உள்ள தன்மைகள் அல்லாதவை:
(1) நெடுந்தொலைவைப் பார்த்தல் (2) விரிந்த வட்டத்தைப் பார்த்தல்
(3) செறிந்த இருளில் பொருளைப் பார்த்தல் (4) தலையைத் திருப்பாது பின்பக்கம் பார்த்தல்

3. பறவைகள் விரும்பும் வண்ணங்கள் அல்லாதது,
(1) கறுப்பு (2) சிவப்பு (3) மஞ்சள் (4) செம்மஞ்சள்

4. ஒளிநிற மாலையில் உள்ள கீழ்க்கதிரின் நிறம்,
(1) மஞ்சள் (2) ஊதா (3) பச்சை (4) சிவப்பு

5. சத்திமுத்தப்புலவரை ஆசிரியர் அறிவியற் புலவர் எனக் கூறக் காரணம்,
(1) கல்வியறிவில் மிக்கவர் (2) பறவைகளின் பார்வை இயல்பை அறிந்தவர்
(3) கருத்தாழம் மிக்க பாடலைப் பாடியவர் (4) நாரைகளைத் தூதுவிட்டவர்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

6. நண்பனின் வரவால் என் படிப்பில் குறுக்கீடு உண்டானது - குறுக்கீடு என்பதன் ஒத்த கருத்துச்சொல்
(1) மாற்றம் (2) தடை (3) வில்லங்கம் (4) குழப்பம்

7. விமான ஓட்டியின் அறையிற் பலவகை மானிகள் உண்டு - மானி என்றால்
(1) மானம் உள்ளவன் (2) இயந்திரம் (3) அளவு கருவி (4) ஆளிகள்

8. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை மீகாமன் இல்லால் கப்பல் போன்றது, குறிக்கோள் என்றால்
(1) இலட்சியம் (2) பொருள் (3) கல்வியறிவு (4) அனுபவ அறிவு

9. பால் நிலவு பொழியும் சந்திரனிலும் களங்கம் உண்டு - களங்கம் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்
(1) கறை (2) மழுக்கம் (3) வெண்மை (4) தூய்மை

10. "மாபிள்" பதித்த மண்டபம் வழவழப்பாய் இருந்தது - வழவழப்பு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) மேடுபள்ளம் (2) கரடுமுரடு (3) ஒப்பசெப்பம் (4) குன்றும்குழியும்

3. இடைவெளியில் நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

11. சிதம்பரன் ...... ரூபாவுக்குக் கைக்கடிகாரம் வாங்கினான்,
(1) நாநூறு (2) நால்நூறு (3) நானூறு (4) நாணூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சேந்தன் என்னிடம்.......ரூபா வாங்கினான்,
(1) முந்நூறு (2) முன்னூறு (3) முண்ணூறு (4) முந்னூறு

13. காவியுடையணிந்த......... ஒருவர் எங்கள் வீட்டுக்கு வந்தார்,
(1) சன்னாசி (2) சந்நாசி (3) சன்னியாசி (4) சந்நியாசி

4. பொருத்தமான விடையின் கீழ் கீறிடுங்கள்

14. அதிபர் புதிய ஆசிரியரோடு பேசி ஆழம் பார்த்தார் - ஆழம்பார்த்தல் என்னும் மரபுத் தொடரின் பொருள்
(1) அளவெடுத்தல் (2) பரிசோதனை செய்தல்
(3) அறிவாற்றலை அளத்தல் (4) நட்புடன் அளவளாவுதல்

15. ஒரு நாட்டின் ஒற்றுமையற்ற, குழப்பநிலை அந்நியர்க்கு வாய்ப்பாயிருக்கும் - இக் கருத்தை விளக்கும் பழமொழி,
(1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
(2) பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்
(3) ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
(4) எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்

16. செய்யவேண்டிய காலத்தில் ஒரு தொழிலைச் செய்யாது தாமதித்தால் நன்றன்று - இக் கருத்தை விளக்கும் பழமொழி
(1) ஆங்காலம் ஆகும் போங்காலம் போகும் (2) ஆறினகஞ்சி பழங்கஞ்சி
(3) ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறானா?
(4) அறக்கப் பறக்கப் பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லை

5. பின்வரும் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக

17. ஒருநூலின் குற்றங் குணங்களைச் சீர்தூக்கி மதிப்பீடு செய்தல்
(1) கண்டம் (2) விதப்புரை (3) மதிப்புரை (4) திறனாய்வு

18. நாடகம், நாட்டியம், நூல் முதலியவற்றை பலரும் அறியும்படி செய்தல்
(1) விமரிசனம் (2) வெள்ளோட்டம் (3) விண்ணப்பம் (4) அரங்கேற்றம்

19. கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதியும்,
(1) குறிஞ்சி (2) முல்லை (3) மருதம் (4) நெய்தல்

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

20. ஆறு பகுபதவுறுப்புக்களும் கொண்டு முடிந்த சொல்
(1) பாடினான் (2) உழுதான் (3) அலைந்தனன் (4) எழுதினன்

21. இடைச் சொல்லடியாகப் பிறந்த தெரிநிலை வினைப்பகுபதம்
(1) படபடத்தான் (2) கடைக்கணித்தான் (3) மற்றையான் (4) விழுந்தான்

22. பிறவினைப் பகுதியல்லாதது,
(1) படிப்பி (2) திருத்தி (3) எழும்பு (4) உருட்டு

23. பெரியன் என்னுஞ் சொல் குறிப்புவினை முற்றாய் வந்த வாக்கியம்,
(1) பெரியன் நேற்று வந்தான் (2) அவன் அறிவிற் பெரியவன்
(3) நான் பெரியனைக் கண்டேன் (4) பெரியனுக்குப் பொருள் கொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. வியங்கோள் வினை வகுதி அல்லாதது
(1) ஆள் (2) க (3) இய (4) இயர்

25. இறந்தகால இடைநிலை அல்லாதது,
(1) இன் (2) வ (3) த் (4) ட்

26. ஆண்டான் என்னுஞ் சொல்லின் பகுதி
(1) ஆண் (2) ஆண்டு (3) ஆளல் (4) ஆள்

27. பின்வருவனவற்றில் "இன்" இடைநிலை பெற்று வந்த சொல்,
(1) கூடினான் (2) கண்டாள் (3) கற்றான் (4) கூவியது

28. எதிர்மறையைக் காட்டும் இடைநிலை அல்லாதது,
(1) தல் (2) இல் (3) அல் (4) ஆ

29. பெயர்ப்பகுபதம் அல்லாதது,
(1) இந்தியன் (2) பொன்னி (3) ஓடின (4) ஆதிரையான்

30. கண்டான் என்பதன் பகுதி,
(1) கண் (2) காண் (3) கண்டு (4) கண்ட

## பகுதி 11

1. பின்வருவன ஒவ்வொன்றையும் பற்றி ஒவ்வொன்றும் 50 சொற்கள் கொண்டதாக இரு பந்தி எழுதுக.
(அ) (1) கொட்டும் மழையில் நான் நனைந்தபோது அடைந்த அனுபவம்
(2) என் நிலையைக் கண்ட என் அன்னையின் நிலை (தற்சார்பு முறையும் வருணனை முறையும்)

(ஆ) கோயில் திருவிழாவொன்றில் நிகழ்ந்த (1) வசந்த மண்டபப் பூசை
(2) சுவாமியின் உள்வீதித் திருவுலா (வருணனை முறை)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:
(அ) மனிதரின் கண்ணமைப்புக்கும் பறவைகளின் கண்ணமைப்புக்குமுள்ள ஒற்றுமை யாது? வேற்றுமை யாது?

(ஆ) விமானத்தின் முன்னறையையும் பறவைகளின் தலையையும் ஒப்பிட்டு ஆசிரியர் கூறும் கருத்துக்கள் எவை?

(இ) 1) பறவைகள் பறப்பதற்குரிய இசைவாக்கத்தைக் கொடுப்பவை எவை?
2) பறவைகளின் கண்களிலுள்ள இரு மையங்கள் எவை?

3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

கம்பர் ஓர் இராம பக்தர். ஆழ்வார்களின் அடித்தொண்டர். இராமாயணத்தைத் தமிழில் எழுத வேண்டும் என்று அவருடைய உள்ளம் நெடுநாட்களாக அவரைத் தூண்டி வந்தது. தமிழ் மக்களும் இராமாயணத்தைத் தமிழில் படித்து இன்புற விரும்பினர். எனவே, கம்பர் தம்முடைய உள்ளத்தையும் பிறருடைய கருத்தையும் இன்புறுத்தவேண்டி இராமாயணத்தைத் தமிழிற் பாடினார். தம்முடைய நூலுக்கு ஆதிகாவியமான வான்மீகியார் வட மொழியில் இயற்றிய இராமாயணமே முதனூல் என்று கம்பர் உடன்படுகிறார். ஆனால், முதனூற் கருத்தோடு, இன்றியமையாத நம்முடைய தமிழ் நாகரீகத்தையும் பிறவற்றையும் கலந்தும் வேண்டாதவற்றை நீக்கியும் செப்பஞ் செய்து கம்பர் காவியம் இயற்றியது அவருடைய பேரறிவை உள்ளங்கை நெல்லிக்கனி போல உணர்த்தி நிற்கிறது. இவ்வாறு கூட்டியும் குறைத்தும் திருத்தியமைத்தது அந்நூலைச் சிறந்த முதனூலாகச் செய்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) கம்பராமாயணத்தின் முதனூல் எது? இயற்றியவர் யார்? வழிநூல் எது? இயற்றியவர் யார்? எம்மொழியில் எழுந்தது?

(ஆ) கம்பர் இராமாயணம் பாடியமைக்குக் கூறப்படும் இரு காரணங்கள் எவை?

(இ) கம்பர் பேரறிஞர் என்பது எவ்வாறு புலப்படுகின்றது? கம்பர் தமது நூலை வழிநூலெனக் கூறியபோதிலும், அது முதனூல் என அறிஞர் கருதக் காரணம் என்ன?

(ஈ) இவ்வுரைப்பகுதியாசிரியர் புலப்படுத்த விரும்பும் பிரதான கருத்து யாது?

(உ) இவ்வுரைப்பகுதியின் கருத்தை 45 சொற்களில் சுருக்கி எழுதுக.

4. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

ஞாயிறு

"காதல் கொண்டனை போலு மண்மீதே கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே!
மாதர் பூமியும் நின்மிசைக் காதல் மண்டினாள் இதில் ஐயமொன் றில்லை
சோதிகண்டு முகத்தி லிவட்கே தோன்று கின்ற புதுநகை என்னே!
ஆதித்தாய் தந்தை நீவிர்: உமக்கே ஆயிரம் தரம் அஞ்சலி செய்வேன்"

(பாரதியார்)

(அ) 1) சூரியன் பூமிமீது காதல் கொண்டான் என்பது எவ்வாறு புலப்படுகிறது?
2) பூமியும் சூரியன் மீது காதல் கொண்டாள் என்பது எவ்வாறு புலப்படுகிறது?

(ஆ) 1) சூரியன் "கண் பிறழ்வின்றி நோக்குகிறான" - இச்சொல்லால் நீர் உணர்வது யாது?
2) பூமியும் சூரியன் மீது காதல் "மண்டினாள்" - இச்சொல்லால் நீர் உணர்வது யாது?

(இ) 1) ஆதித்தாய் யார்? 2) ஆதித் தந்தை யார்? 3) அவர்கள் எப்படி ஆதித்தாய் ஆதித் தந்தையாக முடியும்? 4) ஆயிரம் தரம் அஞ்சலி செய்யக் காரணம் யாதாயிருக்கலாம்?

(ஈ) சூரியனை முன்னிலைப்படுத்தி, இப்பாடலின் கருத்தை உமது வசனநடையில் எழுதுக.

(உ) இப்பாடலைப் படிக்கும் போது உமது மனத்திலெழும் உணர்ச்சிகளை எழுதுக.

## பாடம் : 4

## செயல் : 7

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. புதுமையைக் கண்மூடித்தனமாகச் சிலர் போற்றக் காரணம்,
(1) புதுமை எப்போதும் நன்மை தருதல் (2) நவநாகரீகத்தில் அனுபவம் இல்லாமை
(3) நவநாகரீகத்தின் தோற்றக் கவர்ச்சி (4) நூற்றுக்கு நூறு புதிய அம்சம் இருத்தல்

2. நவநாகரீகம் என்ற நோய்க்குக் காரணமாக ஆசிரியரால் கூறப்படாதது,
(1) அவசரப் பரபரப்பு (2) இருதயம் இன்னலுற்று இருத்தல்
(3) புத்தி நுணுக்கம் அளவிற்கு விஞ்சுதல் (4) சிந்தித்துச் செயற்படாமை

3. செங்குத்தான குன்றிலிருந்து வெகு வேகமாக ஓடிவரும் மோட்டார் கார் போன்றது,
(1) நன்றுந் தீதும் கலந்த நவநாகரீகத்தின் பரம்பல் (2) தடுக்க முடியாத சக்தி
(3) மனிதனிடமுள்ள மிகுந்த அறியாமை (4) மனத்தின் அவசரப் பரபரப்பு

4. மோட்டார்க் காரைத் தடுத்து நிறுத்தும் குரங்கு போன்றது,
(1) புதுமையை விரும்பும் மனிதன் (2) பழமையை விரும்பும் மனிதன்
(3) கண்மூடித்தனமாக புதுமையை விரும்புபவன் (4) ஆராயாது பழமையை விரும்புபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. "சீன தேசம் வரை சென்றாயினும் அறிவைப் பெறுக" எனக்கூறியவர்,
(1) அன்ரூஸ் (2) எம்.ரி. அக்பர் (3) முகம்மது நபி (ஸல்) (4) ஏ.எம்.ஏ. அஸிஸ்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக:

6. உண்மையான மார்க்கக் கொள்கைகளை அனுட்டித்து நடத்தல் முஸ்லீம்களின் கடன் - அனுட்டித்தல் என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்,
(1) அலட்சியம் செய்தல் (2) கடைப்பிடித்தல் (3) நோன்பு பிடித்தல் (4) ஏற்றுக்கொள்ளல்

7. "குர் ஆன்" கூறும் தத்துவங்களை அறிதல் வேண்டும் - தத்துவம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
(1) போதனை (2) சாதனை (3) உண்மை (4) உறுதிப்பாடு

8. கருவூலமான கல்வியை அலட்சியம் செய்தல் கூடாது - கருவூலம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
(1) சிறப்பு (2) மெய்ம்மை (3) உறுதுணை (4) பெருஞ்செல்வம்

9. எனது வியாபார முயற்சிக்குத் தந்தையார் அனுகூலமாய் இருந்தார் - அனுகூலம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) இடையூறு (2) பிரதிகூலம் (3) உதவி (4) குறுக்கீடு

10. போதனையால் மாத்திரம் அறிவு பூரணமாவதில்லை - போதனை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) ஒழுக்கம் (2) உபதேசம் (3) அனுபவம் (4) சாதனை

3. பின்வரும் முற்பகுதிக்குப் பொருத்தமான பிற்பகுதியைத் தெரிவு செய்க:

11. கிணற்று நீரெல்லாம்,
(1) கோடைக்காலத்தில் வற்றின (2) கோடைகாலத்தில் வற்றின
(3) கோடைக் காலத்தில் வற்றியது (4) கோடைகாலத்தில் வற்றியது

12. அறிவுக்குப் பொருத்தமான பழைமையும் புதுமையும் எமக்கு நன்மை,
(1) தருவதாய் அமைந்துள்ளது (2) தருவனவாய் அமைந்துள்ளது
(3) தருவதாய் அமைந்துள்ளன (4) தருவனவாய் அமைந்துள்ளன

13. நம்முடைய பிற்போக்குக்குக் காரணம்,
(1) உயர் கொள்கைகளைப் பின்பற்றாமையால் (2) உயர் கொள்கைகளைப் பின்பற்றாமை
(3) பின்பற்றாமையே காரணம் (4) உயர் கொள்கைகளைப் பின்பற்றாதிருத்தலால்

4. பொருத்தமான விடையைத் தெரிந்து கீறிடுக:

14. "குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்" என்பதன் கருத்துடைய பழமொழி,
(1) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
(2) அவள் பேர் கூந்தழலகி: அவள் தலை மொட்டை
(3) அல்லல் ஒரு காலம்: செல்வம் ஒரு காலம்
(4) ஆனைக்கொரு காலம்: பூனைக்கொரு காலம்

15. "நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு" என்னும் கருத்துடைய பழமொழி,
(1) துள்ளுகிற மாடு பொதி சுமக்கும் (2) வேலைக் கள்ளிக்குப் பிள்ளைப் பராக்கு
(3) கழுதை கெட்டாற் குட்டிச் சுவர் (4) மனம் உண்டானால் இடம் உண்டு

16. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்னும் கருத்துடைய பழமொழி
(1) விளையும் பயிரை முளையிலே தெரியும் (2) பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டாது
(3) செடியில் வணங்காததா மரத்தில் வணங்கும் (4) பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக:

17. அந்த குடும்பம் அந்த ஊரிலே நெடுங்காலம் ........................................ வாழ்ந்து வருகிறது.
(1) நாடோடியாக (2) அகதிகளாக
(3) வாழையடி வாழையாக (4) உல்லாசப் பயணியாக

18. .................................... மூடநம்பிக்கைகள் மண்மூடிப் போனால் அறிவுடைய சமுதாயம் மலரும்.
(1) நல்லறிவுள்ள (2) கண்மூடித்தனமான
(3) நிலைத்துநிற்கும் (4) ஏட்டிக்குப் போட்டியான

19. .................................... இறைவனை வணங்காவிட்டால் அதனாற் பயனில்லை.
(1) அன்பும் பண்புமாக (2) சீரும் சிறப்புமாக
(3) கண்ணுங் கருத்துமாக (4) பக்தி சிரத்தையாக

20. புணர்ச்சி எனப்படுவது........................................
(1) நிலைமொழியும் வருமொழியும் சேர்தல் (2) நிலைமொழியீற்றெழுத்துத் திரிதல்
(3) நிலைமொழியீற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்தல்
(4) வருமொழி முதலெழுத்துத் திரிதல்

21. நிலை மொழி எனப்படுவது....................................................
(1) வந்து சேரும் சொல் (2) முதலில் நிலைத்து நிற்கும் சொல்
(3) சேர்ந்து வரும் தொடர் மொழி (4) மாற்றமடையாத மொழி

22. இயல்புப் புணர்ச்சியாய் அமைந்த சொற்றொடர்.................................
(1) மரச்சோலை (2) பலாமரம் (3) பலாப்பழம் (4) பாற்செம்பு

23. விகாரப் புணர்ச்சி பற்றிய கூற்றுக்களில் பிழையானது,
(1) மெய்யும் உயிரும் சேர்தல் (2) எழுத்தோ சாரியையோ தோன்றுதல்
(3) ஓரெழுத்து இன்னோரெழுத்தாகத் திரிதல் (4) எழுத்துக்கள் கெடுதல்

24. கெடுதல் விகாரம் பெற்றுவந்த ஒரு சொற்றொடர்,
(1) மனக்கவலை (2) மணமலர் (3) பெருந்தலை (4) கண்ணீர்

25. குளக்கரை என்பதில் இடம்பெற்ற புணர்ச்சி
(1) தோன்றல் (2) கெடுதல் (3) திரிதல் (4) கெடுதலும் தோன்றலும்

26. பின்வருவனவற்றில் உயிர் முன் உயிர் புணர்ந்த சொல்லுக்கு உதாரணம்,
(1) கல்லெறி (2) கற்கோவில் (3) வேலையில்லை (4) மனநோய்

27. மெய் முன் மெய்புணர்ந்த சொல்லுக்கு உதாரணம்,
(1) பலவுயிர் (2) பற்பசை (3) உடலுயிர் (4) கல்லுளி

28. உடம்படுமெய் எவ்வகைப் புணர்ச்சியில் வரும்,
(1) உயிரோடு மெய்புணரும்போது (2) மெய்யோடு உயிர்புணரும்போது
(2) உயிரோடு உயிர்புணரும் போது (4) மெய்யோடு மெய்புணரும் போது

29. உடம்படு மெய்யாய் வரும் எழுத்துக்கள்,
(1) ப் , ம் (2) ண் , ன் (3) ந் , ட் (4) வ் , ய்

30. இன்று + நாள் - என்பதைச் சேர்த்தெழுதினால்,
(1) இந்நாள் (2) இன்றைநாள் (3) இன்றுநாள் (4) இற்றைநாள்



SRI KORAY SARAVANA BAVANANTHA ...
DATE ..........
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 11

1. பின்வருவனவற்றில் ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனி மூன்று பந்திகள் அமையுமாறு எழுதுக:

(அ) (1) வீட்டுக்கயலிலுள்ள சாக்கடை நிறைந்து வழிகிறது. (2) துர்நாற்றம் மூக்கைத் துளைக்கிறது (3) நுளம்புகள் பல்கிப் பெருகுகின்றன நீங்கள் படும் கஷ்டங்களை நகைச்சுவைக் கலப்புடன் வருணித்தெழுதுக:

(ஆ) (1) வீட்டுத் தோட்டம் என்றால் என்ன? (2) வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறை (3) அதனாற் பெறும் பயன்கள் - படிமுறை விளக்கம் அமைய எழுதுக:

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:

(அ) 1) பழமையை அறவே வெறுப்பவர்களின் மனப்பான்மை யாது?
2) அதற்கான காரணங்கள் எவையெனக் கட்டுரையாசிரியர் கூறுகிறார்?

(ஆ) 1) எம்.ரீ. அக்பர் பற்றி கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?
2) அவற்றிலிருந்து அவர் வாசகனுக்குப் புலப்படுத்த விரும்புவன யாவை?

(இ) 1) பழமை என்னும் விளக்கின் திரி எது? 2) நெய் எது?
3) தீபம் எது? 4) அதனால் அழிவது எது?

3. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

இரவின் வருகை

(1) "இந்திரநற் சாலவித்தை எதுவோவொன் (று) இழைக்க
விட்டதிரை எனத் திசைகள் எட்டுமிருள் விரிய
அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தரத் தாரகைகள்
அரியஇரக சியந்தமக்குள் அறைந்து நகைபுரிய"

(2) "என்புருகப் பிணைந்து அன்றில் இணைசிறிது பிரிய
ஏங்கிஉயிர் விடுவிப்பவர்போல் இடையிடையே கூவ
அன்புநிலை யாரறிவார் என்பனபோல் மரங்கள்
அலர்மலக் கண்ணீர்அருவி அகமுடைந்து தூவ"

(3) "விந்தைநடப் பதுதெரிக்க விளிப்பவரில் வாவல்
விரைந்தலைய மின்மினியும் விளக்கொடுப்பின் நாட
இந்தவகை அந்தியைமுன் ஏவியிர வென்னும்
இறைவியும் வந்திறுத்தனள் மற்றிளைஞர் உயிர் வாட"

(மனோன்மணியம் - சுந்தரம்பிள்ளை)

(அரும்பதம்: இழைக்க இட்டதிரை - செய்துகாட்ட இடப்பட்ட திரைச்சீலை விரிய - பரவ: சுந்தரத் தாரகை - அழகிய நட்சத்திரம்: அந்தரம் - வானம்: அறைந்து - பேசி: நகை - சிரிப்பு: என்புருகப் பிணைந்த அன்றில் - எலும்பும் உருகும் வண்ணம் ஒன்றையொன்று தழுவிய அன்றிற் பறவைகள்: இணை - சோடிப்பறவை: அன்புநிலை - அன்பின் தன்மை: அலர்மலர்க்கண் - அலர்ந்த மலராகிய கண்: அருவி - ஆறுபோல: அகம் - மனம்: தெரிக்க - தெரிவிக்க: விளிப்பவரில் - அழைப்பவரைப்போல: வாவல் - வெளவால்: இறைவி - தலைவி: வந்து இறுத்தனள் - வந்து சேர்ந்தாள்.

(அ) (1) திரைச்சீலை விடப்பட்ட காரணம் என்ன? (2) திரைச்சீலை போலப் பரந்தது எது? (3) இந்திரசால வித்தை என்றால் என்ன?

(ஆ) (1) சுந்தரத் தாரகையின் செயல்கள் எவை? (2) கண்சிமிட்டி இரகசியம் பேசுதல் என்பதால் நீர் அறிவது யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) "என்புருகப் பிணைந்த அன்றில்" என்பதன் மூலம் அவற்றின் அன்பு நிலை பற்றி நீர் உணர்வது யாது? (2) ஆண் பிரிந்தபோது பெண்ணின் கூவல் எவ்வாறிருந்தது? (3) அதன் வாயிலாக உணரக்கிடப்பது யாது? (4) அந்த அன்பு நிலை கண்ட மரங்களின் செயல் யாது? மலர்களின் கண்ணீர் (கள் + நீர்) எது?

(ஈ) (1) அங்கு நடக்கும் விந்தைகள் எவை? (2) அதைத் தெரிவிக்க ஆசிரியர் வெளவாலைத் தெரிந்தெடுக்கக் காரணம் என்ன? (3) வெளவாலுக்கு மின்மினி எவ்வாறு உதவியது? (4) இறைவியாகக் கூறப்படுவது எது? (5) அவ்வாறானால் அந்தியை யாராகக் கூறலாம்?

(உ) இப்பாடல் மூலம் நீர் காணும் காட்சியை விபரித்து சிறுச்சிறு வாக்கியமாக எமது வசனநடையில் எழுதுக.

4. தொலைக்காட்சியில் அல்லது வானொலியில் அல்லது பத்திரிகையில் வரும் விளம்பரங்களை அறிந்திருப்பீர்கள். அந்த விளம்பர முறையைப் பின்பற்றிப் பின்வரும் விடயம் குறித்து ஒரு விளம்பரம் எழுதுக:

உம்மை ஒரு சவர்க்காரத் தொழிற்சாலை முகாமையாளராகப் பாவித்து உமது தொழிற்சாலையிலே தயாரிக்கப்படும் சவர்க்கார விளம்பரம்.

## பாடம் : 4 செயல் : 8

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக:

1. நாகரீகத்தை வெறுப்போர் பற்றிய ஆசிரியரின் கூற்றுக்களிற் பிழையானது,
(1) அசையாமல் நிற்பது எனுங் கொள்கை (2) புதுமையில் நல்லனவற்றை வரவேற்றல்
(3) மார்க்கத்தைப் பக்கபலமாகக் கொள்ளல்
(4) பழமைக்கும் புதுமைக்கும் இணக்கம் காணாமை

2. உண்மையான இஸ்லாம் போதித்ததும் அனுட்டித்ததும்
(1) பழமையை முன்யோசனையின்றிப் பின்பற்றல்
(2) ஆங்கிலக் கல்வியை வெறுத்தல்
(3) புதுமையிலும் பழமையிலும் நல்லனவற்றை ஏற்றல்
(4) எங்கு சென்றும் கல்வியைப் பெறுதல்

3. பரிசுத்த குர் ஆனிற் கூறப்பட்டிருப்பது,
(1) சொந்தநலனோடு சமூகநலனையும் கவனி (2) சமூகத்தை ஆண்டவன் காப்பான்
(3) வெளியாரின் உதவியை எதிர்பார்ப்பாயாக (4) சமூக நிலை தானாக மாற்றமடையும்

4. இஸ்லாத்தின் விசேட சக்தி என ஸீ. எம். ஆன்ரூஸ் குறிப்பிடுவது,
(1) சமூகசேவையில் ஈடுபடும் சக்தி (2) பழமையை விடாப்பிடியாய் போற்றும் சக்தி
(3) புதிய அறிவைச் சேகரிக்கும் சக்தி (4) பிற்போக்குக் காரணங்களை விளக்கும் சக்தி

5. எம். ரீ. அக்பர் பற்றிய கூற்றுக்களிற் பிழையானது,
(1) ஆங்கிலக் கல்வியில் சிறந்து விளங்கியவர் (2) மார்க்க ஞானத்திற் சிறந்தவர்
(3) ஆண்டவனிடம் மிகுந்த பக்தி உடையவர் (4) பழமையை விடாப்பிடியாய் பின்பற்றுபவர்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக:

6. இறைவன் ஞான சொரூபியாய் விளங்குகிறார்-ஞான சொரூபி என்றால்,
(1) அருட்கடல் (2) அறிவுரு (3) கருணைவடிவம் (4) அறிவுச்சுடர்

7. அம்பலத்தில் ஆனந்த தாண்டவம் புரிகிறார் நடராஜப் பெருமான் -அம்பலம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) அரங்கு (2) மடம் (3) சபை (4) வெளியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தல் கூடாது - இரண்டகம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) பொறாமை (2) நன்மை (3) துரோகம் (4) துன்பம்

9. கல்வித்திணைக்களத்திலே தற்காலிக நியமனம் பெற்றான்- தற்காலிகம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) நிரந்தரம் (2) எழுதுவினைஞர் (3) காவற்காரன் (4) நாட்கூலி

10. அவர் அகழ்வாராய்ச்சியில் துறைபோன நிபுணர் - துறைபோதல் என்றால்,
(1) வெளிநாடு செல்லல் (2) மிகுந்த திறமை (3) ஆரம்ப நிலை (4) இரகசியத் தன்மை

3. பின்வருந் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக:
11. நூலாசிரியர் தமது நூல்பற்றி ஆரம்பத்தில் எழுதும் செய்தி,
(1) பதிப்புரிமை (2) விளக்கவுரை (3) நூன்முகம் (4) அணிந்துரை

12. வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு அரசால் விதிக்கப்படும் கட்டணம்,
(1) வரி (2) தீர்ப்பு (3) கட்டணம் (4) சுங்கம்

13. இரு பெரு நிலப்பரப்புக்களுக்கிடையேயுள்ள ஒடுங்கிய கடற்பகுதி,
(1) வளைகுடா (2) குடாநாடு (3) களப்பு (4) நீரிணை

4. கீறிடப்பட்ட இடங்களுக்குரிய பொருத்தமான சொல்லைத் தெரிக:
14. .............................. பலவிடங்களில் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.
(1) வறட்சியால் (2) வறட்ச்சியால்
(3) வரட்சியால் (4) வரட்ச்சியால்

15. மிதிவண்டியைக் கவனமாக ........................... வேண்டும்.
(1) பாவித்தல் (2) பாவிக்க (3) உபயோகித்தல் (4) உபயோகிக்க

16. மாறன் நித்திரையிற் ................................. கண்டு அலறினான்.
(1) சொற்பனம் (2) சொர்ப்பனம் (3) சொப்பணம் (4) சொப்பனம்

5. இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான உவமைத் தொடர்களைத் தெரிக:
17. ஆசிரியர் கூறிய அறிவுரைகள் .......... அவன் மனத்திற் பதிந்தன.
(1) நீர் மேல் எழுத்துப்போல (2) கன்மேல் எழுத்துப்போல
(3) வாழைப்பழத்தில் ஊசி ஏறுவது போல (3) வாடும் பயிருக்கு வான்மழை போல

18. ............... அவள் ஊரறிந்த இரகசியத்தை மறைக்கப் பல கதைகள் பேசினாள்
(1) விரிவெயிலில் விளக்கொளிபோல (2) மணற்சோற்றில் கல்லாய்வதுபோல
(3) முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைப்பதுபோல (4) பொன்காத்த பூதம்போல

19. குடும்பத்துக்குப் பெருந் துணையாய் இருந்த மகனை இழந்த பெற்றோர் வருந்தினார்,
(1) அனலிடைப்பட்ட மெழுகுபோல (2) இடியேறுகேட்ட நாகம்போல
(3) புயலில் அகப்பட்ட மரக்கலம்போல (4) சிறகிழந்த பறவைபோல

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.
20. பின்வருவனவற்றில் திரிதல் விகாரம் பெற்று வந்த தொடர்,
(1) மரக்குற்றி (2) வேற்படை (3) கோழியிறகு (4) கலைத்துறை

21. வேற்றுமைப் புணர்ச்சியாய் அமைந்த சொற்றொடர்,
(1) கிணற்றுநீர் (2) வட்டமேசை (3) மதிமுகம் (4) அங்குச்சென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. அல்வழிப் புணர்ச்சியாய் அமைந்த சொற்றொடர்,
(1) கால்விரல் (2) பூஞ்சோலை (3) பொற்காப்பு (4) தேடிப்பெற்றான்.

23. பின்வருவனவற்றுள் இருவேறு வகையாகப் பிரிக்கக் கூடிய தொடர்,
(1) கயிற்றுப்பந்து (2) எந்நாடு (3) எப்பொருள் (4) நற்றுணை

24. நெடிற்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சிக்கு உதாரணமாய் அமைந்த தொடர்,
(1) நண்டுக்கால் (2) வயிற்றுப்பசி (3) பாக்குவெட்டி (4) நாட்டுப்பற்று

7. பின்வருந் தொடர்களைப் பிரித்தெழுதினாற் சரியானது,

25. ஒற்றைப்பனை: (1) ஒற்றை + பனை (2) ஒரு + பனை (3) ஒன்று + பனை (4) ஓர் + பனை

26. நானிலம்: (1) நால் + நிலம் (2) நான்கு + நிலம் (3) நாலு + நிலம் (4) நான் + நிலம்

27. முற்றத்துமா: (1) முற்றம் + மா (2) முற்றத்து + மா (3) முத்தம் + மா (4) மூன்று + மா

8. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதினால் சரியானது,

28. அன்று + நாள்: (1) அந்தநாள் (2) அன்றுநாள் (3) அந்நாள் (4) அற்றைநாள்

29. செய் + மதி: (1) செய்மதி (2) செய்ம்மதி (3) செய்தமதி (4) சேய்மதி

30. தன் + நலம்: (1) தன்னலம் (2) தந்நலம் (3) தண்னலம் (4) தண்ணலம்

## பகுதி 11

1. பின்வருவன ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனி 50 சொல்லளவு கொண்ட மூன்று பந்தி எழுதுக.

(அ) "நான் காவற்காரனாக இருக்கின்ற பூங்காவிலே, புற்களுக்கிடையிலே குண்டூசிகள் தூவப்பட்டிருக்கின்றன" என்று பொய்யாக ஒரு அறிவிப்பை எழுதி மாட்டிவிட்டேன். அதன் பின் யாரும்புற்றரையை மிதிப்பதில்லை" இத்துணுக்கின் மூலம் அங்கு நடைபெற்றதை ஊகித்து மூன்று பந்தியாக வகைப்படுத்தி எழுதுக:

(ஆ) அயல் வீட்டுப் பையன் ஒரு துண்டுக் கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். அதில் "அம்மா, தாயே நீ இப்படிக் கஷ்டப்பட்டு ஓலமிட்டுத் தாலாட்டுப் பாடவேண்டாம், குழந்தையின் அழுகை எங்களுக்குத் தேனாய் இனிக்கிறது: மகிழ்ச்சியும் தருகிறது" என்று எழுதப்பட்டிருந்தது. இத்துணுக்கை மூன்று கூறாக்கி மூன்று பந்தி எழுதுக:

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:

(அ) முஸ்லீம்கள் முன்னேறுவதற்குரிய வழிவகைகள் எவை என ஏ. எம். ஏ. அஸீஸ் கூறுகிறார்?

(ஆ) பழமைவாதிகளைக் கருத்திற் கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மொழிந்த வாக்கு யாது? அதிற்பொதிந்துள்ள உண்மைகள் எவை?

(இ) பின்வருவன பற்றிய ஆசிரியர் கருத்தை சுருக்கமாக எழுதுக:
1) பழமைப் பற்றும் புதுமை வெறுப்பும்
2.) புதுமைப் பற்றும் பழமை வெறுப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக் கல்வி தமிழ்நாட்டிற் பரவத் தொடங்கிற்று. இதன் பயனாக ஆங்கிலங் கற்ற தமிழ் அறிஞர்கள் பல்வேறு வழிகளிலே தமிழ்ப்பணி செய்ய முற்பட்டனர். வசன நூல்கள், நாடகங்கள், விஞ்ஞான சாத்திர நூல்கள் முதலியவற்றை அவ்வத் துறையிலே தகுதியுடையவர்கள் இயற்றி வந்தார்கள். சிலர் பழைய இலக்கண இலக்கியங்களைத் தேடி அச்சிற் பதிப்பித்துப் பண்டைத் தமிழ் அறிவைப் பரப்பினர். சிலர் நமது நாட்டுப் பூர்வ சரித்திரத்தைச் சிலாசாசனம், பண்டை இலக்கியங்கள் முதலியவற்றின் துணைக் கொண்டு புலப்படுத்தினர். சிலர் பண்டைக்காலத்து நாகரீகச் சிறப்பைத் தமிழ் நூல்களில் சான்றுகள் கொண்டு தெளிவித்தலையே மேற்கொண்டனர். கடைசியில் கூறிய முயற்சியில் ஈடுபட்டவர்களில் தலைசிறந்தவராவார் கனகசபைப்பிள்ளை (வையாபுரிப்பிள்ளை)

(அ) தமிழ் நாட்டில் ஆங்கிலக் கல்வி பரவிய நூற்றாண்டு எது?
(ஆ) 1) ஆங்கிலங் கற்ற தமிழறிஞர் நூலாக்கத்திற் செய்து புதுமை யாது?
2) தமிழறிவைப் பரப்ப மேற்கொண்ட முயற்சி யாது?
(இ) அவர்கள் செய்த இரு வகையான ஆராய்ச்சிகள் யாவை?
(ஈ) கனகசபைப்பிள்ளை மேற்கொண்ட தமிழ்ப்பணி எது?
(உ) இவ்வுரைப்பகுதியாசிரியர் எமக்குப் புலப்படுத்த விரும்பும் பிரதான கருத்து யாது?

4. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

"நிலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்
கோலமுழு துங்காட்டி விட்டாற் காதற் கொள்ளையிலே இவ்வுலகஞ் சாமோவானச்
சோலையிலே பூத்த தனிப் பூவோநீதான் சொக்கவெள்ளிப் பாற்குடமோ அமுதவூற்றோ
காலைவந்த செம்பருதி கடலில் மூழ்கிக் கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ"

(பாரதிதாசன்)

(அரும்பதம்: கோலம் - அழகு, வான் ஆடை - வானமாகிய சோலை: காதற்கொள்ளை - எல்லையற்ற அழகாலுண்டான அன்புப் பெருக்கு: சாமோ - சாகுமோ: தனிப்பூ - ஒப்பற்றபூ: சொக்க - அழகிய: பருதி - சூரியன்: கனல் - வெம்மை: ஒளிப்பிழம்பு - பேரொளி)

(அ) 1) இப்பாடலிற் கவிஞர், இரசிகர் மனதிற் பதிக்க விரும்பும் கருத்து யாது?
2) அக்கருத்தைப் பதிக்கப் புலவர் கையாளும் முறை யாது?
(ஆ) 1) ஒளிமுகத்தைக் காட்டும் பெண் யார்?
2) அவள் உடலை மறைத்துள்ள ஆடை எது?
3) இதன் பொருத்தப்பாடு பற்றி நீர் உணர்வது யாது?
(இ) 1) கோலம் முழுவதும் காட்டல் என்றால் எவ்வாறு?
2) கோலம் முழுவதும் காட்டினால் ஏன் உலகம் சாக வேண்டும்?
3) இதனால் நீர் உணர்வது யாது?

(ஈ) 1) சோலை எது? 2) அச் சோலையிற் பூத்த மலர்கள் எவையாயிருக்கும்?
3) பூக்களிலே இது தனிப்பூவானது எவ்வாறு?

(உ) 1) வெள்ளிப்பாற்குடம் உவமையானது எவ்வாறு?
2) "அமுத ஊற்று" - ஊறிய அமுதம் யாது?
3) ஒளிப்பிழம்பு எத்தகையது?

(ஊ) இப்பாடலின் பொருளும் அழகும் புலப்படுமாறு சந்திரனை முன்னிலைப்படுத்திச் சிறுச்சிறு வாக்கியமாக உமது சொந்த வசனநடையில் எழுதுக:

5. பின்வரும் சொற்களின் பொருள் புலப்பட அவற்றை வாக்கியத்தில் அமைக்க:

(அ) சமூகசேவை நடவடிக்கை (ஆ) பக்கபலம் தேடுதல்
(இ) நடைமுறைப்படுத்தல் (ஈ) பண்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 5

# செயல் : 9

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக:

1. நாடகத்தில் உயிராய் விளங்குவது எது?
(1) கதை (2) நடிப்பு (3) ஒலி, ஒளி அமைப்பு (4) நடிகர்

2. மனக்கருத்துக்களை நடித்துக் காட்டும் முயற்சி,
(1) நாட்டியம் (2) நாடகம் (3) கூத்து (4) தாண்டவம்

3. நாடகம் எல்லோருக்கும் இன்பந்தரக் காரணம்,
(1) நடிப்புச் சுவை (2) கதைச் சுவை
(3) நடிப்புச் சுவையும் கதைச் சுவையும் (4) நகைச்சுவை

4. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் வரும் நடன மங்கை,
(1) மாதவி (2) கண்ணகி (3) மாதரி (4) கோப்பெருந்தேவி

5. சங்ககாலத்தில் நாடகச் சுவை விரிவாக ஆராயப்பட்டது என்பதற்குரிய ஒரு சான்று
(1) சங்கப் புலவர்கள் நாடகங்கள் எழுதியமை
(2) சிலப்பதிகாரம் இயற்றப்பட்டமை
(3) தமிழின் ஒரு பிரிவாக நாடகம் கருதப்பட்டமை
(4) அக்கால மக்கள் வாழ்க்கை நாடகமாயிருந்தமை

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

6. தில்லையம்பலத்தில் நடராசப்பெருமான் ஆனந்த தாண்டவம் ஆடினார் - தாண்டவம் என்றால்,
(1) நாடகம் (2)' கூத்து (3) பாட்டோடு கூடிய ஆட்டம் (4) குரவைக்கூத்து

7. பாட்டாளி மக்களின் அவலநிலையை அரசியல்வாதிகள் உணர்வதில்லை - பாட்டாளி என்பதன்ஒத்த கருத்துச்சொல்,
(1) தொழிலாளர் (2) பாடுவோர் (3) நாடகக்கலைஞர் (4) அரசபணியாளர்

8. காராளர் தொழில் இல்லையேல் உலகம் நடவாது - காராளர் என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) தொழிலாளர் (2) உழவர் (3) அரசர் (4) அந்தணர்

9. நல்லொழுக்கம் இல்லாதவர் இழுக்கம் அடைவர் - இழுக்கம் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்,
(1) நன்மை (2) உயர்வு (3) விழுப்பம் (4) தாழ்வு

10. நண்பர்கள் இருவரும் அந்தரங்கமாக உரையாடினர் - அந்தரங்கம் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்,
(1) இரகசியம் (2) வெளிப்படை (3) தனிமை (4) பகிரங்கம்

3. வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான பிற்பகுதியைத் தெரிக.

11. அவன் நேற்றுக் கம்பன் விழாவிற்குச் சென்றிருந்தால் அருமையான சொற்பொழிவை
(1) கேட்டான் (2) கேட்பான் (3) கேட்டிருந்தான் (4) கேட்டிருப்பான்

12. தாய் சொற் கேளாமல் நடப்பது,
(1) நல்ல பழக்கங்கள் அல்ல (2) நல்ல பழக்கங்கள் அன்று
(3) நல்ல பழக்கம் அன்று (4) நல்ல பழக்கம் அல்ல

13. கல்வி எனப்படுவது கற்றற்குரிய நூல்களை,
(1) கற்பது கல்வி (2) கற்பது கல்வியாம் (3) கல்வி எனப்படும் (4) கற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிக:

14. எந்தக் கடினமான காரியமும் விடாமுயற்சியுடன் இடைவிடாது செய்யப்படின் நிறைவேறும்
(1) பதறாத காரியம் சிதறாது (2) எறும்பூரக் கற்குழியும்
(3) பழகப் பழகப் பாலும் புளிக்கும் (4) மனம் உண்டானால் இடமுண்டு

15. அறிவிற் சிறந்த எந்தப் பெரிய மேதையும் சில சமயங்களிற் பிழைவிடுதலுமுண்டு
(1) ஆனைக்கும் அடிசறுக்கும் (2) ஆழமறியாமற் காலை விடாதே
(3) அறிவினர்க்கு ஆயிரம் உரைக்கினும் அவம் (4) கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை

16. செருக்குக் கொண்டு பணிவின்றித் திரிவோர் பிற்காலத்தில் வருந்துவர்
(1) கெடுகுடி சொற் கேளாது (2) துள்ளின மாடு பொதி சுமக்கும்
(3) தீட்டின மரத்திற் கூர் பார்க்காதே (4) நண்டு கொழுத்தால் வளையிற் தங்காது

5. இடைவெளியில் வைத்து நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக:

17. குண்டுவீச்சால் அழிவுற்ற இடங்களில் செஞ்சிலுவைச் சங்கத்தாரால் .................. ஆரம்பிக்கப்பட்டது.
(1) அத்துமீறல் (2) புனர்வாழ்வு (3) நிவாரணப்பணி (4) கட்டடப்பணி

18. உலக நாடுகள் சிலவற்றிற்கு ................................ அச்சுறுத்தலாய் அமைந்துள்ளது.
(1) ஆட்சிமுறை (2) பயங்கரவாதம் (3) கடல்கோள் (4) உணவுற்பத்தி

19. நாட்டிலே குழப்பநிலை தொடர்வதால் ........................ நீடிக்கப்பட்டது.
(1) சனநாயக ஆட்சிமுறை (2) விலைவாசி அதிகரிப்பு
(3) பேச்சுச் சுதந்திரத் தடை (4) அவசரகாலச் சட்டம்

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக:

20. சொற்புணர்ச்சியில் வருமொழியில் திரிபடையும் எழுத்துக்கள்
(1) ல், ள் (2) ம், ய் (3) த், ந் (4) ண், ன்

21. பல + பல என்பது புணரும் முறைகளிற் பொருத்தமற்றது
(1) பலபல (2) பட்பல (3) பற்பல (4) பலப்பல

22. இருவிதமாகப் பிரித்தால் இருவேறு பொருள் தரும் சொற்றொடர்
(1) பொன்னன்று (2) காற்றூசு (3) நற்குணம் (4) தங்கை

23. ஒரு மொழியாகும்போது ஒரு பொருளும் இரு மொழியாய்ப் பிரிக்கும் போது வேறுபொருளும் தருஞ்சொல்
(1) கண்ணீர் (2) நங்கை (3) வேறகண் (4) முட்புதர்

7. பின்வருவனவற்றைப் புணர்த்தி எழுதினால் எவை சரியானவை?

24. கல் + தூண் : (1) கல்தூண் (2) கற்த்தூண் (3) கற்றூண் (4) கல்த் தூண்
25. பொன் + தாலி : (1) பொற்தாலி (2) பொன்றாலி (3) பொன்தாலி (4) பொற்றாலி
26. செம்மை + அடி: (1) செம்மையடி (2) சேவடி (3) செவ்வடி (4) செம்மடி

8. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதினால் எவை சரியானவை?

27. தென்றிசை : (1) தென் + றிசை (2) தென் + திசை
(3) தெற்கு + திசை (4) தெற்கு + இசை

28. சந்திரோதயம் : (1) சந்திர + உதயம் (2) சந்தி + ரோதயம்
(3) சந்திரன் + உதயம் (4) சந்திரர் + உதயம்

29. சொன்னயம் : (1) சொல் + னயம் (2) சொன் + னயம்
(3) சொல் + நயம் (4) சொன் + நயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. நாட்கூலி : (1) நாட் + கூலி (2) நால் + கூலி
(2) நாள் + கூலி (4) நாட்டு + கூலி

# பகுதி 11

1. பின்வரும் குறிப்புக்களை வழிகாட்டியாகக் கொண்டு ஒவ்வொன்றையும் ஏற்றவாறு விரித்துப் பந்தியாக்கி 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக:

(அ) 1) குயவன் பலவகைக் களிமண்ணைச் சேர்த்துத் திரிகையிலிட்டு உருவாக்கியமை 2) சந்தையிற் பெண்ணொருத்தி தைப்பொங்கலுக்காக வாங்கியமை 3) பொங்கலன்று அதற்கிருந்த பெருமை 4) பின்னால் பலவகையாக உபயோகிக்கப்பட்டமை 5) ஆடு தட்டி உதைத்தமை - இவற்றை ஆதாரமாகக் கொண்டு "ஓட்டைப் பானையின் சுயசரிதை" என மகுடமிட்டு எழுதுக:

(ஆ) 1) குமரன் ஏழைச் சிறுவன் 2) பள்ளிப்படிப்பிற்காக நல்லதம்பி உதவிபுரிகிறார். 3) அவனுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில் கிடைத்தது. படித்துத் தேறி அங்கேயே உயர் பதவியில் அமர்கிறான். 4) விடுமுறையில் ஊருக்கு வந்து நல்லதம்பியிடஞ் செல்கிறான். 5) இனக்கலவரத்தால் மனைவி, மக்கள், பொருள், பண்டமிழந்து அநாதையாய் வாழ்கிறார். 6) இனி அவருக்குத் தான்தான் மகன் என்று கூறி அழைத்துச் செல்கிறான் - இவற்றை ஆதாரமாகக்கொண்டு "நன்றிக்கடன" என்னுந் தலைப்பில் சிறுகதை எழுதுக.

(இ) 1) தலைவர், பிரதம அதிதி, சபையோர் முதலியோரை விளித்தல் 2) பிரதம அதிதியின் பெருமை: பாடசாலை வளர்ச்சிக்குச் செய்த தொண்டு முதலியவற்றை விளித்து வரவேற்றல் 3) பெற்றோர், நலன்விரும்பிகள் முதலியோரின் உதவிகள் 4) பழைய மாணவரின் ஒத்துழைப்பு - இவ்வம்சங்களை விபரித்து "எமது பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் நான் நிகழ்த்திய வரவேற்புரை" என்ற தலைப்பில் எழுதுக.

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) 1) நடிப்பின் வகைகள் 2) ஒவ்வொன்றையும் பற்றிய இயல்பு யாது?

(அ) நாடகத்தின் உயிர் நடிப்பு என்பதை 1) தமிழிலக்கியத்தில் வழங்கி வந்த சொற்கள் கொண்டும் 2) சிலப்பதிகார மேற்கோள் காட்டியும் விளக்குக:

(இ) "கருத்து வெளிப்பாட்டுக்கு மொழி பயன்பட்ட போதிலும் நடிப்பினை ஒதுக்கிவிட முடியாது" - இக்கூற்றை இரு ஆதாரங்காட்டி விளக்குக.

3. பின்வரும் உரைப்பகுதயை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக:

இராவணனுக்கும் அகத்திய முனிவருக்கும் இசைப் போட்டி நிகழ்ந்தது. முதலில் அரக்கர் கோன் அருமையாகப் பாடினான். அதன் பின் அகத்தியர் தமிழிசையை யாழில் அமைத்துப் பாடினார். அவர் பாட்டொலியைக் கேட்ட பறவைகளும் விலங்குகளும் பரவசமுற்றன. எதிரே நின்ற கரும் பாறை இளகிற்று. அரக்கர் கோன் உள்ளம் உருகிற்று. அந்நிலையில் அகத்தியரை நோக்கி, "என் உயிரினும் இனிய இசை ஞானியே, உமக்கு என்ன வேண்டும்?" என்றான் இராவணன். தமிழ் நாட்டைப் பாதுகாப்பதற்கு ஏற்ற சமயம் வந்துற்றது என்று அறிந்த முனிவர், "ஐயனே, இந்நாட்டிலுள்ளோர் எவரையும் நீ துன்புறுத்தாமல் இருக்க வேண்டும்." என்றார். அதற்கிசைந்த இராவணனும் பொதிய மலையை விட்டகன்றான்: அன்று முதல் தமிழகத்தில் ஆட்சி செய்யும் ஆசையை அடியோடு விட்டொழித்தான். "தமிழிசையால் அரக்கர் அச்சம் அகன்றது" என்று தமிழ் மக்கள் அகங்களித்தனர். இச் செய்தியை தொல்காப்பியப் பாயிரவுரையாலும் மதுரைக் காஞ்சியுரையாலும் அறியலாம்.

(ரா.பி. சேதுப்பிள்ளை)

(அ) 1) இவ்வுரைப்பகுதி ஆசிரியர் வாசகனுக்குப் புலப்படுத்த விரும்பும் மையக் கருத்து யாது?
2) அக்கருத்தைப் பலப்படுத்த அவர் கையாண்ட முறை யாது?

(ஆ) 1) அரக்கர்கோன் யார்? 2) அவனிடம் காணப்பட்ட கலைத்திறமை யாது?
3) அத்திறமை இப்பந்தியில் எவ்வாறு புலப்படுகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) 1) அகத்தியர் எங்கே வாழ்ந்தார்? 2) அவர் இசைத்துறையில் பெற்ற பேராற்றலைக் காட்டும் செய்தி யாது? 3) அகத்திய முனிவரின் மனப்பாங்கு எத்தகையது?
4) அது எவ்வாறு புலப்படுகிறது? 5) இங்கு கூறப்பட்ட கதைக்கு ஆதாரங்கள் எவை?

(ஈ) இவ்வுரைப் பகுதியை வாசிக்கும் போது உமது மனதில் தோன்றும் எண்ணங்கள் எவை?

4. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.
("இன்று அரசவைக்குச் செல்ல வேண்டாம்" எனத் தடுத்த மனைவிக்கு யூலியசீசர் கூறியவை)

(1) அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவனுக் கொருமரணம் அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதிமூ டரைக்கண்டாற் புன்னகைசெய் பவன்யான்"

(2) "இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தில் அறிவாய்
இளஞ்சிங்கக் குருளையர்யாம் யான்மூத்தோன் எனது
பின்வருவது இன்னலெனப் பகைமன்னர் அறிவார்
பேதுறல் பெண் அணங்கே போய்வருதல் வேண்டும்"

(விபுலானந்தர்)

அரும்பதம்: சதம் - நூறு: அவனி - பூமி: துஞ்சுவர் - இறப்பர்: துன்மதி - இழிந்த புத்தி: இன்னல் - துன்பம்: இங்கு - மரணம்: குருளை - குட்டி: பேதுறல் - கலங்காதே: பெண் அணங்கு - பெண்களில் அழகுடையவள்)

(அ) (1) முதற் பாடலிற் கூறப்படும் அழியாத உண்மை எது? (2) மூடரின்துன்மதி எது? (3) யூலியசீசர் புன்னகை செய்யக் காரணம் எதுவாய் இருக்கலாம்?

(ஆ) (1) "இளஞ்சிங்கக் குருளைகள் யாம்" யாம் என்ற பன்மைச் சொல் சுட்டும் கருத்து யாது? (2) இளஞ் சிங்கக்குருளைகள் என்பதிலிருந்து நீர் உணர்வது யாது? (3) "பிறந்தது ஒரு தினத்தில்" என்பதால் அறியப்படும் கருத்து என்ன?

(இ) (1) யூலியசீசர் தன்னைத் தம்பியாகவும் இன்னலைத் தமையனாகவும் கூறாமைக்குக் காரணம் யாதாய் இருக்கலாம்? (2) இதிலிருந்து பகைமன்னர் அறிந்து கொள்ளும் உண்மை யாது?

(ஈ) (1) இப்பாடல்களின் மூலம் கவிஞர் புலப்படுத்த விரும்பும் பிரதான கருத்து யாது? (2) இவற்றைப் படிக்கும்போது உமது மனத்தில் தோன்றுவது அச்சமா? அவலமா? வீரமா? (3) அச்சுவை தோன்றக் காரணம் என்ன?

(உ) இப்பாடல்களின் பொருளை உமது வசனநடையில் எழுதுக?

5. பின்வரும் தனிவாக்கியங்களை ஒரு பயனிலை கொண்ட வாக்கியமாக்கி எழுதுக.
(அ) சான்றோர்களான புலவர்கள் பலர் பண்டைக்காலத்தில் இருந்தனர்.

(ஆ) அவர்களுள் ஒருவர் ஒளவையார்.(இ) அவர் பெண்பாற் புலவர் (ஈ) அவர் அதியமான நெடுமான் அஞ்சி என்னும் மன்னனைப் பற்றிப் பாடியுள்ளார் (உ) அப்பாடல்கள் புறநானூறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 5

# செயல் : 10

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1: திருவாசகம் என்னும் அருள்நூலின் ஆசிரியர்:
(1) மாணிக்கவாசகர் (2) திருஞானசம்பந்த நாயனார்
(3) சுந்தரமூர்த்தி நாயனார் (4) சேக்கிழார் பெருமான்

2. நாட்டியக் கலைபற்றிக் கூறும் பண்டைத் தமிழ் நூல்
(1) புறநானூறு (2) நெடுநல்வாடை (3) மணிமேகலை (4) சிலப்பதிகாரம்

3. உலகத்திலே முதன்முதல் தோன்றிய கல்வி
(1) விஞ்ஞானக்கல்வி (2) நடிப்புக்கல்வி (3) நாடகக்கல்வி (4) அழகியற்கல்வி

4. கதைகளை நடித்துக் காட்டும் நிகழ்ச்சி
(1) விறல் (2) நட்டம் (3) நடனம் (4) நாடகம்

5. சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியத்துக்கு உரை கண்டவர்
(1) பரிமேலழகர் (2) அடியார்க்கு நல்லார் (3) நச்சினார்க்கினியர் (4) சேனாவரையர்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

6. செய்யுள்களின் உள்ளுறைப் பொருளைக் கண்டு நயத்தல் வேண்டும் - உள்ளுறை என்றால்
(1) நேர்ப் பொருள் (2) சொற் பொருள் (3) குறிப்புப் பொருள் (4) விளக்கப் பொருள்

7. "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்" கண்ணோட்டம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) இரக்கம் (2) கடைக்கண்பார்வை (3) ஆராய்தல் (4) கண்ணாடி

8. அலக்கண் அடைந்தோர் பலர் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்தனர் - அலக்கண் என்றால்
(1) மலர்ந்தகண் (2) செல்வம் (3) துன்பம் (4) வறுமை

9. கைதிகளைப் பலவந்தப்படுத்தி வேலை செய்வித்தனர் - பலவந்தம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
(1) இன்பம் (2) சுயேச்சை (3) தண்டனை (4) கொடுமை

10. மந்தமாருதத்தை அனுபவித்து மகிழ்ந்தனர் - மந்தமாருதம் என்பதன் எதிர்க்கருத்து
(1) இன்பம் (2) சுயேச்சை (3) வாடைக்காற்று (4) புயற்காற்று

3. இடைவெளிகளை நிரப்பத்தக்க வழுவற்ற சொற்களைத் தெரிக.

11. எள்ளிலிருந்து எடுக்கப்படுவது .......
(1) நல்லெண்ணெய் (2) எண்ணெய் (3) எண்ணை (4) நெய்

12. வெயிலிற் காய்ந்த ......கோழிகள் தின்றன
(1) புழுங்கலை (2) பிளுங்கலை (3) புளுங்கலை (4)புழுக்கலை

13. தீ சுட்டமையால் உண்டான .........உடைந்தது
(1) பொக்களம் (2) கொப்புளம் (3) கொப்பளம் (4) பொக்குளம்

4. பின்வரும் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

14. பொருளாழமும் பொருட்சிறப்பும் சுவையும் இல்லாத பாட்டு
(1) வெள்ளைக்கவி (2) செஞ்சொற்கவி (3) சந்தக்கவி (4) வறண்டக்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. அமங்கலமான கருத்தை மங்கலமான சொல்லாற் சொல்வது
(1) அமங்கலம் (2) மங்கலம் (3) இலக்கணை (4) இணைமொழி

16. முன்னுக்குப் பின் முரணாகக் கண்டபடி பேசும் பேச்சு
(1) பயனிலைப்பேச்சு (2) தர்க்கப்பேச்சு (3) குதர்க்கப்பேச்சு (4) விசர்ப்பேச்சு

5. பின்வருவனவற்றில் பொருளை விளக்கும் மரபுத் தொடரைத் தெரிக
17. கணக்கு வழக்கின்றிக் கண்மூடித்தனமாகச் செலவு செய்தல்
(1) அள்ளிக்குவித்தல் (2) அள்ளியிறைத்தல் (3) ஆலாய்ப்பறத்தல் (4) ஆறப்போடல்

18. ஒரு வேலையைக் குறித்த காலத்தில் செய்யாது தாமதித்தல்
(1) இளநாக்கடித்தல் (2) இட்டுக்கட்டுதல் (3) ஆறப்போடுதல் (4) கரையேறுதல்

19. இல்லாததையும் பொல்லாததையும் கற்பித்து கூறுதல்
(1) இரட்டுறமொழிதல் (2) இட்டுக்கட்டுதல் (3) ஒத்துப்பாடுதல் (4) நாக்குநீளுதல்

6. சரியான விடையைத் தெரிந்து கீறிடுக
20. தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று விகாரங்களும்பெற்றுப் புணர்ந்தசொல்
(1) கிணற்றுநீர் (2) பழஞ்சோறு (3) வெண்முகில் (4) நெல்லினம்

21. கெடுதல், தோன்றல் விகாரம் பெற்றப் புணர்ந்த சொல்
(1) மரவேர் (2) இலையுணவு (3) தாழங்காய் (4) குணக்குன்று

22. பின்வருவனவற்றில் மூன்றுவிதமாகப் புணர்த்தக் கூடியது
(1) கால் + நகம் (2) முயிரு + கூடு (3) சில + சில (4) அரிசி + உணவு

23. பின்வருவனவற்றுள் வந்த அல்வழிப்புணர்ச்சி
(1) தை + மாதம் (2) மா + காய் (3) முள் + மரம் (4) பசு + பால்

7. புணர்த்தி எழுதப்பட்டவற்றுள் மிகச் சரியானதைத் தெரிக
24. கால் + நகம் : (1) கால்நகம் (2) கானகம் (3) கான்நகம் (4) கான்னகம்
25. முள் + செடி : (1) முள்ச்செடி (2) முள்செடி (3) முட்செடி (4) முள்ளுச்செடி
26. மகா + ஈசன் : (1) மகாவீசன் (2) மகவீசன் (3) மகாஈசன் (4) மகேசன்
27. அருள் நெறி : (1) அருநெறி (2) அருண்நெறி (3) அருணெறி (4) அருள்நெறி

8. பிரித்து எழுதப்பட்டவற்றுள் சரியானதைத் தெரிக.
28. செங்கண் : (1) செங் + கண் (2) செம் + கண்
(3) சிவப்பு + கண் (4) செம்மை + கண்

29. சிவாலயம் : (1) சிவ + ஆலயம் (2) சிவன் + ஆலயம்
(3) சிவா + ஆலயம் (4) சிவம் + ஆலயம்

30. கண்ணீர் : (1) கண் + ணீர் (2) கண் + நீர்
(3) கண் + ஈர் (4) கண்கள் + நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 11

1. பின்வரும் குறிப்புக்களை வழிகாட்டியாகக் கொண்டு ஒவ்வொன்றையும் ஏற்றவாறு விரித்துப் பந்தியாக்கிக் கட்டுரை எழுதுக:

(அ) 1) சாரணர் இயக்கத்தின் குறிக்கோள் வாசகமான "தயாராய் இரு" என்பதன் விளக்கம் 2) பிறருக்கு உதவும் மனப்பான்மை வளர்தல் 3) கட்டுப்பாடும் ஒழுங்கும் 4) எளிமையும் சிக்கனமுமான வாழ்க்கைமுறை 5) குழுவாகச் செயற்படுந் தன்மை 6) புதியனவற்றைக் கண்டறியும் விருப்பு 7) பொறுப்புணர்வோடு எந்தக் கருமத்தையும் செய்யும் திறன்- இவற்றை ஆதாரமாகக் கொண்டு "சாரணர் இயக்கத்தால் மாணவர் அடையும் பயன்கள" என்ற தலைப்பிற் கட்டுரை.

(ஆ) பின்வரும் காட்சியமைப்பைக் கருத்திற்கொண்டு "புலவர் பெருமை" என்ற தலைப்பில் ஒரு நாடகம் எழுதுக. காட்சி : 1 - மோசிகீரனார் பெருஞ்சேரலிரும்பொறையின் அரண்மனை வாயிலை அடைதலும் அவரது கோலங்கண்டு காவலர் எள்ளிநகையாடல்: மோசிகீரனார் தான் யாரெனக் கூறல், உள்ளே செல்லல், காட்சி : 2 - புலவர் தன் களைப்பையும், பசியையும் வறுமையையும் தனக்குத் தானே கூறுவது போலக் கூறல்: அரங்கிலுள்ள அழகிய கட்டிலைக்கண்டு அதில் துயிலல். காட்சி: 3 - சேவகர் இருவர் வருதலும் வீரமுரசு வைக்கும் கட்டிலில் கிடப்பவரைக் கண்டு சினந்து பேசுதலும். காட்சி: 4 - பெருஞ்சேரலிரும்பொறைக்கு அறிவித்தலும்: பெரும் சேரல் இரும்பொறை சினத்தோடு வாளை உருவிக்கொண்டு செல்லுதலும்: துயில்பவர் மோசிகீரனார் என அறிந்து சாமரை வீசுதலும்: காட்சி: 5 - மோசிகீரனார் எழுந்து அரசன் செயலை வியந்து பேசுதல்: பாடுதல் (புறநானூறு - 50ம் செய்யுள்)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) "சங்ககாலத்தில் நாடகக்கலை நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. இக்கூற்றினை ஆதாரங்காட்டி விளக்குக.

(ஆ) சிலப்பதிகாரத்தின் வாயிலாக மாதவி பற்றி அறியக்கூடிய செய்திகள் எவை?

(இ) "உலகிலே முதன்முதலில் தோன்றியது நாடகக் கல்வி" இக்கூற்றினை விளக்குக.

3. பின்வரும் செய்யுள்களைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. "நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சியொன்று கணமும்
நில்லாது மேலெழுந்தும் கீழ்விழுந்தும் அலைந்து
சீர்க்கரையில் எற்றுண்டு கிடந்த செயல் நோக்கிச்
சிந்திக்கின் மானிடர்தம் வாழ்க்கையிது வென்பேன்.

2. இன்பவிளை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பர்:
எமக்குநிகர் ஆரென்பர்: இருகணத்தின் உளத்தில்
துன்பமுற மண்ணில் விழுந்து இருகண்ணீர் சொரியச்
சோர்ந்தழுவார்: மயக்கமெனுஞ் சுழல்காற்றில் அலைவார்.

3. மரணமெனும் தடங்கரையில் எற்றுண்டு கிடப்பர்:
மறுபிறவித் திரைகவர இயையுங் கருவி
கரணமுறும் உடலெடுத்து மண்ணுலகில் உழல்வார்:
காதலித்தார்! எண்ணிறந்த வேதனையுட் புகுவார்"

(விபுலானந்தர்)

அரும்பதம்: மறுபிறவித்திரை - மறுபிறப்பாகிய அலை இழுக்க: கருவி: மெய், வாய், கண், மூக்கு, செவி: கரணம்: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்: உழல்வார் - துன்பப்படுவர்: காதலிப்பார் - பொருள் மீது ஆசை கொள்வார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) (1) நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சியின் நான்கு செயல்களும் எவை?
(2) குச்சியின் செயல்கள் உவமானமானால் உவமேயம் என்ன?

(ஆ) (1) நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சி மேலெழுதல் போல மானிடர் செய்வன எவை?
(2) குச்சி கீழ்விழுதல்போல மானிடர் செய்வன எவை?
(3) குச்சி அலைதல்போல மானிடர் செயலாகக் கூறப்படுவது யாது?
(4) குச்சி கரையில் எற்றுண்டு கிடப்பதுபோல அமையும் மானிடர் செயல் எது?

(இ) (1) மறுபிறவித்திரை கவர நிகழ்வன எவை? (2) இறத்தல், மறுபிறவியில் உடலெடுத்தல் என்பவற்றால் நீர் உணர்வது யாது?

(ஈ) (1) கவிஞர் இப்பாடல்கள் மூலம் எமக்குப் புலப்படுத்த விரும்பும் உண்மை எது?
(2) அதைப் புலப்படுத்தக் கவிஞர் கைக்கொண்ட முறை யாது?
(3) இப்பாடல்களைப் படிக்கும்போது உமது மனத்தில் தோன்றும் உணர்வு யாது?

(உ) இப்பாடல்களின் பொருளை உமது வசனநடையில் எழுதுக.

4. பின்வரும் ஆரம்பத்தை அவதானித்து எழுதிப் பாருங்கள்.
"உலகம் நான்கெழுத்து: உலகில் வாழ்கின்ற சீவியம் நான்கெழுத்து: பிறப்பு நான்கெழுத்து பிறப்பைத் தரும் பெற்றோர் நான்கெழுத்து: பெற்றோர் பெறும் குழந்தை நான்கெழுத்து..... இதனைத் தொடர்ந்து வாழ்க்கையில் இறப்பு வரை நான்கெழுத்துத் தொடரும் முறையில் எழுதுக.

## பாடம் : 6 — செயல் : 11

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. மண்டூர்க் கந்தசாமி கோவில் பூசகர் எவ்வாறு அழைக்கப்பட்டார்,
(1) கற்பகனார் (2) கப்புறாளை (3) ஐயர் (4) குருக்கள்

2. கந்தசட்டி விரத காலத்தில் மண்டூர்க் கந்தசுவாமி கோவிலில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சி,
(1) சூரன்போர் (2) அன்னதானம் (3) திருச்செந்தூர்ப்புராணபடலம் (4) தீமிதித்தல்

3. மண்டூர்க் கந்தசுவாமி கோவிலில் "படிகடத்தல்" என்றால்,
(1) வாயிற்படியைத் தாவிக் கடத்தல் (2) மூலத்தானத்துள் நுழைதல்
(3) மூலத்தான வாயிற் படியை மிதித்தல் (4) ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு மாறல்

4. குருகுலவாச காலத்தில் முதல் வருடத்திற்கு படித்த நூல்கள்,
(1) நிகண்டும் பாரதமும் (2) பாரதமும் செந்தூர்ப் புராணமும் (3) இவைமூன்றும்
(4) நிகண்டும் திருச்செந்தூர்ப் புராணமும்

5. உவெஸ்லிக் கல்லூரி அமைந்துள்ள இடம்,
(1) மட்டக்களப்பு (2) கல்முனை (3) மண்டூர் (4) வந்தாறுமூலை

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்:

6. ஐவர்குழு அக்கோவிலைப் பரிபாலனம் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. பரிபாலனம் என்றால்,
(1) பாதுகாப்பு (2) மேற்பார்வை (3) நிருவாகம் (4) புனரமைப்பு

7. அந்த விபத்தில் அவன் தெய்வகடாட்சத்தால் மயிரிழையில் உயிர் தப்பினான். கடாட்சம் என்றால்,
(1) கட்டளை (2) உபகாரம் (3) பாதுகாப்பு (4) அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. விபுலானந்தருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது எனக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும், வரப்பிரசாதம் என்றால்,
(1) பாசம் (2) சாதனை (3) அருட்கொடை (4) அதிட்டம்

9. பக்தி சிரத்தையோடும் ஆசாரத்தோடும் கோவிலுக்குச் செல்ல வேண்டும் - ஆசாரம் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்,
(1) கந்தகம் (2) அநாசாரம் (3) களங்கம் (4) பொறாமை

10. கட்டிட வேலைகள் ஆரம்பமாகி ஒரு வருடமாயிற்று. ஆரம்பம் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்,
(1) கடைசி (2) தொடக்கம் (3) பூர்த்தி (4) திருப்தி

3. இடைவெளியை நிரப்புதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

11. ............. ஆட்சி முறையில் எல்லா இனங்களும் சமமாக மதிக்கப்படும்.
(1) சனநாயகம் (2) சர்வாதிகாரம் (3) மன்னனாட்சி (4) இராணுவஆட்சி

12. இலங்கை ............ தமிழ் ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
(1) அரசுப்பேரவையில் (2) அரசியல் யாப்பில்
(3) அலுவலகங்களில் (4) நீதிமன்றங்களில்

13. ஆட்சியாளர் ............ நடந்திருந்தால் இனப்பிரச்சினை தோன்றியிராது
(1) சுயநலத்தோடு (2) பரநலத்தோடு (3) வகுப்புவாதத்தோடு (4) தீர்க்கதரிசனத்தோடு

4. பொருத்தமான விடையைத் தெரிந்து கீறிடுக.

14. தமிழ் இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கான கதவு அடைபட்டு விட்டது. கதவு அடைபடுதல் என்னும் மரபுத்தொடரின் பொருள்,
(1) அலுவலகக் கதவு பூட்டப்படல் (2) இல்லாமற் போதல்
(3) திறக்கப்படாத கதவு (4) புறக்கணிக்கப்படல்

15. முன்னேறி வரும் மாணவனை ஆசிரியர் பாராட்டி உற்சாகப்படுத்தினார். இக் கருத்தை புலப்படுத்தும் மரபுத்தொடர்,
(1) விதந்துரைத்தார் (2) ஆழம் பார்த்தார்
(3) கழுத்துக் கொடுத்தார் (4) தட்டிக்கொடுத்தார்

16. பட்டங் கட்டித்தா என என் தம்பி என்னைப் பிடியாய்ப் பிடித்தான் - பிடியாய்ப் பிடித்தான் என்னும் மரபுத்தொடரின் கருத்து,
(1) பிடிவாதமாய் நிற்றல் (2) பின்தொடர்ந்தல்
(3) தொந்தரவு செய்தல் (4) கெஞ்சி மன்றாடல்

5. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

17. ஒரே பாடசாலையில் தொடர்ந்து ஒரே வகுப்பிற் கல்வி கற்றவர்கள்,
(1) தோழர்கள் (2) சகபாடிகள் (3) நன்மாணாக்கர் (4) ஒருசாலை மாணாக்கர்

18. ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துக்களைக் கொண்டதாய் தமிழ் மரபுக்கேற்பத் திரிபெய்தி வழங்குஞ் சொல்,
(1) சமஸ்கிருதம் (2) தற்சமம் (3) தென்மொழி (4) தற்பவம்

19. ஒரு கூட்டத்தார் யாதேனும் ஒரு காரணம்பற்றி ஒரு பொருளின் பெயரை மறைத்து வேறொரு சொல்லாற் குறிப்பிடுவது,
(1) இடக்கரடக்கல் (2) மங்கலம் (3) குழூஉக்குறி (4) இலக்கணப்போலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

20. தமிழிலுள்ள தனிநிலை உருபன்கள்,
(1) பெயரும் உரியும் (2) பெயரும் இடையும் (3) பெயரும் வினையும் (4) இடையும்உரியும்

21. பின்வருவனவற்றில் பொதுமொழியாய் அமைந்த சொல்,
(1) இராப்பகல் (2) பறக்கும் (3) அரிவாள் (4) தங்கை

22. பின்வருவனவற்றில் பொதுமொழி அல்லாதது,
(1) தாமரை (2) முன்றில் (3) நங்கை (4) வந்திருந்தான்

23. பின்வருவனவற்றில் முன்னிலை இடத்தைக் குறிக்கும் சொல் அல்லாதது,
(1) நடந்தாய் (2) படுப்போம் (3) ஆடுவீர் (4) வருவாய்

24. பின்வருவனவற்றில் வந்த இலக்கணப்போலி அல்லாதது,
(1) வாய்க்கால் (2) முன்றில் (3) நுனிநா (4) தேன்கூடு

25. உரிச்சொல் பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றது,
(1) பெயர், வினைச்சொற்கள் தோன்றுவதற்குப் பகுதியாய் வரும்
(2) குணப்பண்பையும் தொழிற்பண்பையும் உணர்த்தும்.
(3) வேற்றுமை ஏற்கும் (4) பெரும்பாலும் செய்யுளில் வரும்

26. குறிப்புப் பொருள் உணர்த்தி வந்த வாக்கியம்,
(1) அவன் சென்றான் (2) வெற்றிலை தின்றான் (3) ஊர் சிரித்தது (4) மழை பொழிந்தது.

27. பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.
(1) சால (2) நனி (3) இனி (4) கழி

28. சால்வை என்பது,
(1) பாரசீகமொழி (2) மலையாளமொழி (3) அராபியமொழி (4) பிரான்சுமொழி

29. காட்டில் மரம் நின்றது - இதில் வந்த சொற்கள்,
(1) பெயரும் வினையும் (2) வினையும் உரியும்
(3) பெயரும் வினையும் இடையும் (4) பெயரும் வினையும் உரியும்

30. பின்வருவனவற்றில் மரூஉச் சொல் அல்லாதது,
(1) புட்குலங்கள் (2) வாணாள் (3) சோணாடு (4) அருமந்த

## பகுதி 11

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றிப் பின்வரும் குறிப்புக்களை வழிகாட்டியாகக் கொண்டு ஏற்றவாறு விரித்து, பந்தியாக்கி 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) (1) கல்வியின் சிறப்பு; நீர், முதலியவற்றால் அழியாதது; எவராலும் கவரப்படமுடியாதது: கொடுக்குந்தோறும் குறையாதது: கொடுக்குந்தோறும் பெருகுவது. (2) ஒவ்வொருநாளும் இடைவிடாது கற்றல்: சந்தேகங்களை பலரிடம் கேட்டு தெளிதல். (3) விலங்கு நிலையிருந்து கல்வியால் மனிதன் உயர்வடைகிறான்: அறிவு பெருக ஒழுக்கமுள்ள கட்டுப்பாடான வாழ்வு வாழுகிறான்: புதியன கண்டுபிடிக்கப்பட்டு வளமான வாழ்வு வாழ்கிறான். இவற்றை ஆதாரமாகக் கொண்டு “கல்வி போற் சிறந்த பொருளில்லை” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை.

(ஆ) (1) வந்த பின்னர் நோயைத் தடுப்பதிலும் வருமுன்னர்த் தடுப்பது சிறந்தது என்பதன் விளக்கம்: பழமொழிகள் (2) நோயை வருமுன்னர் தடுக்கும் வழிகளில் எல்லாவகைச் சுத்தமும் பிரதானமாதல். (3) சத்துணவு உண்ணல்: பசித்தபோது புசித்தல். (4) போதிய உடலுழைப்பு அல்லது விளையாட்டு: நித்திரை- இக் குறிப்புக்களை வழிகாட்டியாகக் கொண்டு “நோய்க்கு இடங்கொடேல்” என்னும் தலைப்பிற் கட்டுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) (1) இடம் காலம் என்பவற்றைக் குறிப்பிடல். (2) அலங்கார வேலைகள்(3)பிரதம அதிதியை வரவேற்றல். (4) அவரது உரையின் முக்கிய பகுதியைக் குறிப்பிடல். (5) இடம் பெற்ற சுதேச விளையாட்டுக்கள். (6) கலை நிகழ்ச்சிகள்: நாடகம், கிராமிய நடனம், வில்லிசை முதலியன - இக்குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு உமது ஊரில் நிகழ்ந்த புத்தாண்டுக் கொண்டாட்டம் பற்றி வெளியூர் நண்பனுக்குக் கடிதம்.

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) மண்டூர்க் கந்தசுவாமி கோவில் அமைப்பு, பூசை முறை, வணக்கமுறை, சம்பிரதாயங்கள் பற்றி புலவர்மணி கூறிய கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

(ஆ) புலவர்மணி தமது குருகுல வாசமும் கல்விமுறையும் பற்றிக் கூறுவன எவை?

(இ) மண்டூரில் தமிழ் என்றால் எது? அவ்வாறு கருதப்படுவது ஏன்?

3. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"கானெலாம் மலர்ந்தமுல்லை ககனமீது எழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்ப மென்னத்
தூனிலா மதியம்வந்த குணதிசைத் தோன்றிற் றம்மா" (கம்பர்)

அரும்பதம்: கான் - ககனம்-ஆகாயம்; வயங்குதாரை - ஒளிவீசும் நட்சத்திரங்கள், வேனிலான் - மன்மதன்: விழவு - விழா: வேனில் - இளவேனிற்காலம்: தூநிலா - தூய்மையான நிலா: மதியம் - சந்திரன்: குணதிசை - கிழக்குத்திசை: அம்மா - பொருளற்ற அசைநிலா.

(அ) (1) கானெலாம், வானெலாம் என்னுந் தொடர்களால் முல்லை, தாமரை என்பவற்றின் அளவு பற்றி என்ன அறிகிறீர்?

(2) மலர்ந்த முல்லை, வயங்குதாரை என்பன மூலம் அறியப்படுவன யாவை?

(ஆ) (1) மலர்ந்த முல்லை வானத்தைச் சென்றடைந்ததுபோல இருந்தது எது?
(2) இரண்டிற்குமுள்ள பொருத்தப்பாட்டினை விளக்குக?
(3) "நிரை நிரை மலர்ந்து தோன்ற" என்பதன் மூலம் நீர் உணர்வது யாது?

(இ) (1) மன்மதன் விழா எப்பருவ காலத்தில் நடந்திருக்கும்?
(2) அக்காலத்தில் வானத்தின் தோற்றம் எவ்வாறிருக்கும்?
(3) அந்த வானப்பின்னணி கூறப்படக் காரணம் யாதாய் இருக்கலாம்?

(ஈ) (1) இங்கு கூறப்படும் சந்திரன், பூரணசந்திரன் என உணர்வதற்கு ஆதாரமாய் இருப்பவை எவை?
(2) வெள்ளிவெண்கும்பம், பூரணசந்திரன் இரண்டிற்குமுள்ள பொதுமை யாது?

(உ) (1) இப்பாடல் வாயிலாகக் கவிஞர், கலைஞருக்கு புலப்படுத்த விரும்பும் கருத்து யாது?
(2) அதனைப் புலப்படுத்தக் கவிஞர் கைக்கொண்ட விரகு அல்லது உத்தி அல்லது முறை யாது?

(ஊ) இப்பாடலில் நீர் காணும் காட்சியை விளக்கமாக உமது வசன நடையில் எழுதுக.

4. பின்வரும் செய்யுட்பகுதியைத் தொடர்ந்து எழுத முயற்சி செய்து பாருங்கள்.

"மாலையிற் சூரியன் மேற்கே மறைய
மல்லிகை மலர்ந்தது முல்லை சிரித்தது
ஏனடி உனக்கு இந்தச் சிரிப்பு
என்று மல்லிகை கேட்க முல்லை
பாரடி வானைப் பால்போல் நிலவு
..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல் : 12
## பகுதி : 1

1. பின்வரும் வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிக.

1. புராணம் என்னும் சொல்லின் கருத்து,
(1) இலக்கியம் (2) பழைய வரலாறு (3) தோத்திரப்பாடல் (4) நிகண்டு

2. கனம் பாக்கர் ஐயரவர்கள் முகாமையாளராய் இருந்த கல்வி நிலையம்
(1) உவேஸ்லிக் கல்லூரி (2) உவேஸ்லியன் மிஷன் ஆங்கிலப்பாடசாலை
(3) சாரதா வித்தியாலயம் (4) புனித மைக்கேல் கல்லூரி

3. கட்டுரையாசிரியர் குருகுல வாசம் செய்தபோது முதலிலே திருச்செந்தூர்ப் புராணம் படித்த காரணம்,
(1) மண்டூர்க்கந்தசுவாமி கோவிலில் தவறாது படிக்கப்பட்டமை
(2) சுவையான கதையமைப்புடையதாய் இருந்தமை
(3) படிப்பதற்கு இலகுவாய் இருந்தமை
(4) குருவுக்கு நன்கு தெரிந்த நூலாயிருந்தமை

4. மண்டூர்க்கந்தசுவாமி கோவில் எந்தக் கோயிலின் அமைப்புடையது
(1) நல்லூர்க்கந்தன் (2) திருச்செந்தூர் முருகன்
(3) கொழும்பு பொன்னம்பலவாணேசர் (4) கதிர்காமக் கந்தன்

5. அக்காலத்திற் பாதிரிமாரும் உபதேசிமாரும் ஊருராகச் செல்லக்காரணம்
(1) சமயத்தொண்டு புரிதல் (2) ஊர் மக்கள் வாழ்க்கை முறையை அறிதல்
(3) சமயத்தொண்டும் கல்விச் சேவையும் செய்தல்(4) கல்வியை ஊரெங்கும் பரப்பல்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

6. முகாமையாளரின் திறமையால் அந்த நிறுவனம் வளர்ச்சியடைந்தது. முகாமையாளர் என்றால்,
(1) பங்காளர் (2) ஊழியர் (3) நிருவாகத் தலைவர் (4) முதலாளி

7. இந்துசமய சம்பிரதாயப்படி அந்தத்திருமணம் நடந்தது - சம்பிரதாயம் என்றால்
(1) வாழ்க்கைமுறை (2) மரபுமுறை (3) மூடநம்பிக்கை (4) பழக்கவழக்கம்

8. படைவீரர் சில போராளிகளிடம் சரணடைந்தனர் - சரணடைதல் என்றால்,
(1) தோல்வியடைதல் (2) தஞ்சமடைதல் (3) போர்புரிதல் (4) ஒளித்தோடல்

9. அதிபர் மாணவரின் வேண்டுகோளுக்கு இசைந்தார்- இசைதல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) மறுத்தல் (2) உடன்படல் (3) பின்போடல் (4) ஆறுதல்கூறல்

10. வழிநடந்த களைப்பால் அனைவரும் கண்படை கொண்டனர் - கண்படை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) காலாறல் (2) இளைப்பாறல் (3) உணவுகொள்ளல் (4)கண்விழித்தல்

3. பின்வருந் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக:

11. கோயில்களில் கந்தபுராணம் முதலிய அருள் நூல்களை ஒருவர் இசையுடன் படிக்க வேறொருவர் அதன் பொருளை விளக்கிக் கூறல்,
(1) கதாப்பிரசங்கம் (2) புராணபடனம் (3) இசைக்கச்சேரி (4) கதை நடத்துதல்

12. இலக்கணம் இல்லையாயினும் இலக்கணமுடையதுபோல வழங்கும் தொடர்மொழி,
(1) இலக்கணமுடையது (2) மரூஉ
(3) இடக்கரடக்கல் (4) இலக்கணப்போலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆரியத்திலும் தமிழிலுமுள்ள பொதுவெழுத்துக்களாலியைந்து தமிழ் ஒலிப்பு முறைக்கு ஏற்ப வழங்கும் வடமொழி,
(1) தற்பவம் (2) தற்சமம் (3) பொதுமொழி (4) திசைமொழி

4. இடைவெளிகளை நிரப்பத்தக்க வழுவற்ற சொற்களைத் தெரிக.

14. இன்றும் சில பகுதிகளில் முஸ்லிம் பெண்கள் ..... இடும் வழக்கம் உண்டு,
(1) மொட்டாக்கு (2) முட்டாக்கு (3) முக்காடு (4) மொக்காடு

15. புதுவருடத்தன்று தந்தையார் ...... பரிமாறினார்.
(1) கைவிசேடம் (2) கைவியளம் (3) கைவிசேசம் (4) கைவிடயம்

16. சோர்வின்றி ... கல்வி கற்பவர் கல்வியில் முன்னேறுவர்,
(1) நாளாந்தம் (2) நாளந்தம் (3) நாளடைவு (4) நாள்தோறும்

5. இடைவெளியில் நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

17. முதன்முதல் மேடையிற் பேசச்சென்ற மாணவன் ..... திக்கித் திணறிப் பேசினான்
(1) விடயத்தை மறந்து (2) சபையோரைக் கண்டு
(3) சபைக்கோழையால் (4) தலைவருக்குப் பயந்து

18. தசரதன் மைந்தர் வசிட்டரிடம் ... கல்வி கற்றனர்.
(1) கலாசாலையில் (2) குருகுலவாச முறையில்
(3) வினாவிடை முறையில் (4) வாசிப்பு முறையில்

19. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரின் ..... தாயகம்,
(1) குடியேறிய (2) விலைக்கு வாங்கிய (3) கைப்பற்றிக்கொண்ட
(4) வழிவழியாய் வந்த

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

20. தமிழிலுள்ள சார்புநிலை உருபன்கள்,
(1) பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் (2) பெயர்ச்சொல்லும உரிச்சொல்லும்
(3) இடைச்சொல்லும் உரிச்சொல்லும் (4) வினைச்சொல்லும் இடைச்சொல்லும்

21. இடைச்சொல் பற்றிய கூற்றுக்களிற் பொருத்தமற்றது,
(1) தனித்து நின்று பொருள் உணர்த்தாது (2) காலங்காட்டும் தன்மையுடையது.
(3) பெயரோடும் வினையோடும் சேர்ந்து வருவது (4) சொல்லாக்கத்துக்குப் பயன்படுவது

22. பின்வருவனவற்றில் ஓரெழுத்தொருமொழியாய் அமைந்த பெயர்,
(1) சோ (2) கோ (3) தோ (4) மோ

23. பின்வருவனவற்றுள் வந்த பொதுமொழியல்லாதது,
(1) திருக்கை (2) கைதடி (3) வைத்திருந்தான் (4) தலைமயிர்

24. பின்வருவனவற்றில் இடக்கரடக்கலாய் அமைந்த சொல்,
(1) பவ்வீ (2) அமரரானார் (3) பாண்டிநாடு (4) சொல்விளம்பி

25. பின்வருவனவற்றில் வந்த பொருத்தமற்ற ஒரு சொல்லைத் தெரிக.
(1) ஆழி (2) அவனி (3) தரணி (4) பாரகம்

26. இலங்கையில் பல மாவட்டங்கள் உண்டு - இதில் இடம் பெற்ற சொற்கள்,
(1) பெயரும் வினையும் (2) பெயரும் வினையும் உரியும்
(3) பெயரும் இடையும் (4) பெயரும் வினையும் இடையும் உரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. புணர்த்தி எழுதப் பட்டுள்ளனவற்றுள் மிகச் சரியானதைத் தெரிக.

27. கரும்பு + சாறு: (1) கரும்புச்சாறு (2) கருப்புச்சாறு
(3) கருப்பம்சாறு (4) கருப்பஞ்சாறு

28. கூடு + புழு: (1) கூட்டுப்புழு (2) கூடுப்புழு
(3) கூட்டுபுழு (4) கூட்டப்புழு

29. உள் + பக்கம்: (1) உள்ப்பக்கம் (2) உட்பக்கம்
(3) உப்பக்கம் (4) உற்பக்கம்

30. வெம்மை + நீர்: (1) வெம்நீர் (2) வென்னீர்
(3) வெந்நீர் (4) வெண்ணீர்

## பகுதி 11

1. பின்வரும் குறிப்புக்களை வழிகாட்டியாகக் கொண்டு ஒவ்வொன்றையும் ஏற்றவாறு விரித்துப் பந்தியாக்கிக் கட்டுரை எழுதுக.

(அ) (1) வாசிப்பு கல்வியைப் பெறும் வழிகளில் முதன்மையானது.
(2) கருத்தை விளங்கி வாசிக்கும் பழக்கம் இளமையிலிருந்து வளரவேண்டும்.
(3) வாசிப்புப் பழக்கத்தால் பொதறிவு வளர்வதோடு, பாடசம்பந்தமான விடயங்களை அறிந்து திறமை காட்ட முடியும்.
(4) பிழையின்றியும் விளக்கமாகவும் சுவையாகவும் பேச, எழுத வல்லமை பெறலாம்.
(5) மொழிப்பாடம் மாத்திரமன்றி ஏனைய பாடங்களை விளங்கிக் கொள்ளவும் வாசிப்பு அவசியம் - இப்பொருட் கூறுகளைக்கொண்டு "வாசிப்பினால் மாணவர் அடையும் பயன்கள்" என்ற தலைப்பில் எழுதுக.

(ஆ) (1) சிரமதானப்பணி நடந்த இடமும் அதன் தன்மையும் - (உ-ம்) வயல் நடுவில் உள்ள கோவில் ஒன்றுக்குப் பிரதான வீதியிலிருந்து பாதையமைத்தல்.
(2) பங்கு பற்றிய தாபனங்கள், பங்கு பற்றியோர் தொகை, அமைக்கப்பட்ட குழுக்கள்
(3) ஒவ்வொரு குழுவினரும் செய்த வேலைகள். (4) முடிவில் விளைந்த பயன் - இவற்றை மனதிற் கொண்டு "சிரமதானப் பணி - அறிக்கை" என்ற தலைப்பில் எழுதுக.

(இ) (1) தேவன் அதிபரின் மகனும் வகுப்புத்தலைவனும் (2) முரளியின் திறமை கண்டு பொறாமையால் தேவன் பல துன்பம் செய்தல். (3) செல்வாக்கு மிக்க தேவனைப்பற்றி யாரிடமும் முறையிடமுடியாமையால் துன்பங்களைச் சகித்தல், (4) ஒரு நாள் கடலில் நீந்திச் சென்ற தேவன் சுழியிலகப்பட்டு திக்குமுக்காடல் (5) அதைக்கண்ட முரளி ஒரு கணம் அவனைக் காப்பதா விடுவதா என மனப் போராட்டம் அடைதல். (6) அடுத்த கணம் இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றலும் அவனைக் காப்பாற்றலும் - இக்குறிப்புக்களைக் கொண்ட "இனியன செய்" என்ற தலைப்பில் ஒரு சிறுகதை.

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை காலத்தில் ஆங்கிலக் கல்வி முறை எவ்வாறிருந்தது? தமிழ்க் கல்வி முறை எவ்வாறிருந்தது? விளக்குக.

(ஆ) மண்டூர்க் கந்தசுவாமி கோவிலில் விசேட தினமாகக் கருதப்படுவது எது? அதுபற்றி ஆசிரியர் கூறுவன எவை? அக்காலத்தில் நிகழ்ந்த சிறப்பு நிகழ்ச்சியாக ஆசிரியர் குறிப்பிடுவது யாது?

(இ) "மண்டூர்த் தமிழ் என்றால் திருச்செந்தூர்ப் புராணம்" என்னும் பாடத்தின் வாயிலாகப் புலவர்மணியின் குடும்பநிலைபற்றி நீர் உணர்வனவற்றை எழுதுக.

3. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

"சென்றதினி மீளாது மூடரே நீர் எப்போதும் சென்றதையே சிந்தை செய்து கொன்றொழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாதீர் சென்றதனைக் குறித்தல் வேண்டாம். இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீரும் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர் தீமையெல்லாம் அழிந்துபோம் திரும்பி வாரா"

(பாரதியார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) (1) மூடருக்குக் கவிஞர் கூறும் நிரந்தரமான உண்மை எது?
(2) மூடர் கவலை கொள்வதற்குக் காரணம் யாதெனக் கூறுகிறார்?

(ஆ) (1) சிந்தை செய்தல் என்றால் என்ன?
(2) கவலைக்குக் கூறப்பட்ட அடைமொழி யாது?
(3) அவ்வாறு கூறப்படக் காரணம் யாதாகலாம்?
(4) கவலைக்குக் கூறப்பட்ட உவமானம் என்ன?
(5) பொதுத்தன்மை யாது?
(6) குமையாதீர் என்ற சொல் மூலம் நீர் உணர்வது யாது?

(இ) (1) மனத்தில் இருக்க வேண்டிய எண்ணம் யாது?
(2) அந்த எண்ணத்தின் சிறப்பு யாதாய் இருக்கலாம்?
(3) வாழவேண்டிய முறை யாது?
(4) தீமையழியும் முறை பற்றிக் கூறப்படுவது யாது?

(ஈ) இப்பாடலின் பொருளை உமது வசனநடையில் எழுதுக.

(உ) இப்பாடல் வாயிலாகக் கவிஞர் எத்தகைய மனநிலை கொண்டவர் என எண்ணுகிறீர்? அவரது மனநிலை பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பிடித்து வைத்த பிள்ளையாராக இருக்காமல் பாரதியாரின் கவிதைகள் நமது மனத்துள்ளே அசைவைத் தருகின்றன: ஆசையைத் தருகின்றன அற்பத்தை வெறுக்கச் செய்து நித்தியமான இன்பத்தில் நாட்டமிட வைக்கின்றன. காதல் இன்பத்தின் இரகசியங்களைச் சொல்லும் நாவாலே, கடவுள் இன்பத்தின் இரகசியங்களைப் பாரதிபாடல்கள் வியக்கின்றன உயரிய சிந்தனைகளை உள்ளபடி சொல்லுவது மட்டுமல்லாமல், உணர்ச்சியடையும் படியாக மட்டும் சொல்லாமல் மனிதகுலம் உய்யும்படியாகவும் சொன்னான் பாரதி, எத்தனை எத்தனை பாடல்களை மேற்கோள் காட்டலாம்: அரிய பொருள்களை உரிய பொருள்களை, உரிய முறையிற் சொல்லிப் போனான் நாம் மனத்தாற் பின்பற்றுவதற்காக, எழுத்தாலும் எண்ணத்தாலும் எழுச்சி பெறுவதற்காக அவ்வாறு சொன்னான்.

(சுகி சுப்பிரமணியன்)

(அ) (1) மனத்துள்ளே அசைவைத் தருதல் என்றால் என்ன?
(2) அற்பத்தை வெறுத்தல் என்றால் என்ன?
(3) உரையாசிரியர் பாரதி பாடலிற் காணும் நான்கு சிறப்பம்சங்கள் எவை?

(ஆ) (1) பாரதி பாடல்கள் வியக்கும் இரு பொருள்கள் எவை?
(2) உயரிய சிந்தனைகளைப் பாரதி எவ்வாறு கூறுகிறான்?

(இ) (1) பாரதி சொல்லிப்போன விடயங்கள் எவை?
(2) அவற்றை அவன் கூறக் காரணம் யாது?

(ஈ) இப்பந்தியின் ஆசிரியர் எத்தகைய மனவுணர்வை எம்மிடம் தோற்றுவிக்க முயலுகிறார்?

(உ) இப்பந்தியின் திரண்ட பொருளை 15 சொற்களில் சுருக்கி எழுதுக.

5. பின்வருந் தொடர்களின் பொருள் புலப்படுமாறு அவற்றை வாக்கியங்களில் அமைக்க.
(1) சம்பிரதாயச் சடங்கு (2) அஞ்சலி (3) அரங்கேற்றம் (4) பரமஇரகசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் :7

## செயல் : 13
## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. காந்தருவதத்தையிடம் இருந்த தனித்திறமை,
(1) நடனமாடல் (2) வாய்ப்பாட்டு (3) யாழ்வாசித்தல் (4) தண்ணுமை வாசித்தல்

2. காந்தருவதத்தையின் கணவன்,
(1) சீவகன் (2) ஸ்ரீ தத்தன் (3) கட்டியங்காரன் (4) கலுழவேகன்

3. யாழ்ப்போர் பற்றிய செய்தி கூறப்படும் நூல்,
(1) பெரியபுராணம் (2) சிலப்பதிகாரம் (3) மணிமேகலை (4) சீவகசிந்தாமணி

4. போர் முரசம் வைக்கப்படும் கட்டிலிற் படுத்துத்துயின்ற புலவர் யார்?
(1) கபிலபரணர் (2) மோசிகீரனார் (3) திருத்தக்கதேவர் (4) சீத்தலைச் சாத்தனார்

5. அக்காலத்துச் செழுங்கலை நியமங்கள் எனப்பட்டவை,
(1) பல்கலைக்கழகங்கள் (2) ஆச்சிரமங்கள் (3) கோவில்கள் (4) சமணப்பள்ளிகள்

2. தடித்த எழுத்திலமைந்த சொற்களின் ஒத்த கருத்துச்சொல்லைத் தெரிக.

6. இசைக்கருவி வகையில் **வாக்கியம்** என்பதும் ஒன்று,
(1) முழவு (2) தண்ணுமை (3) பேரியாழ் (4) குழல்

7. **காரிகையர்** புடைசூழ நளன் தேரேறிச் சோலையையடைந்தான்.
(1) சேவகர் (2) மெய்க்காப்பாளர் (3) நங்கையர் (4) நடனமகளிர்

8. காந்தருவதத்தை **செவிலித்தாயின்** அரவணைப்பில் வளர்ந்தாள்
(1) வளர்ப்புத்தாய் (2) பெற்றதாய் (3) சிறியதாய் (4) பெரியதாய்

9. **தண்ணுமை** முதலிய வாத்தியங்கள் முழங்க நடன நிகழ்ச்சி கால்கோளாயிற்று.
(1) முரசு (2) புல்லாங்குழல் (3) மத்தளம் (4) மகரயாழ்

10. யாழ்க்கலையிலே தனிச்சிறப்புப் பெற்ற **வித்தகனாய்ச்** சீவகநம்பி விளங்கினான்
(1) ஆலோசகன் (2) அரசன் (3) ஆசிரியன் (4) அறிஞன்

3. பின்வரும் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

11. கடற்கரைப் பகுதியில் வாழ்ந்து மீன் பிடித்தல் முதலிய தொழில் செய்வோர்,
(1) குறவர் (2) கடையர் (3) வலைஞர் (4) மறவர்

12. பல்வகை இசைக்கருவிகள் சீரான முறையில் ஒருமித்து வாசிக்கப்படும் நிகழ்வு,
(1) வங்கிய முழக்கம் (2) இசைக்கச்சேரி (3) ஆமந்திரிகை (4) வீணாகானம்

13. பெண்கள் எழுவரோ ஒன்பதின்மரோ சுற்றி நின்று கைகொட்டியாடும் ஆட்டம்,
(1) கூத்து (2) குரவை (3) குழுநடனம் (4) வசந்தன்

4. இடைவெளியை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

14. இலங்கை - இந்தியா ஒப்பந்தம் இனப்பிரச்சனைக்குரிய.......... எனக் கருதுவோர் பலர்
(1) பொதுத்தீர்வு (2) சனநாயகத்தீர்வு (3) வல்லரசுத்தீர்வு (4)இடைக்காலத்தீர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. அந்தத் தீவிபத்துக்கு காரணம் வன்செயலன்று ......... எனப் பொலிசார் அறிவித்தனர்.
(1) அசம்பாவிதம் (2) குண்டுவீச்சு (3) மின்சாரஒழுக்கு (4) எரியூட்டல்

16. வல்லரசு நாடுகளின் உச்சி மகாநாட்டில்......... ஆராயப்பட்டது.
(1) ஒற்றுமையின் அவசியம் (2) ஆயுதப்பரிகரணம் (3) மலைவளம் (4) விவசாய விருத்தி

5. கீறிட்ட இடங்களில் நிரப்பத்தக்க உவமைத் தொடரைத் தெரிக.

17. நன்னீரும் உவர்நீரும் கலந்த அந்த நீர் ............. காணப்பட்டது.
(1) விழலுக்கிறைத்த நீர்போல (2) கணிகை பெற்ற சிறுவன்போல
(3) இருதோணியிற் கால்வைத்ததுபோல (4) அடம்பன்கொடி திரண்டதுபோல

18. வீணாசக்கரவர்த்தி பாலசந்திரன் வீணைக்கச்சேரி .........மகிழ்ச்சி தந்தது.
(1) தேடிய பூண்டு காலில் அகப்பட்டதுபோல
(2) தென்றலும் குளிர்நிலவும்போல
(3) மழைமுகில் கண்ட மஞ்ஞைபோல
(4) தீந்தேன் அணிபெற ஒழுகியதுபோல

19. ஆசிரியர் என்ன கேட்போதிலும் அந்த மாணவன்......... பேசாது அசையாது இருந்தான்
(1) இடியேறுபட்ட நாகம்போல (2) இஞ்சி தின்ற குரங்குபோல
(3) பிடித்துவைத்த பிள்ளையார்போல (4) புலிக்கூட்டத்தில் அகப்பட்ட மான்போல

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக:

20. பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.
(1) பாடல் (2) போர்வை (3) ஆட்டம் (4) எழில்

21. காரணப்பெயர் அல்லாத சொல்,
(1) அணி (2) வான் (3) தொடை (4) கரைசல்

22. முன்னிலைப் பெயர் அல்லாதது,
(1) யாம் (2) நீர் (3) நீவிர் (4) எல்லீர்

23. விகுதி மேல் விகுதி பெற்று வந்த ஒரு சொல்,
(1) அது (2) அழகன் (3) இவை (4) வருவீர்கள்

24. பின்வருவனவற்றுள் இருதிணைப் பொதுப்பெயர் அல்லாதது,
(1) நோயாளி (2) நீ (3) தாய் (4) குருடு

25. ஆண் பெண் பொதுப்பெயர் அல்லாதது,
(1) ஊமை (2) மந்திரி (3) ஏழை (4) நொண்டி

26. ஒரு கிலோ திராட்சை பத்து ரூபா - இதில் திராட்சை என்பது
(1) பொருட்பெயர் (2) சினைப்பெயர் (3) பொருளாகுபெயர் (4) சினையாகுபெயர்

27. பின்வருவனவற்றின் நீட்டலளவை யாகுபெயர் வந்த வாக்கியம்,
(1) மூன்று கிலோ வாங்கி வா (2) பத்து பரப்பு விளைந்தது
(3) அரையில் புண் இருக்கிறது. (4) மதிய உணவுக்கு ஒரு கொத்து வேண்டும்

28. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் - இதில் வந்த 4 ஆம் வேற்றுமைப்பொருள்
(1) கொடை (2) நட்பு (3) தகுதி (4) முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 5 ஆம் வேற்றுமை ஒப்புப் பொருளில் வந்த வாக்கியம்,
(1) ஊரில் நீங்கினான்
(2) கன்னன் கொடையில் சிறந்தவன்
(3) தாயில் சிறந்தொரு கோவிலுமில்லை
(4) இலங்கையின் வடக்கே இந்தியா உண்டு.

30. அவனுடைய தலையில் சுமை இருக்கிறது.- இவ்வாக்கியத்தில் வந்த வேற்றுமைகள்
(1) 1ஆம் 2ஆம் 7ஆம் வேற்றுமை
(2) 1ஆம் 6ஆம் 7ஆம் வேற்றுமை
(3) 6ஆம் 7ஆம் வேற்றுமை
(4) 1ஆம் 7ஆம் வேற்றுமை

# பகுதி 11

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றிப் பந்தியாய் அமையக்கூடியவாறு பொருளைக் கூறுபடுத்திக் குறிப்புக்கள் அமைத்து எழுதுக.
(அ) சந்தை ஒன்றில் நீர் கண்ட காட்சிகள்

(ஆ) எனது மனம் கவர்ந்த பொழுதுபோக்கு

(இ) விடுதி மாணவன் ஒருவன் விடுதி வாழ்க்கை பற்றித் தந்தைக்கு எழுதும் கடிதம்.

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
(அ) "இருநிலங்கள் மயங்கிய இடத்திற் பிறந்து கணிகை பெற்ற சிறுவன் போன்றது இம்மரம்" இக்கூற்று (1) யாரால் (2) யாருக்கு (3) எச்சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது.

(ஆ) பெருஞ்சேரலிரும்பொறை தமிழ்ப்புலவர்களிடம் பெருமதிப்புடையவன் என்பதைப் புலப்படுத்தும் நிகழ்ச்சியை விபரித்தெழுதுக.

(இ) "சீவகநம்பி யாழ்க்கலையின் நுணுக்கமனைத்தும் அறிந்தவன்" - இக்கூற்றை விளக்கி எழுதுக.

3. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக .

கைலைமலையில் குழந்தைகள் குறும்பு

அரவனிடத்திலே ஐங்கரன் வந்துதான் "ஐய என்செவியை மிகவும்
ஆறுமுகன் கிள்ளினான்" என்றே சிணுங்கிடவும் அத்தன் வேலவனை நோக்கி
விரைவுடன் வினவவே, "அண்ணன் என் சென்னியில் விளங்குகண் எண்ணினன்"என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து "நீ அப்படியும் விகடம் ஏன்செய்தாய்" என
"மருவும் என் கைந்நீளம் முழம் அளந்தான்" என்ன, மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கி நின்மைந்தரைப் பாராய்"என
கருதரிய கடலாடை உலகுபல அண்டம் "கருப்பமாய்ப் பெற்ற கன்னி
கணபதியை அருகழைத்து அகமகிழ்வு கொண்டனள் களிப்புடன்,உமைகாக்கவே
(சிவப்பிரகாச சுவாமிகள்)

(அரும்பதம்: அரனவன், அத்தன் - சிவபெருமான்: ஐங்கரன், கணபதி, விநாயகர்: ஆறுமுகன், வேலவன், மயிலன், முருகன்: சென்னி - தலை: விகடம் - குறும்பு: மலையரசன்-இமயமலை அரசன், உமையவள் - பார்வதி: கடலாடை உலகு - கடலாகிய ஆடை உடுத்த உலகம்: உலகுபல அண்டம் - உலகத்தையும் அண்டத்தையும்)

(அ) (1) முதன்முதல் குறும்பு செய்தவன் யார்?
(2) அவன் செய்த வேடிக்கைச் செயல் என்ன?
(3) பதிலுக்கு அண்ணன் செய்தது என்ன?
(4) அண்ணன் செய்த குறும்புக்குப் பதிலாய்த் தம்பி செய்தது என்ன?

(ஆ) (1) முதலில் யார் யாரிடம் முறையிட்டார்?
(2) முறைப்பாட்டை விளங்கியவரின் மனப்பான்மை எப்படிப்பட்டது?
(3) விளக்கத்தின் முடிபு யாது?
(4) மயிலவன் நகைத்து நின்ற காரணம் யாதாய் இருக்கலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) (1) "நின்மைந்தரைப்பாராய்" என்பதன் உட்பொருள் யாது?
(2) உமையவள் இக்குறும்புக்கு எவ்வாறு முடிபு கண்டாள்?
(3) ஏன் அவ்வாறு செய்தாள் என எண்ணுகிறீர்?

(ஈ) இப்பாடலில் திரண்ட கருத்தை அமைத்து ஒரு குட்டி நாடகம் எழுதுக.

(உ) இப்பாடலைப் படிக்கும்போது உமது மனத்தில் தோன்றும் உணர்ச்சி யாது?

4. பின்வரும் ஓசையமைப்பில், "மழையும் வெள்ளமும்" என்ற தலைப்பில் அவ்வரிகளைத் தொடர்ந்து பாட இயற்றிப் பாருங்கள்.
(1) கருமையை அப்பியதுபோற் கார்மேகம் திரண்டெழுந்து கண்கூசக் கணநேரம் மின்னல் மின்னி மறைந்தொழிய
.........................................................
.........................................................

## பாடம் : 7

## செயல் : 14
## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.
1. காந்தருவ தத்தையின் தந்தை பெயர்,
(1) ஸ்ரீ தத்தன் (2) கலுழவேகன். (3) கட்டியங்காரன் (4) சீவகநம்பி

2. "குருதி வேட்கை உருகெழு முரசம்" எனக் கூறப்படுவது,
(1) வீரமுரசம் (2) காலைமுரசம் (3) கரடிகை (4) சல்லிகை

3. இளம் பெண்கள் இசைக்கருவி மீட்டும் கல்லோவியம் எங்குள்ளது?
(1) சோழநாட்டுப் பூம்புகார் (2) ஆந்திரநாட்டு அமராவதி
(3) பாண்டியநாட்டு மதுரை (4) சேரநாட்டு வஞ்சி

4. இசை மரபிலே தோற் கருவிகளுட் சிறந்தது,
(1) கரடிகை (2) பேரிகை (3) தண்ணுமை (4) உடுக்கை

5. சீறியாழின் மறுபெயர்,
(1) மகரயாழ் (2) பேரியாழ் (3) சகோடயாழ் (4) செங்கோட்டி யாழ்

2. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.
6. தமருகம் ஒலி செய்யத் தாண்டம் நடந்தது - தமருகம் என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) முரசு (2) உடுக்கு (3) பேரிகை (4) முழவு

7. நன்னூல்களை வாசிப்பது, அறிவு வேட்கை தணிவதற்குரிய வழி - வேட்கை என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) தாகம் (2) பசி (3) குறிக்கோள் (4) பெருவிருப்பு

8. சீவகநம்பி இசையினாற் கடலகம் வளைக்கலுற்றான் - கடலகம் என்பதன் ஒத்த கருத்துச்சொல்
(1) அவனி (2) கடற்பரப்பு (3) கடலலை (4) பொருப்பு

9. எச்செயலையும் திட்டவட்டமாகச் செய்வது அவன் வழக்கம் - திட்டவட்டம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) நேர்மை (2) ஒழுங்கீனம் (3) கவலையீனம் (4) பதற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இன்னார் இனியார் எனப் பட்சபாதம் காட்டுவது நீதிபதிக்கு அழகன்று - பட்சபாதம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) நீதி (2) அநீதி (3) சலனம் (4) நேர்மை

3. பின்வரும் முற்பகுதிகளுக்குப் பொருத்தமான பிற்பகுதிகளைத் தெரிக.
11. நாம் கற்கும் ஒவ்வொரு விடயமும்,
(1) எம்மால் கிரகிக்கலாம் (2) எம்மாற் கிரகிக்க வேண்டும்
(3) எம்மாற் கிரகிக்கப்படவேண்டியன. (4) எம்மாற் கிரகிக்கப்பட வேண்டியவை.

12. அவன் தந்தையின் அறிவுரையைக் கேட்டு
(1) நடந்தானன்று (2) நடந்தானல்ல (3) நடந்தானல்லன் (4) நடந்தேனல்லேன்

13. நீ எது சொன்னாலும் அதனை நான்
(1) கேட்கவில்லை (2) கேளாதிருந்தேன் (3) கேளேன் (4) கேட்டல் கூடாது

4. தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.
14. சுறாமீன் வடிவிலமைந்த யாழ்,
(1) மகரயாழ் (2) பேரியாழ் (3) செங்கோட்டியாழ் (4) சகோடயாழ்

15. யாழ் நரம்புகள் தொடுக்கப்பட்டு முறுக்கவும் தளர்த்தவும் உபயோகிக்கப்படும் ஆணி
(1) பத்தர் (2) தந்தி (3) மாடகம் (4) அணைசு

16. கொடும் பாலை நிலத்தில் வாழ்ந்ததாக இலக்கியங்கள் கூறும் மக்கள் கூட்டம்
(1) குறவர் (2) மறவர் (3) மள்ளர் (4) கடையர்

5. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.
17. "எள் வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்" முரசறைதல் என்னும் மரபுத்தொடரின் பொருள்,
(1) பறையடித்தல் (2) போருக்கு ஆயத்தமாதல்
(3) வீட்டுக்கு வீடு செல்லுதல் (4) செய்தி பரப்புதல்

18. துன்பங்களை அனுபவித்துப் பழக்கப்பட்டவர்கள் மேலும் வரும் துன்பத்தால் வருந்துவதில்லை என்னும் பொருளை விளக்கும் பழமொழி,
(1) பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்
(2) முட்டையிட்ட கோழிக்குத்தான் வருத்தம் தெரியும்.
(3) அறநனைந்தவனுக்குக் கூதலென்ன குளிரென்ன
(4) பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்.

19. அகதிகளுக்குக் கிடைத்த நிவாரண உதவி...... இருந்தது
இடைவெளியை நிரப்பத்தக்க உவமைத்தொடர்
(1) புதையல் காத்த பூதம் போல (2) விழலுக்கிறைத்த நீர்போல
(3) புயலில் அகப்பட்ட துரும்புபோல (4) வாடும் பயிர்க்கு வான்மழைபோல

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.
20. பின்வருவனவற்றில் வினையாலணையும் பெயர் இடம்பெற்ற வாக்கியம்
(1) நேற்று வந்தவனைக் கண்டேன் (2) நான் வருவது எப்படி உனக்குத் தெரியும்.
(3) நேற்று அவன் இங்கு வந்தான்
(4) நேற்று வந்திருந்த அவன் இன்று சென்றான்.

21. பின்வருவனவற்றில் வந்த காரண விடுகுறிப்பெயர்
(1) விலங்கு (2) முக்காலி (3) நாற்காலி (4) மீன்கொத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஆண்பாற் சொல்லாக மாற்றமுடியாத பெண்பாற் சொல்,
(1) தோழி (2) இடைச்சி (3) குறத்தி (4) தையல்

23. குணவாகு பெயர் இடம்பெறாத வாக்கியம்.
(1) மஞ்சள் அரைத்தாள் (2) வீட்டுக்கு வெள்ளையடித்தனர்
(3) நீலஞ் சூடினாள் (4) வளையல் நொருங்கி உடைந்தது

24 சீதை என்பவள் இராமனின் துணைவி - இதில் என்பவள் என்பது
(1) எழுவாய் (2) செயப்படுபொருள்
(3) 1 ஆம் வேற்றுமைச் சொல்லுருபு (4) உருபு

25. மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு கொண்ட வாக்கியம்,
(1) தேவன் தேவியுடன் சென்றான் (2) அவனுடைய வீடு அது
(3) கூலியின் பொருட்டு வேலை செய்தான் (4) புத்தகம் மேசையில் இருந்தது

26. கல்விக்கு உறுதுணை புரிவன நூல்கள் - இதில் வந்த 4 ஆம் வேற்றுமைப் பொருள்,
(1) கோடல் (2) பகை (3) நட்பு (4) தகுதி

27. சொல்லுருபு இல்லாத வேற்றுமை
(1) முதலாம் வேற்றுமை (2) 6 ஆம் வேற்றுமை
(3) 4 ஆம் வேற்றுமை (4) 2 ஆம் வேற்றுமை

28. திருவள்ளுவரைக் கரைத்துக் குடித்தான் - அதில் திருவள்ளுவர்
(1) பொருட்பெயர் (2) பொருளாகுபெயர்
(3) கருவிப்பெயர் (3) கருத்தாவாகுபெயர்

29. மகனே, நீ இரப்போர்க்கு இல்லை என்னாது பொருள் கொடு - இதில் வந்த வேற்றுமைகளின் தொகை
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

30. மூவிடத்துக்கும் பொதுவாய் வரும் பெயர்,
(1) யாம் (3) நீங்கள் (3) ஏழை (4) எல்லாம்

## பகுதி 11

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப் பொருட்கூறுகளாக வகுத்துக் குறிப்புக்கள் எழுதிய பின்னர் அவற்றைப் பந்தியாக அமைத்து 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.
(அ) கடல் நீர் முழுவதும் நன்னீராக மாறினால் .......கற்பனைக் கட்டுரை
(ஆ) "ஏர்ப்பின்னது உலகு" என்னும் தலைப்பில் விளக்கக் கட்டுரை,
(இ) உம்மை ஒரு பத்திரிகை நிருபர் எனப் பாவித்து தீ விபத்து ஒன்றைப்பற்றி பத்திரிகைச் செய்தி

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
(அ) (1) அக்காலத்துச் செழுங்கலை நியமங்கள் எவை? (2) அவ்வாறழைக்கப்படக் காரணம் யாது? (3) அக்காலச் செழுங்கலை நியமங்கள் எவை? (4) அவற்றின் கடமைகள் எவை?

(ஆ) விபுலானந்தர் யாழ் பற்றிக் கூறும் செய்தியில் (1) யாழ் செய்யப்படும் மரம் (2) யாழ்உறுப்புக்கள் (3) யாழ் வகைகள் என்பன பற்றிக் கூறப்படுவன யாவை?

(இ) வங்கியம் என்னும் குழல் பற்றிச் சிலப்பதிகாரம் கூறும் செய்தி யாது? பிற விபரங்கள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"கடல்நீரும் நீலவானும் கைகோக்கும் அதற்கிதற்கும்
இடையே கிடக்கும் வெள்ளம் எழில் வீணை அவ்வீணைமேல்
அடிக்கின்ற காற்றோ வீணை நரம்பினை அசைத்தின்பத்தைத்
வடிக்கின்ற புலவன் தம்பி வண்கடல் பண்பாடல் கேள்"

(பாரதிதாசன்)

(அ) (1) "கடல்நீரும் நீலவானும் கைகோக்கும்" என்பதால் நீர் உணரும் காட்சி யாது?
(2) "அது" எது? "இது" எது?
(3) இரண்டுக்கும் இடையேயுள்ள வெள்ளம் எது?

(ஆ) (1) எழில் வீணை போன்றது எது? (2) வீணைநரம்பு போன்றது எது?
(3) புலவன் யார்? (4) பண்பாடல் என்றால் என்ன?

(இ) (1) "தம்பி" என்னும் குறியீடு யாரைக் குறிக்கிறது?
(2) "தம்பியை" விளித்துப் புலவர் கூற விரும்புவது யாது?
(3) அதனை அவர் புலப்படுத்தும் முறை யாது?

(ஈ) இப்பாடலின் பொருளை உமது வசனநடையில் எழுதுக.

4. பின்வரும் தனிவாக்கியங்களை ஒரு முற்றுவினை கொண்ட வாக்கியமாக்கி எழுதுக.
(அ) பிரகலாதன் பரந்த புகழினையுடையவன்.
(ஆ) அவன் திருமாலை முழுமுதற் கடவுளாய் எண்ணி வணங்கினான்.
(இ) அதனைப் பொறுக்காத அவன் தந்தையான இரணியன் மனம் புழுங்கினான்.
(ஈ) அவன் பிரகலாதனைப் பலவாகிய கட்டுக்கள் பொருந்தக் கட்டினான்.
(உ) அதனால் அவன் உள்ளமும் உடலும் ஒடுங்கித் துன்புற்றான்.

5. பின்வரும் சொற்களின் பொருள் புலப்படுமாறு அவற்றை வாக்கியங்களை அமைக்க,
(அ) மணவணிநாள் (ஆ) மெய்ப்பாதுகாவலர்
(இ) அசம்பாவிதம் (ஈ) செழுங்கலை நியமம்

## பாடம் : 8 செயல் : 15

## பகுதி : 1

1. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. தமிழிலே தோன்றிய சிறந்த நீதிநூல்,
(1) ஆத்திசூடி (2) நல்வழி (3) திருக்குறள் (4) நாலடியார்

2. அசுரர்களின் குருவாய் விளங்கியவர்,
(1) வியாழபகவான் (2) சுக்கிராச்சாரியார் (3) சனீஸ்வரர் (4) சூரியபகவான்

3. அரசன் குடிகளுக்கு ஏவலாளர் தன்மையுடையவன் எனக் கூறப்படக் காரணம்,
(1) குடிகளுக்குத் தீங்கு வராது காத்தல்
(2) குடிகளின் சொற்கேட்டு ஆட்சி புரிதல்
(3) குடிகளிடம் அரசிறையாகிய வேதனம் பெறல்
(4) தானாக எதையும் செய்யமுடியாமை

4. அரசர்களுக்கு இரு கண்களாகக் கருதப்படுவன,
(1) ஒற்றும் நீதிநூலும் (2) செல்வமும் அமைச்சரும் (3) படையும் குடியும்
(4) கொடையும் வீரமும்

5. பாரதம் என்னும் இதிகாசத்தை முதன்முதல் எழுதியவர்,
(1) வியாழன் (2) வியாசர் (3) போதாயனர் (4) வான்மீகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

6. திருவள்ளுவர் திருக்குறளை யாத்து உலகுக்களித்தார் - யாத்தல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
(1) தொகுத்தல் (2) கோத்தல் (3) இயற்றல் (4) வகுத்தல்

7. பாரியின் வண்மையை மாரிக்கு ஒப்பிடுகிறார் கபிலர் - வண்மை என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) வள்ளன்மை (2) தன்மை (3) வன்மை (4) தொன்மை

8. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளின் கீர்த்தியை உலகெங்கும் பரப்பியது - கீர்த்தி என்பதன் ஒத்த கருத்துச்சொல்
(1) இயல்பு (2) துறவி (3) புகழ் (4)புலமை

9 தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன் - வைதல் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) பழித்தல் (2) வணங்குதல் (3) நிந்தனை (4) வாழ்த்தல்

10. பலநாளாகத் கரந்துறைந்த கள்வர் பிடிபட்டனர் - கரந்தல் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) மறைத்தல் (2) வெளிப்படல் (3) களவெடுத்தல் (4) காடுறைதல்

3. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக,

11. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து உறுப்புக்கள்,
(1) ஐம்பொறி (2) ஐம்புலன் (3) ஐம்பூதம் (4) ஐந்நிலம்

12. அரசுக்கு மக்கள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கைகொடுக்கும் பொருள்
(1) கட்டணம் (2) தீர்வை (3) சுங்கம் (4) அரசிறை

13. எவரும் அறியாதவகையிற் பிறநாட்டு இரகசியச் செய்திகளை அறிவோர்
(1) தூதுவர் (2) ஒற்றர் (3) அமைச்சர் (4) அதிகாரிகள்

4. இடைவெளியை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக

14. இராணுவ நடவடிக்கையாற் பாதிக்கப்பட்ட இடங்கள் விரைவில் .......செய்யப்படும் என அரசு அறிவித்தது
(1) மேல்நடவடிக்கை (2) புனரமைப்பு (3) கட்டடஅமைப்பு (4) சட்டநடவடிக்கை

15. சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்கள் மீது ........ தாக்கல் செய்யப்பட்டது
(1) செய்திப் பத்திரிகை (2) தண்டனை
(3) குற்றப்பத்திரிகை (4) விசாரணை

5. பின்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிக

16. ஒருமுறை பட்ட பொல்லாத அனுபவம் பின்னும் எச்சரிக்கையாய் இருக்கும்
(1) அடாது செய்தவர் படாது படுவர்
(2) பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும்
(3) சூடுகண்டபூனை அடுப்பங்கரை நாடாது
(4) அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்

17. வெளிப்படையாகத் தெரியும் உண்மையை அறிய விளக்கம் வேண்டியதில்லை
(1) காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்
(2) உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்
(3) கைப் புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா?
(4) கங்கையில் முழுகினாலும் காகம் அன்னமாகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. தக்க சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனைத் தவறவிடாது பயன்படுத்த வேண்டும்
(1) பாட்டு வாய்த்தால் கிழவியும் பாடுவாள்
(2) பானையில் இருந்தால் அகப்பையில் வரும்
(3) போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து
(4) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

6. சரியான விடையைத் தெரிந்து கீறிடுக.

19. வினைச்சொல் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது,
(1) பொருளின் புடைப்பெயர்ச்சியை உணர்த்துவது
(2) தன்னளவில் நின்று வாக்கியமாய் அமைதல்
(3) காலத்தை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ காட்டுதல்
(4) தனித்து நின்று பொருள் உணர்த்த முடியாதது

20. பின்வருவனவற்றில் பகுதி இரட்டித்துக் காலம் காட்டிய ஒரு சொல்
(1) நடந்தான் (2) தடுத்தான் (3) இட்டான் (4) தொடுத்தான்

21. பின்வருவனவற்றில் விகுதியாற் காலம் காட்டிய ஒரு சொல்
(1) செல்லும் (2) சென்ற (3) சென்றாள் (4) சென்று

22. பிடித்துக் கொண்டிருந்தான் - இச்சொல்லின் கால நுணக்கப் பிரிவு
(1) இறப்பிலிறப்பு (2) இறப்பில் நிகழ்வு (3) இறப்புத்தொடர்ச்சி (4)தனிஇறப்பு

23. பின்வருவனவற்றில் குறிப்புவினைமுற்றுக்கொண்டு முடிந்த வாக்கியம்,
(1) அழகி சிரித்தாள் (2) அவள் யாரும் விரும்பும் அழகி
(3) அழகியின் வதனம் வாடியது
(4) அவளுடைய அழகு எல்லாரையும் கவர்ந்தது

24. பிறவினை விகுதி பெறாது பிறவினையாய் அமைந்த சொல்
(1) எழுதுவித்தான் (2) உருட்டினான் (3) எழும்பினான் (4)கலைத்தான்

25. பின்வருவனவற்றில் இறந்தகாலச் செயப்பாட்டு வினைமுற்றுக் கொண்ட வாக்கியம்
(1) இராமனால் வில் முறிக்கப்பட்டது (2) கட்டுரை குமரனால் எழுதப்பெறும்
(3) வயல் உழவரால் உழப்படுகிறது (4) விதைக்கப்பட்ட நெல் சிறந்த இனம்

26. உயர்திணைப் பலர்பாலையும் அஃறிணைப் பலவின்பாலையும் உணர்த்தும்வினைமுற்று
(1) நடப்பன (2) நடப்பர் (3) நடப்ப (4) நடந்து

27. உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாய் வரும் வினைமுற்று
(1) விழுந்தாய் (2) விழுந்தது (3) விழுந்தார் (4) விழுந்தன

28 பின்வருவனவற்றில் வியங்கோள் வினைமுற்றுகொண்ட வாக்கியம்
(1) அறஞ்செய விரும்பு (2) ஆறுவது சினம்
(3) ஈவதுவிலக்கேல் (4) நன்றிமறவற்க

29. நிகழ்கால வினையெச்சம் கொண்ட வாக்கியம்
(1) அவன் படிக்க வந்தான் (2) அவன் உண்டு வந்தான்.
(3) சூரியன் உதிக்கத் தாமரை மலர்ந்தது (4) உழைத்தால் முன்னேற்றம் அடையலாம்.

30. வினைமுற்றாகவும் வினையெச்சமாகவும் வரத்தக்க ஒரு சொல்
(1) வளர்க (2) எழுப்பு (3) இல்லை (4) உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 11

1. பின்வருவனவற்றுள் ஒவ்றைப் பொருட்கூறுகளாக வகுத்து குறிப்புக்கள் எழுதியபின்னர் அவற்றைப் பந்தியாக அமைத்து 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.
   (அ) எமக்குத் தொண்டு புரியும் வாய் பேசாத நண்பர்கள்
   (ஆ) நீரும் அதனால் நாம் அடையும் பயன்களும்.
   (இ) தாவரங்கள் எவையும் பூக்காமல் விடுமானால்

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   (அ) (1) திருக்குறளின் சிறப்புக்களில் இரண்டு கூறுக.
   (2) திருக்குறளின் அமைப்பு முறை எத்தகையது?

   (ஆ) வடமொழி நீதிநூலான சுக்கிர நீதியிற் கூறப்படும் கருத்துக்களில் நான்கு கூறுக.

   (இ) சாத்தனார் என்னும் புலவர் செங்குட்டுவனுக்குக் கூறிய செய்தி யாது?

   (ஈ) திருக்குறளைத் தவிர்த்த தமிழிலுள்ள வேறு நீதிநூல்கள் ஏழு கூறுக.

3. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

"மஞ்சளாகிய மாடங்கள் தோறும் மயில்கள் போல்மடவார் கணஞ் சூழும்
அஞ்சரோருகப் பள்ளியிற் வான்சிறை அன்ன வன்னக்குழாம் விளையாடும்
துஞ்சுமேதி சுறாக்களைச் சீறச் சுறாக்களோடிப் பலாக்கனிகீறி
இஞ்சிவேலியின் மஞ்சளிற் போய்விழும் ஈழமண்டல நாடு எங்கள் நாடே"

(சோமசுந்தரப்புலவர்)

அரும்பதம்: மஞ்சு - மேகம்: மடவார் - பெண்கள்: கணம் - கூட்டம்: அஞ்சரோருகம்- அழகியதாமரை: பள்ளி - படுக்கை: சிறை - சிறகு: வண்ணம் - அழகு: குழாம் - கூட்டம்: துஞ்சும் - நித்திரை செய்யும்: மேதி - அருமை: இஞ்சிவேலியின் மஞ்சள்- இஞ்சிக்கு வேலியாய் அமைந்த மஞ்சள்: ஈழமண்டலம்- இலங்கை.

   (அ) (1) மாடங்கள் என்றால் என்ன? (2) அவை எத்தகையன? (3) அங்கு வாழும் மடவார் எத்தகையவர்? (4) இவற்றின் மூலம் அங்கு வாழ்வார் தன்மை பற்றி நீர் உணர்வது யாது?

   (ஆ) (1) அன்ன வன்னக்குழாம் என்பதன் மூலம் நீர் அறிவது யாது? (2) அது விளையாடும் இடம் எது? (3) மேதிகள் எங்கே துஞ்சியிருக்க வேண்டும்? (4) மேதிகள் சுறாக்களைக் கோபித்த காரணம் எதுவாயிருக்கும்? (5) சுறாக்களின் செயல் யாது?

   (இ) தாமரை, அன்னம், மேதி, சுறாக்கள் என்னுமிவை கூறப்படுவதன் மூலம் ஈழமண்டலம் பற்றி நீர் அறிவது யாது?

   (ஈ) ஈழமண்டல நாடுபற்றிக் கவிஞர் கூறுவனவற்றை உமது உரைநடையில் எழுதுக.

4. பின்வரும் உரைநடையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஈழநாட்டிலே பிறந்து, தமிழ் நாட்டிலே வாழ்ந்து தமிழ்த் தொண்டு புரிந்த பேரறிஞர் பலராவர். மெய்வருத்தம் பாராது ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து சிறந்த இலக்கண இலக்கிய நூல்களையும் முதன்முதலாக அச்சிட்டுத் தமிழகத்தாருக்கு வழங்கிய பெருமை யாழ்ப்பாணத்திலே தோன்றிய தாமோதரம்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். நற்றமிழ்ப் புலமையும் நாவன்மையும் ஒருங்கே வாய்ந்து தமிழ்மொழிக்கும் சிவநெறிக்கும் அரும்தொண்டு செய்த ஆறுமுகநாவலரை அறியாதார் தமிழ் கூறும் நல்லுலகத்தில் உளரோ? இந்நாவலர் ஈழநாட்டில் பிறந்து, தில்லைப்பதியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து எல்லையற்ற புகழ் எய்தினார். இன்னும் முத்தமிழில் நடுநாயகமாக விளங்கும் இசைத் தமிழுக்கு விழுமியதொண்டு செய்த விபுலானந்தரும் ஈழநாட்டவரே. பழந்தமிழ் நாட்டிலே சிறந்த இசைக் கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும் தமிழிசையின் நலத்தையும் ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெயரால் இசையுலகத்திக்கு அரியதொரு விருந்தளித்த அறிஞர் பெருமாளை அறியாதார் அறியாதாரே.

(ரா.பி.சேதுப்பிள்ளை)

(அ) (1) இவ்வுரைப்பகுதியிற் கூறப்படும் பெரியார் மூவர் யார்?
(2) அவர்கள் எந்நாட்டவர்?
(3) இதனைக் கொண்டு இவ்வுரைப்பகுதியாசிரியர் வாசகருக்கு உணர்த்த விரும்பிய பிரதான கருத்து யாதென அறிகிறீர்?

(ஆ) (1) தாமோதரம்பிள்ளை செய்த பெரும் பணி யாது? ஏன் அது சிறந்தது என மதிக்கப்படுகிறது?

(இ) (1) நாவலரின் பணி யாது? (2) விபுலானந்தரின் பணி யாது?
(3) விபுலானந்தரின் பணி எத்தகையது?

(ஈ) மேலேயுள்ள உரைப்பகுதியின் கருத்தை 20 சொற்களில் சுருக்கி எழுதுக.

## பாடம் : 8

## செயல் : 16

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. நாலடியாரில் தலையாயார் எதற்கு அஞ்சுவர் எனக் கூறப்படுகிறது?
(1) புறங்கூறல் (2) இன்னாச்சொல் (3) பழிச்சொல் (4) பொய்கூறல்

2. ஔவைப்பிராட்டியார் இயற்றிய நீதிநூல்களில் ஒன்று,
(1) வாக்குண்டாம் (2) நாலடியார் (3) திரிகடுகம் (4) சிறுபஞ்சமூலம்

3. நீதிநூல் எனப் பெரியோரால் வழங்கப்படுவது,
(1) அறம்பற்றி எழுந்த நூல்கள் (2) பொருட்பகுதிபற்றி எழுந்த நூல்கள்
(3) இன்பப்பகுதி பற்றி எழுந்த நூல்கள் (4) வீடு பற்றி எழுந்த நூல்கள்

4. திருக்குறளுக்கு உரை எழுதியவர்களிற் சிறந்தவர்,
(1) மணக்குடவர் (2) பரி (3) தாமத்தர் (4) பரிமேலழகர்

5. வடமொழியில் வழங்கும் நீதி நூல்களில் ஒன்று,
(1) உபநிடதம் (2) ஆகமம் (3) சுக்கிரநீதி (4) ஆரண்யகம்

2. பொருத்தமான விடையைத் தெரிந்து கீறிடுக.

6. மன்பதை காக்கும் மன்னன் நீதியைக் கண்போலப் போற்றல் வேண்டும் - மன்பதை என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) உலகம் (2) மக்களினம் (3) உயிரினம் (4) முனிவர்கூட்டம்

7. வேதனக் குறைவினால் அரச ஊழியர் வெறுப்படைந்தனர் - வேதனம் என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) வேலைநேரம் (2) விடுமுறை (3) சம்பளம் (4) வீட்டுவசதி

8. ஆள்வினையால் உயர்வடைந்தோர் உலகிற்பலர் - ஆள்வினை என்பதன் ஒத்தகருத்துச்சொல்,
(1) முயற்சி (2) செல்வம் (3) அதிகாரம் (4) கைத்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. முயற்சியுடையவர் வளமான வாழ்வு வாழ்வர் - வளம் என்பதன் எதிர்க்கருத்துச்சொல்,
(1) செல்வம் (2) குறைவு (3) மீடிமை (4) துன்பம்

10. அந்தக்குழந்தை செவிலித்தாயிடம் அன்பாய் இருந்தது - செவிலித்தாய் என்பதன் எதிர்க்கருத்துச்சொல்,
(1) பெற்றதாய் (2) பெரியதாய் (3) வளர்ப்புத்தாய் (4) சிறியதாய்

3. இடைவெளியில் நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

11. ................ கடையுட் சென்ற மைதிலி நெடுநேரமாயும் திரும்பவில்லை.
(1) புடவை (2) பிடவை (3) புடைவை (4) பிடைவை

12. ........... நல்லதொரு மருந்தாக மதிக்கப்படுகிறது.
(1) செவ்விளநீர் (2) செவ்விளனி (3) செவ்விளனீர் (4) செவ்விழனி

13. வயிற்றின் நடுப்பகுதியில் ............... உண்டு.
(1) பொக்குள் (2) கொப்புள் (3) தொப்புள் (4) கொப்பூழ்

4. தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

14. சுருங்கிய சொல்லில் பொருளாழம் மிக்கதாய்த் திட்பநுட்பத்தோடு கூறும் செய்யுள் வகை,
(1) வெண்பா (2) சூத்திரம் (3)குறள் (4) ஆத்திசூடி

15. கருத்தாழங் கொண்ட செய்யுள்களை விரித்து விளக்கி எழுதப்படும் விரிவுரை,
(1) கருத்துரை (2) பதவுரை (3) வியாகரணம் (4) சுலோகம்

16. கணக்கு வழக்கின்றிப் பணத்தைக் கண்டபடி செலவு செய்தவன்,
(1) உலோபி (2) வள்ளல் (3) ஊதாரி (4) குபேரன்

5. தடித்த எழுத்திலுள்ள மரபுத்தொடரின் பொருளைத் தெரிக.

17. கல்லூரியிற் கற்ற பாடங்களை அவன் **அசைபோட்டான்.**
(1) இரைமீட்டான் (2) மறந்தான் (3) மீண்டும் சிந்தித்தான் (4) விலக்கிவிட்டான்

18. அதிகாரி நெருக்கியதால் அவன் **நிலைதடுமாற்றம்** அடைந்தான்.
(1) கவலை (2) நல்லறிவு (3) கோபம் (4) கலக்கம்

19. நகுலன் **எடுத்தெறிந்து** பேசினான்.
(1) கோபத்தோடு (2) வெறுப்போடு (3) மதிப்பின்றி (4) பணிவோடு

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

20. நால்வகைச் சொற்களில் மொழிக்கு உயிர்நாடியாய் விளங்கும் சொல்,
(1) பெயர்ச்சொல் (2) வினைச்சொல் (3) இடைச்சொல் (4) உரிச்சொல்

21. வடமொழித் தாதுக்களின் அடியாகப் பிறந்த சொல் அல்லாதது,
(1) கோபித்தான் (2) இரந்தான் (3) வஞ்சித்தான் (4) சிந்தித்தான்

22. முற்றுவினை அல்லது வினைமுற்று என்றால்,
(1) செயலை உணர்த்துவது (2) காலம் காட்டுவது
(3) திணை, பால் முதலியன காட்டுவது (4) பயனிலையாய் வருவது

23. இடைநிலைபெற்றும் பகுதி இரட்டித்தும் இறந்தகாலம் காட்டக்கூடிய வினையடி,
(1) தொடு (2) பாடு (3) ஓடு (4) கொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. வியங்கோள் வினைமுற்று,
(1) விகுதியாற் காலங் காட்டும் (2) பகுதியாற் காலங் காட்டும்
(3) இடைநிலையாற் காலங் காட்டும் (4) குறிப்பாற் காலங் காட்டும்

25. நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டும் வினைமுற்று,
(1) நடப்பன (2) கொன்ற (3) குடிக்கும் (4) வாடியது

26. பின்வருவனவற்றில் வந்த பிறவினைச்சொல்,
(1) திரிந்தான் (2) ஆட்டினாள் (3) விரிந்தது (4) களித்தான்

27. உடன்பாட்டுப் பொருளையும் எதிர்மறைப் பொருளையும் தரும் வினைமுற்று,
(1) உண்ணீர் (2) செய்வீர் (3) படிப்பீர் (4) ஓடுங்கள்

28. பின்வருவனவற்றில் சரியான வாக்கியம் எனக் கொள்ளப்படுவது,
(1) அவன் நீர் குடிக்கும் (2) அவர் நீர் குடிக்கும்
(3) அவள் நீர் குடிக்கும் (4) அது நீர் குடிக்கும்.

29. இருதிணை ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான தெரிநிலை வினைமுற்று,
(1) வேறு (2) இல்லை (3) உண்டு (4) வெல்க

30. குறிப்பு வினைமுற்றாகவும் பெயரெச்சமாகவும் அமையத்தக்க சொல்,
(1) அழகிய (2) வந்த (3) பெரியன் (4) விழுந்து

## பகுதி 11

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றிக் குறிப்புக்கள் எழுதி அவற்றைப் பந்தியாக அமைத்து எழுதுக.
(அ) (1) "பாடுபட்டவன் பட்டம் பெறுவான்" என்னுந் தொனிப்பொருள் புலப்படக்கூடியதான குட்டிநாடகம்

(ஆ) பூரணைநாள் இரவில் நான் கண்ட காட்சிகள் பற்றி வருணனைக் கட்டுரை

(இ) உமது பாடசாலையில் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவில் நீர் நிகழ்த்திய வரவேற்புரை

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
(அ) (1) உறுதிப் பொருட்கள் நான்கும் எவை?
(2) நாட்டிற்கு அழகு செய்வன ஐந்து கூறுக.
(3) அமைச்சரியல்புகள் மூன்று கூறுக.

(ஆ) நாலடியார் கூறும் நீதி நெறிகளில் நான்கினை விளக்கிக் கூறுக.

(இ) (1) "நாடென்ப நாடா வளர்த்தன" என்பதன் கருத்து யாது?
(2) ஒருவன் சிற்சில செயல்களில் செவிடனாய், குருடனாய், ஊமையாய் இருத்தல் வேண்டும் என்பதன் கருத்து யாது?
(3) "இயல்வது கரவேல்" என்னும் ஆத்திசூடியின் கருத்து யாது?

(ஈ) குடிகளைக் காத்து அரசன் அரசிறை பெறுதற்குக் கூறப்பட்ட உவமானம் யாது?

3. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
"நல்லதோர் வீணைசெய்தே அதை
நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி - என்னைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே
சொல்லடி சிவசக்தி - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ"

(பாரதியார்)

(அ) (1) சுடர்மிகும் அறிவு என்பதனால் நீர் உணர்வது யாது?
(2) மாநிலம் பயனுற வாழ்தல் என்பதன் கருத்து யாது?
(3) நிலச்சுமையென வாழ்தல் என்பதன் மூலம் அறிவது யாது?

(ஆ) (1) கவிஞர் - தன்னைச் சிவசக்தி எவ்வாறு படைத்தாள் எனக் கூறுகிறார்?
(2) அவ்வாறு படைத்த சிவசக்தி தனக்கு எதைத்தரவில்லை என ஏங்குகிறார்?
(3) மேற்கூறிய வினாக்களுக்குரிய விடைகளை இசைத்துப் பார்க்கும்போது "நல்லதோர் வீணை" என்பதன் உவமேயம் யாது?
(4) "நலங்கெடப் புழுதியில் எறிதல்" என்பதன் உவமேயம் யாது?

(இ) (1) கவிஞர் தனது வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என விரும்புகிறார்?
(2) எவ்வாறு வாழக் கூடாது என எண்ணுகிறார்?
(3) இவற்றைக் கொண்டு கவிஞரின் மனப்பான்மை எப்படிப்பட்டது என உணர்கிறீர்?

(ஈ) (1) இப்பாடலின் மூலம் கவிஞர் எமக்கு உணர்த்த விரும்பும் கருத்து யாது?
(2) அக்கருத்தினைப் புலப்படுத்த அவர் கைக்கொண்ட முறை யாது?

4. (1) பின்வரும் பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியிட்டு எழுதுக.
(2) தன்கூற்றுப் பகுதியைப் பிறன்கூற்றாக்கி அப்பகுதியை எழுதுக.
கோவலன் மாதவியை நோக்கி அம்மா உங்கள் அன்பை நான் என்றும் மறவேன் இவள் வழி நடந்தறியாதவள் நேற்று வரை எவ்வளவோ வேதனைகளைச் சகித்து என்னோடு நடந்து வந்தாள் என்று கூறினான்

5. உம்மை நெசவாலை ஒன்றின் விளம்பரப்பகுதி அதிகாரியாய் எண்ணி அந் நெசவாலையில் உற்பத்தியாகும் துணி வகைகளின் சிறப்பமிசங்களைப் பாவனையா ளருக்குத் தெரிவிக்கும் பத்திரிகை விளம்பரம் ஒன்று எழுதுக.

## பாடம் : 9 செயல் : 17

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. சான்றோரான சங்ககாலப் புலவர்களிடம் இல்லாத பண்பு,
(1) மக்களிடம் பேரன்புடைமை (2) அரசரை அறநெறியிற் செலுத்துதல்
(3) உண்மை கூறும் மனத்திண்மை (4) பொருள் மிகக் கொடுப்போரைப் பாடுதல்

2. சங்ககாலத்து மன்னர் பெறுதற்கரிய பேறென மதித்தது,
(1) போரில் வாகை சூடல் (2) புலவர்களாற் பாடப்படும் புகழ்
(3) மந்திரிகள் சொற்கேட்டல் (4) நாட்டை வளமுடையதாக்கல்

3. கோப்பெருஞ் சோழனின் உயிர் நண்பராய் விளங்கிய புலவர்,
(1) பிசிராந்தையார் (2) கபிலர் (3) பரணர் (4) பூதத்தேவனார்

4. சங்ககாலச் செய்யுள்களில் சிறப்பிடம் பெறும் பொருள்,
(1) இயற்கைக் காட்சி (2) போர் பற்றிய செய்திகள்
(3) மக்களின் ஒழுக்கம் (4) மன்னர்களின் ஆட்சிமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சங்க காலத்து புலவர்கள் பலர் தோன்றியமைக்குக் கட்டுரையாசிரியர் கூறும் காரணம்,
(1) சமுதாயம் குழந்தைப் பருவத்தில் இருந்தமை
(2) கல்வியறிவு பெருகியிருந்தமை
(3) வசன நடையில் எழுதத்தெரியாமை
(4) பாடல்களைப் பொது மக்கள் விரும்பியமை

2. பொருத்தமான விடைகளைத் தெரிக.

6. புலவர்களின் மனோபாவம் அவர்களின் பாடல்களிற் புலப்படுகிறது, மனோபாவம் என்றால்,
(1) கற்பனை (2) வறுமை (3) புலமை (4) உள்ளப்பாங்கு

7. "யாதுமூரே யாவருங் கேளிர்" - கேளிர் என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) கேளுங்கள் (2) சுற்றம் (3) அயலார் (4) கேட்காதீர்

8. கொடிய துன்பம் நேரினும் துளங்குதல் அறியா உள்ளம் படைத்தோரும் உண்டு. துளங்குதல் என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
(1) நடுங்குதல் (2) ஏங்குதல் (3) கலங்குதல் (4) விலகுதல்

9. தவத்திரு தனியார் அடிகள் நூலறிவும் நுண்மதியும் உடையவர் - நூலறிவு என்பதன் எதிர்க்கருத்துச்சொல்,
(1) கேட்டறிவு (2) அனுபவஅறிவு (3) கலையறிவு (4) சமயஅறிவு

10. நிம்மதியாய் வாழ்ந்த குடும்பங்கள் கலவரத்தால் இடம்பெயர்ந்தன - நிம்மதி என்பதன் எதிர்க்கருத்துச்சொல்,
(1) துன்பம் (2) கொடுமை (3) கலக்கம் (4) இடையூறு

3. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக:

11. உவமை வெளிப்பட்டு நிற்க உவமேயம் தொக்கி நின்று குறிப்பாக பொருள் தருவது,
(1) உவமை (2) இறைச்சி (3) உள்ளுறை உவமம் (4) இலக்கணை

12. நாடக வழக்கினையும் உலகியல் வழக்கினையும் ஆதாரமாகக் கொண்டது,
(1) உரைநடைவழக்கு (2) மரபு வழக்கு
(3) பேச்சு வழக்கு (4) புலனெறி வழக்கு

13. ஐந்திணையில் ஒவ்வொரு திணைக்குமுரிய நிலமும் பொழுதும்,
(1) முதற்பொருள் (2) கருப்பொருள் (3) உரிப்பொருள் (4) துணைப்பொருள்

4. இடைவெளியை நிரப்புதற்கு பொருத்தமான தொடரைத் தெரிக.

14. ................ திருவிழாப் பார்த்துப் பகல் முழுதும் நித்திரை செய்தேன்.
(1) பெரிய பெரிய (2) விடியவிடிய (3) செல்லச்செல்ல (4) வண்ணவண்ண

15. சிலருக்கு எதிர்த்துப் பேசினால் ................ என்று கோபம் வந்து விடும்.
(1) கடகட (2) முணுமுணு (3) சுறுசுறு (4) குறுகுறு

16. மகனை இழந்த தாய் ............... காணப்பட்டாள்.
(1) ஈடும் எடுப்புமாய் (2) திட்டவட்டமாய்
(3) பாயும் படுக்கையுமாய் (4) கண்ணீரும் கம்பலையுமாய்

5. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

17. அவன் எல்லோருக்கும் எடுப்பார் கைப்பிள்ளையாய் விளங்கினான். எடுப்பார் கைப்பிள்ளை என்னும் மரபுத்தொடரின் பொருள்,
(1) எல்லோருக்கும் நல்லவன் (2) எளிதில் வசப்படக்கூடியவன்
(3) குழந்தைப்பிள்ளை (4) சொன்னதை மாத்திரம் செய்பவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அந்தப் பாட்டின் பொருள் உள்ளங்கை நெல்லிக்கனி போல,
(1) விளக்கமின்றி இருந்தது (2) உருண்டையாய் இருந்தது
(3) அழகாய் இருந்தது (4) விளக்கமாய் இருந்தது

19. "வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது" என்னும் பழமொழியின் பொருள்,
(1) நன்மை செய்பவருக்குத் தீமை செய்தல்
(2) வளர்த்த மறி மார்பிற் பாயாது.
(3) கடாவுக்குச் செல்லம் கொடுக்கக் கூடாது.
(4) கடாவை ஒழுங்காக வளர்க்க வேண்டும்.

6. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

20. பின்வருவனவற்றில் வேற்றுமைத் தொகையாய் அமைந்த தொடர்,
(1) பாலைக் குடித்தாள் (2) எனது புத்தகம்
(3) சிவன் மைந்தன் (4) கையாற் செய்தான்

21. பின்வருவனவற்றில் வந்த 6 ஆம் வேற்றுமைத்தொகை,
(1) பொற்சங்கிலி (2) மலையுச்சி (3) எங்களூர் (4) பூஞ்சோலை

22. காற்சங்கிலி என்பது எத்தனையாம் வேற்றுமைத் தொகை,
(1) 3 ஆம் (2) 4 ஆம் (3) 6 ஆம் (4) 7 ஆம் (வேற்றுமைத்தொகை)

23. சுடுசோறு என்பது,
(1) வேற்றுமைத்தொகை (2) வினைத்தொகை
(3) பண்புத்தொகை (4) உவமைத்தொகை

24. பின்வருவனவற்றுள் வந்த பண்புத்தொகை,
(1) இன்சொல் (2) விளைவயல் (3) தந்தைதாய் (4) மட்குடம்

25. பின்வருவனவற்றுள் வந்த உவமைத்தொகை,
(1) செந்தாமரை (2) தேன்மொழி (3) பாடம்படி (4) வேற்கை

26. இன்பதுன்பம் என்பது,
(1) வினைத்தொகை (2) உண்மைத்தொகை
(3) உவமைத்தொகை (4) பண்புத்தொகை

27. பின்வருவனவற்றில் வந்த இடைச் சொற்றொடர்,
(1) இனியவன் வந்தான் (2) வந்த மகன் (3) இனிச்செய்வேன் (4) மாவட்டம்

28. பென்னம் பெரிய என்பது,
(1) இரட்டைமொழி (2) இணைமொழி (3) அடுக்குமொழி (4) அடுக்கிடுக்குமொழி

29. பின்வருவனவற்றில் வந்த இரட்டைமொழி,
(1) மெல்லமெல்ல (2) கலகல (3) வெள்ளைவெளேர் (4) மூலைமுடுக்கு

30. பின்வருவனவற்றில் வந்த மரபுத்தொடர்,
(1) அறக்கப்பறக்க (2) விழலுக்கிறைத்த நீர்போல
(3) சிட்டாய்ப் பறத்தல் (4) பச்சைப்பசேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி: 11

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றிய குறிப்புக்கள் எழுதி, அவற்றைப் பகுதிகளாக அமைத்து கட்டுரை எழுதுக.

(அ) நான் வாழும் கிராமம் அல்லது நகரம்

(ஆ) முயற்சி திருவினையாக்கும் என்னும் கருத்தைத் தொனிப்பொருளாகக் கொண்ட சிறுகதை

(இ) கொட்டும் மழையில் நான் நனைந்தபோது கண்ட காட்சிகளும் பெற்ற அனுபவங்களும்

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) சங்கப் புலவர்களிடம் காணப்பட்ட உயர்பண்புகள் ஐந்தைக் கூறுக.

(ஆ) சங்கப் புலவர்க்கும் அரசர்க்கும் இருந்த அன்புப்பெருக்கைக் காட்டும் நான்கு உதாரணங்கள் கூறுக.

(இ) (1) ஐந்திணை எவை? (2) ஒவ்வொன்றுக்குமுரிய நிலங்கள் எவை?
(3) ஒவ்வொன்றுக்குமுரிய உரிப்பொருள்கள் எவை?

(ஈ) சங்ககாலச் செய்யுள்களின் மொழிநடை பற்றி ஆசிரியர் கூறும் கருத்துக்கள் எவை?

3. பின்வரும் உரைப்பகுதியை படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

எல்லோருக்கும் பொதுவான ஆசார ஒழுக்க வழக்கங்களை அனுசரித்து ஒரு பிரதேசத்தில் ஒன்றாகக் கூடிவாழும் வாழ்க்கை ஒருவகையான சமூக உணர்ச்சியை உண்டாக்கிற்று. இவ்வாறு வாழ்ந்தோர் தமது வீடு, தமது குடும்பம், தமக்கு உணவும் ஒதுக்கிடமும் கொடுக்கும் ஊர் என்றெல்லாம் அபிமானமும் பற்றுங் கொள்ளத் தொடங்கினர். இந்த உணர்ச்சிதான் தேசாபிமானம் என்ற பற்றுக்கு அத்திவாரம். தமது ஊர், தமது கிராமம் மற்றைய ஊர்களிலும் கிராமங்களிலும் பார்க்க விசேடமானதென்று எண்ணும் எண்ணமே சமூக உணர்ச்சியாகும். இதுதான் நாளடைவில் நாகரிகம் முதிர முதிர கிராமாபிமானமாகவும் தேசாபிமானமாகவும் வளர்ச்சியடைகிறது. மனிதன் தனது சகாக்களோடு ஒத்துழைக்கப் பழகிக் கொண்டான். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வே நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்னும் உண்மையை உணர்ந்தான். அயலாருக்கு இதமாகவும் எல்லாரோடும் ஒற்றுமையாகவும் பரஸ்பரம் சகிப்புத்தன்மையுடனும் வாழ்வது தான் வாழ்வு என்பதை அனுபவ வாயிலாக அறிந்தான்.

(அ) தேசாபிமான வளர்ச்சியின் முதலிரு படிகளும் எவை? (2) இம்மூன்றும் வளரக் காரணம் யாது?
(3) தேசாபிமானத்துக்கு அத்திபாரம் யாது?

(ஆ) (1) சமூக உணர்ச்சி என்றால் என்ன? (2) சமூக உணர்ச்சியின் ஆரம்பநிலை யாது?

(இ) (1) அனுபவவாயிலாக மனிதன் அறிந்துகொண்ட வாழ்வு எத்தகையது?
(2) அதிலுள்ள முக்கிய அம்சம் என்ன?

(ஈ) இவ்வுரைப்பகுதியின் ஆசிரியர் எமக்கு உணர்த்த விரும்பும் கருத்து யாது?

(உ) இவ்வுரைப் பகுதியைச் சுருக்கி 20 சொற்கள் அளவில் எழுதுக.

4. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

"நல்லவர்க்கு மழை பெய்யும்: நாய்களெனில் நிலங்காயும்: நன்மை இல்லாக்
கல்மனத்தர் நடந்து சென்றால் முள்ளாக மாறிவிடும் கடலின் பஞ்சும்:
சொல்லறியா இயேசுபிரான் தோள்களிலே சிலுவையினைச் சுமந்தபோது
கொல்லவரும் பாம்புகளும் புலிகளுமே பெருங் கண்ணீர் கொட்டிற்றம்மா"
(இயேசு காவியம் - கவிஞர் கண்ணதாசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) (1) மழை பொழிவதற்கு இங்குக் கூறப்படும் காரணம் யாது?
(2) நிலங்காய்வதற்குக் கூறப்படும் காரணம் யாது?
(3) நாய்கள் என்ற சொல்லால் நீர் அறிவது யாது?

(ஆ) (1) கடற்பஞ்சு எத்தகையது? (2) முள்ளின் தன்மை என்ன? (3) கடற்பஞ்சு எப்போது முள்ளாக மாறும்? இதிலிருந்து நீர் உணர்வது யாது?

(இ) (1) பாம்பு, புலி என்பவற்றின் குணம் என்ன? (2) அவை ஏன் பெருங் கண்ணீர் கொட்டின?
(3) அவை கொட்டிய கண்ணீரில் நீர் காணும் உணர்வு என்ன?
(4) அவை கூடக் கண்ணீர் கொட்டின என்பதால் நீர் உணர்வது யாது?
(5) "சொல்லறியா" என்னும் அடைமொழியால் நீர் விளங்குவது யாது?

5. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.
(அ) நான் நினைத்தேன் மழையினால் மரங்களில் ஏற்படும் சப்தம் என்று நினைத்தேன்.
(ஆ) என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் நிகழ்ந்தது.

## பாடம் : 9

## செயல் : 18

## பகுதி : 1

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. குழந்தையிடத்தும் புலவனிடத்துங் காணப்படும் சிறப்பியல்பு அல்லாதது,
(1) பொருளில் ஆசை கொள்ளல் (2) இயற்கைக் காட்சியைக் கண்டு மகிழல்
(3) சொல்லையும் உணர்ச்சியையும் அவதானித்தல்
(4) கற்பனையுலகிற் சஞ்சரித்தல்

2. அகத்திணைச் செய்யுள்களின் உயிராய் விளங்குவது,
(1) கருப்பொருள் (2) உரிப்பொருள் (3) முதற்பொருள் (4) இறைச்சிப்பொருள்

3. உள்ளுறை உவமத்தின் தன்மை,
(1) உவமை வெளிப்பட்டு நிற்றல் (2) பொருள் வெளிப்பட்டு நிற்றல்
(3) உவமையும் பொருளும் வெளிப்பட்டு நிற்றல்
(4) உவமை வெளிப்பட்டு நிற்க பொருள் தொக்கு நிற்றல்

4. சங்கப்புலவர்களின் பண்பட்ட வாழ்க்கையை அறிய உதவுவன,
(1) புறநானூறு முதலிய தொகை நூல்கள் (2) ஐம்பெருங் காப்பியங்கள்
(3) பாரதமும் இராமயணமும் (4) திருக்குறள் முதலிய நீதிநூல்கள்

5. செய்யுள் இலக்கியம் முதலில் தோன்ற அதனைத் தொடர்ந்து உரைநடை இலக்கியம் தோன்றக்காரணம்,
(1) செய்யுள் இயற்றுவது இலகுவாயிருந்தமை
(2) உரைநடை ஆக்குவது கடினமாயிருந்தமை
(3) சமுதாயம் குழந்தைப்பருவத்திலிருந்தமை
(4) சமுதாயம் மாற்றமடையாதிருந்தமை

2. பின்வருவனவற்றுள் ஒரு சொல் ஒத்த கருத்துச்சொல் அல்லாதது, அதனைத் தெரிக.

6. (1) நிவர்த்தி (2) கழுவாய் (3) உபசாரம் (4) பிராயச்சித்தம்
7. (1) கீர்த்தி (2) இகழ் (3) இசை (4) புகழ்
8. (1) நூன்முகம் (2) பாயிரம் (3) முகவுரை (4) அணிந்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

9. கோமானுக்குக் கோமாட்டிபோல பேரனுக்கு,
(1) பேத்தி (2) பேர்த்தி (3) பேரன் (4) பெயரள்

10. பாலகனுக்குப் பாலகி போலக் பாணனுக்கு,
(1) பாணன் (2) பாணினி (3) பாடிணி (4) பாடினி

11. களிறுக்குப் பிடிபோலக் கலைக்கு,
(1) பிணை (2) பெட்டை (3) பேடு (4) பிணா

4. பின்வருந் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

12. முற்காலத்தில் வாழ்க்கையில் நாணத்தகும் நிலை வரும்போது உயிர் துறக்கக்கருதி உணவு, நீர் முதலியன இன்றி இருக்கும் நிலை,
(1) சத்தியாக்கிரகம் (2) உபவாசம் (3) வடக்கிருத்தல் (4) பழிகிடத்தல்

13. ஐந்திணையில் மரம், விலங்கு, மனிதர் முதலிய பொருள்கள்,
(1) முதற்பொருள் (2) கருப்பொருள் (3) உரிப்பொருள் (4) உயிரினம்

14. குறிஞ்சித்திணைக்குரிய உரிப்பொருள்,
(1) புணர்தல் (2) பிரிதல் (3) இருத்தல் (4) இரங்கல்

5. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

15. விளக்கை வாயினால் ஊதி,
(1) நூத்தான் (2) நூர்த்தான் (3) நூற்றான் (4) நூற்ரான்

16. வறுமையால் வாடிய அந்தக் குடும்பத்துக் குழந்தைகள்,
(1) வாடிவதங்கி (2) கறுகிக் கறுத்து (3) எலும்புந்தோலுமாய்
(4) கொழு கொழுத்துக் காணப்பட்டன

17. யார் துணையுமின்றி,
(1) நடுநடுங்கி (2) தன்னந்தனியாய்
(3) தட்டுத்தடுமாறி (4) ஓட்டமும் நடையுமாய் காட்டு வழிச் சென்றான்

18. இரவில் நுளம்பு காதில்,
(1) கலகலத்தது (2) முணுமுணுத்தது (3) குறுகுறுத்தது (4) கிணுகிணுத்தது

19. அவன், (1) விடியவிடிய (2) முற்றுமுழுக்க
(3) அரைகுறையாக (4) மெல்லமெல்ல உண்மையே பேசினான்.

6. சரியான விடையின் கீழ்க கீறிடுக.

20. பின்வருவனவற்றில் வேற்றுமை விரியாய் அமைந்த தொடர்,
(1) நற்குணம் (2) தலைமயிர் (3) கைவிரல் (4) எனதுவீடு

21. பின்வருவனவற்றில் வந்த 3ஆம் வேற்றுமைத்தொகை,
(1) பூஞ்சோலை (2) மட்குடம் (3) மரவேர் (4) மலைக்குகை

22. பின்வருவனவற்றில் வந்த வினைத்தொகை,
(1) நீலவானம் (2) மலர்ப்பாதம் (3) சோறுகறி (4) செய்தொழில்

23. நானிலம் என்பது, (1) வேற்றுமைத்தொகை (2) வினைத்தொகை
(3) பண்புத்தொகை (4) உவமைத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பின்வருவனவற்றில் வந்த பெயரெச்சத்தொடர்,
(1) வந்துபோ (2) கூடிக்குலாவி (3) மலர்ந்தமலர் (4) மலர்மலர்ந்தது

25. பின்வருவனவற்றில் வந்த மரபுத்தொடர்,
(1) அமிழ்தினுமினிய தமிழ்மொழி (2) நீலவானப் பந்தர்
(3) சப்புச்சவர் (4) கிள்ளுக்கீரை

26. பின்வருவனவற்றில் வந்த இணைமொழித்தொடர்,
(1) நெறுநெறு (2) விழலுக்கிறைத்தல் (3) வெள்ளைவெளேர் (4) சீருஞ்சிறப்பும்

27. "பச்சைப்பசேல்" என்பது,
(1) மரபுத்தொடர் (2) அடுக்கிடுக்குத்தொடர் (3) அடுக்குத்தொடர் (4) இரட்டைக்கிளவி

28. பின்வருவனவற்றில் வந்த அடுக்குத்தொடர்,
(1) கடகட (2) சிறியசிறிய (3) சின்னஞ்சிறிய (4) சந்துபொந்து

29. கற்கோயில் என்பது,
(1) வேற்றுமைத்தொகை (2) பண்புத்தொகை (3) வினைத்தொகை (4) உம்மைத்தொகை

30. அடுத்தது காட்டும் பளிங்குபோல அவன் மன எண்ணத்தை முகம் காட்டியது இதில் வந்த அணி
(10) உருவகம் (2) உவமை (3) தன்மை நவிற்சி (4) தற்குறிப்பேற்றம்

## பகுதி 11

1 பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றிக் குறிப்புக்கள் எழுதி அவற்றைப் பந்தியாக விரித்துவிளக்கி எழுதுக

(அ) விஞ்ஞானந் தந்த வாழ்க்கை வசதிகள் பற்றிய கட்டுரை

(ஆ) நீர் கண்ட மறியற் போராட்டம் பற்றிய பத்திரிகைச் செய்தி

(இ) இளைப்பாறும் ஆசிரியர் ஒருவரின் பாராட்டு விழாவில் நீர் ஆற்றிய உரை

2 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

(அ) சங்கச் செய்யுள்களில் மொழிநடை இயல்புபற்றி ஆசிரியர் கூறுவன யாவை?

(ஆ) (1) உள்ளுரை உவமத்தின் இயல்பு யாது?
(2) அது கையாளப்பட்ட முறை யாது?

(இ) சங்ககாலப் புலவர்களின் பா வளத்துக்குரிய காரணிகள் யாவை?

(ஈ) சங்ககாலச் செய்யுள் மரபு மாற்றமடையக் காரணமாயிருந்த சமூகக் காரணிகள் யாவை?

3. பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

"சுடர்த் தொடீஇ காற் கேளாய் தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து விரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தோமா" இல்லீரே
உண்ணுநீர் வேட்டேன்" என வந்தாற்கு அன்னை
"அடர் பொற் சிகரத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா" என்றாள்: என யானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அறியாது சென்றேன், மற்றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய், இவன் ஒருவன் செய்ததுகாண்" என்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
"உண்ணுநீர் விக்கினான்" என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற்று என்னை
கடைக்கண்ணாற் கொல்வான் போல் நோக்கிநகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்"

(அரும்பதம்: சுடர்தொடிஇ என்பது அளபெடை: தோழியைக் குறித்தது: ஒளி பொருந்திய வளையலை அணிந்தவள்: ஆடும் - விளையாடும், சிற்றில் - மணல்வீடு: காலில் சிதையா - காலாற் சிதைத்து: அடைச்சிய கோதைபரிந்து - கூந்தலில் இறுகச் செருகிய மாலைகளை அறுத்து: வரிப்பந்து - பெண்கள் விளையாடும் வரியுடைய பந்து: நோதக்க - வருந்தத்தக்க செயல்கள்: சிறுபட்டி - குறும்புப்பையன்: மேலோர் நாள் - முன்பொருநாள்: இருந்தோம்ஆ - இருந்தபோது: இல்லீரே - வீட்டுக்காரரே: வேட்டேன் - விரும்பினேன்: என வந்தாற்கு - என்று சொல்லிக்கொண்டு வந்தவனுக்கு: சிகரம் - பாத்திரம், செம்பு: வாங்கி - வார்த்து: சுடர்இழாய் - ஒளி பொருந்திய ஆபரணம் அணிந்தவளே: தலைவியைக் குறித்தது: தன்னை - அவனை: நலிய - இழுத்துவருத்த: தெருமந்திட்டு - மயங்கி: படர்தர - அவ்விடம் வர: புறம் - முதுகு: நீவ - தடவ: நகைக்கூட்டம் - பலவகைச்சிரிப்பு (அரும்புச்சிரிப்பு: புன்னகை: பூஞ்சிரிப்பு.)

(அ) (1) தோழியும் தலைவியும் தெருவில் விளையாடியபோது எப்பருவத்தினராய் இருந்தனர்?
(2) அவர்கள் விளையாடிய விளையாட்டுக்கள் இரண்டு கூறுக.
(3) சிறு பட்டி செய்த செயல் என்ன?

(ஆ)(1) மேலோர் நாள் சிறுபட்டி எங்கே வந்தான்?(2) என்ன கேட்டான்?
(3) அப்போது வீட்டில்இருந்தவர்கள் யாவர்?
(4) தாய் கூறியது என்ன?

(இ) (1) சிறு பட்டிக்குத் தண்ணீர்த் தாகம் இல்லையென்பது எவ்வாறு தெரிகிறது?
(2) தலைவி தெருமந்தது ஏன்? (3) தெருமந்தவள் கூறியது யாது?
(4) தாய் வந்ததும் கூறியது யாது? (5) இவ்விரு கூற்றுக்களிலிருந்தும் தலைவி சிறுபட்டி ஆகிய இவர்கள் தொடர்பு எப்படிப்பட்டதாயிருக்கலாம்?

(ஈ) (1) அன்னை செய்தது யாது? (2) ஏன் அவ்வாறு செய்தாள்? (3) தாய் அறியாமல் சிறுபட்டி செய்தது என்ன? (4) "கடைக்கண்ணால் கொல்வான் போல்" என்ற தொடரால் விளங்குவது யாதாயிருக்கலாம்? (5) "கள்வர் மகன்" என்று தலைவி கூறியதன் உட்பொருள் யாதாயிருக்கலாம்?

4. பின்வரும் குறிப்புக்களைக் கொண்டு மேலே தரப்பட்ட செய்யுள் நிகழ்ச்சிகளை அமைத்து நாடகம் ஒன்று உங்கள் வசனநடையில் விரித்து எழுதுக.

காட்சி: 1 பாத்திரங்கள்: தலைவி, தோழி, தலைவி தோழிக்குத் தங்கள் சிறு பிள்ளை விளையாட்டையும் சிறுபட்டியின் செயலையும் கூறல்

காட்சி: 2 பாத்திரங்கள்: தலைவி, சிறுபட்டி, அன்னை, சிறுபட்டி தண்ணீர் கேட்டல்: தாய் கூற்று தலைவி செயல்

காட்சி: 3 காட்சி 2 இல் உள்ள பாத்திரங்கள் தலைவியலறல்: தாய் வருகை:தலைவி கூற்று: தாயின் செயல்: சிறுபட்டியின் செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைக்குறிப்புக்கள்

(ஒவ்வொரு செயலிலும் பகுதி 1 க்குரிய விடைகளும் பகுதி 11 இல் சில வினாக்களுக்குஉரிய வழி காட்டற் குறிப்புக்களும் தரப்படுகின்றன. அவை மாணவரால் விரித்து விளக்கி எழுதப்படவேண்டியன. சிக்கலற்ற சில வினாக்களுக்கு விடை தரப்படவில்லை. அவற்றை மாணவர் சுயமாகவே சிந்தித்து விளக்கி எழுதுதல் இயலும். இம்முறையால் மாணவரின் சிந்தனைத் திறனும் கிரகிக்கும் ஆற்றலும் கற்பனை வளனும் வளர்ச்சி அடையலாம்)

## பகுதி: 1 செயல்: 1

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 3. (4) | 4. (2) | 5. (4) | 6. (3) | 7. (2) |
| 8. (3) | 9. (3) | 10. (2) | 11. (2) | 12. (4) | 13. (3) | 14. (1) |
| 15. (4) | 16. (4) | 17. (3) | 18. (2) | 19. (4) | 20. (3) | |

## பகுதி 11

1. (அ) மரவேர் மரங்களை உறுதியாகத் தாங்குதல்: உணவு தேடியளித்தல்: மண்ணரிப்பைத் தடுத்தல்: சில வேர்கள் மருந்தாக அமைதல்.

(ஆ) இரவு நேரத்தில் முகிற்குப்பைகளற்ற நிர்மலமான வானம் பலவகையாகத் தோற்றமளித்தல்: பூமியை மூடிப் போடப்பட்ட நீலப்பந்தர்: நட்சத்திரங்கள் வெள்ளிப்பொட்டுக்கள், பென்னம் பெரிய நீலக் கம்பளம், நட்சத்திரங்கள் முல்லை மலர்கள் நீலப்பெருங்கடல்: சந்திரன் வெள்ளி ஓடம்.

(இ) அவிழ்த்து விடப்பட்ட கன்று துள்ளி வருதல்: தாயின் குரல்: கன்று முட்டி முட்டிப் பால் குடித்தல்: வாலையாட்டல்: தாய் நக்கி அன்பைக் காட்டல்.

3. (உ) பாயிழைப்பவனைச் சந்தித்து உரையாடிய சம்பவத்தைக் காட்டல்.

4. (ஈ) மனித வாழ்வின் நிலையற்ற தன்மை
(உ) றோசா மலரின் காலை, மாலை நிலைகளை உதாரணங்காட்டி விளக்கல்.

5. (அ) "பழிக்குப்பழி வாங்காவிட்டால், என்பேரை மாற்றி அழை" என்று சிறைச்சாலை செல்பவன் கூறினான். அதனைக் கேட்ட அவன் பகைவன், "நீ என்ன செய்வாய்? அதனை நானும் காணத்தான் இருக்கிறேன்" என்றான்.

(ஆ) பழிக்குப்பழி வாங்காவிட்டால் தன்பேரை மாற்றி அழைக்கும்படி சிறைச்சாலை செல்பவன் கூறினான். அதனைக் கேட்ட அவன் பகைவன் அவன் என்ன செய்வான் எனவும் அதைத்தான் காண இருந்தான் எனவும் கூறினான்.

## பகுதி: 1 செயல்: 2

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (4) | 2. (2) | 3. (3) | 4. (1) | 5. (3) | 6. (4) | 7. (2) |
| 8. (3) | 9. (4) | 10. (1) | 11. (3) | 12. (1) | 13. (4) | 14. (2) |
| 15. (3) | 16. (4) | 17. (3) | 18. (4) | 19. (2) | 20. (4) | |

## பகுதி 11

1. (அ) அந்த உணவுச்சாலை ஊழியர்கள் அனைவரும் தலைமயிரை நீளமாக வளர்த்து அடிக்கடி வாரிவிட்டுக்கொண்டிருந்தனர்: பலர் உணவில் தலைமயிர் உண்டென முறையிட்டனர். வருமானமும் வீழ்ச்சியடைந்தது: முதலாளி ஊழியரிடம் கோவிலில் முடியிறக்குவது பெரும் புண்ணியம் எனப் பல மேற்கோள் காட்டி உபதேசித்தல்: பணங்கொடுத்து மொட்டையடிக்கச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) குருடனுக்கு வெள்ளைப்பிரம்பு வழிகாட்டி: கண்ணைப்போல அது பயன்படுவது இல்லை. வெள்ளைப் பிரம்பைத் தட்டித்தட்டி நடத்தல்: வேலியோரம் செல்லுதல்: நடுத்தெருவுக்கு வருதல்: சிறிதுநேரம் சீராக நடத்தல்.

(இ) அடித்தது என்பதன் எழுவாய் "கல்" கல் அ·றிணை: உயிரற்றது அது எவ்வாறு அடிக்க முடியும்? கல் "சிவனே" என்று ஓரமாகக் கிடந்தது நாம் கவனம் இல்லாமல் நடந்து காலைக் கல்லில் அடித்தோம் அதனால் நாமே குற்றவாளி.

## பகுதி: 1 — செயல்: 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (1) | 3. (4) | 4. (2) | 5. (1) | 6. (2) |
| 7. (2) | 8. (3) | 9. (3) | 10. (1) | 11. (3) | 12. (2) |
| 13. (4) | 14. (1) | 15. (3) | 16. (4) | 17. (3) | 18. (2) |
| 19. (1) | 20. (4) | 21. (2) | 22. (2) | 23. (3) | 24. (1) |
| 25. (3) | 26. (3) | 27. (4) | 28. (2) | 29. (3) | 30. (4) |

## பகுதி 11

1 (இ), (அ), (உ), (ஈ), (ஆ), 11 - (அ), (ஈ), (அ), (இ), (உ)

2. (ஈ) உருவகம்: எழினிபோன்ற இருள் - இது உவமை: உவமையில் உவமானம் முன்னும் உவமேயம் பின்னும்வரும். உருவகத்தில் உவமேயம் முன்னும் உவமானம் பின்னும் வரும். விரியிருள் உவமேயம்: எழினி - உவமானம்: பிறவும் அவ்வாறே.
3. (அ) தாய், "மகளே" நீ இந்த ஏழையை ஏன் துன்புறுத்துகிறாய்? "ஏழை அழுத கண்ணீர் கூரியவாளை ஒக்கும்" என்பதை நீ அறிவாயா?" என்று கேட்டாள்.

## பகுதி: 1 — செயல்: 4

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (4) | 2. (2) | 3. (3) | 4. (1) | 5. (4) | 6. (3) | 7. (4) |
| 8. (2) | 9. (4) | 10. (2) | 11. (3) | 12. (4) | 13. (4) | 14. (1) |
| 15. (3) | 16. (2) | 17. (4) | 18. (2) | 19. (4) | 20. (1) | 21. (3) |
| 22. (4) | 23. (1) | 24. (2) | 25. (4) | 26. (2) | 27. (4) | |
| 28. (1) | 29. (3) | 30. (3) | | | | |

## பகுதி 11

1. 1 (ஈ), (ஆ), (ஊ), (அ), (உ), (இ)
(11) (உ), (இ), (எ), (ஈ), (ஆ), (அ), (ஊ)

## பகுதி: 1 — செயல்: 5

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (4) | 3. (3) | 4. (2) | 5. (1) | 6. (3) | 7. (2) |
| 8. (1) | 9. (1) | 10. (3) | 11. (4) | 12. (3) | 13. (2) | 14. (2) |
| 15. (1) | 16. (3) | 17. (4) | 18. (2) | 19. (3) | 20. (2) | 21. (1) |
| 22. (2) | 23. (2) | 24. (3) | 25. (2) | 26. (1) | 27. (4) | 28. (1) |
| 29. (2) | 30. (3) | | | | | |

## பகுதி: 11

4. உயர்ந்த மலையின் உச்சியிலுள்ள கருமுகில்களைத் தடுத்து நிறுத்தும் தன்மை கொண்ட அடர்ந்த காட்டினால் அந்த மலையில் நித்தநித்தம் மழைபொழிய, பலபல ஆறுகள் உற்பத்தியாகி ஓடும்.

## பகுதி: 1 — செயல்: 6

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (4) | 2. (3) | 3. (1) | 4. (4) | 5. (2) | 6. (2), | 7. (3) |
| 8. (1) | 9. (4) | 10. (2) | 11. (3) | 12. (1) | 13. (4) | 14. (3) |
| 15. (3) | 16. (2) | 17. (4) | 18. (4) | 19. (4) | 20. (3) | 21. (1) |
| 22. (3) | 23. (2) | 24. (1) | 25. (2) | 26. (4) | 27. (1) | 28. (1) |
| 29. (3) | 30. (2) | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி: 11

4. (உ) சூரியனும் பூமியும் ஒருவர் மீதொருவர் கொண்ட தூய்மையான பெருங்காதல் எமது உள்ளத்தில் வியப்பையும் களிப்பையும் ஒருசேர உண்டாக்குகின்றன. ஆதித்தாய் தந்தையான பூமியையும் சூரியனையும் கவிஞர் அஞ்சலி செய்வது போன்று நாமும் பக்தியுணர்வோடு அஞ்சலி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் தோன்றுகிறது.

## பகுதி: 1 செயல்: 7

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (4) | 3. (1) | 4. (3) | 5. (3) | 6. (3) | 7. (3) |
| 8. (4) | 9. (4) | 10. (4) | 11. (3) | 12. (4) | 13. (2) | 14. (1) |
| 15. (2) | 16. (3) | 17. (3) | 18. (2) | 19. (4) | 20. (3) | 21. (2) |
| 22. (2) | 23. (1) | 24. (2) | 25. (4) | 26. (3) | 27. (1) | 28. (3) |
| 29. (4) | 30. (2) | | | | | |

## பகுதி: 11

4. விளம்பரங்கள் பொருளின் சிறப்பியல்புகளைக் கவர்ச்சியுடன் சொல்வனவாய் அமைதல் வேண்டும், பாவனையாளர் அப்பொருளை வாங்கித் தூண்டும் வகையில் அமைதல் வேண்டும்.

இதோ! உலகப் பேரழகி கூறுவதைக் கேளுங்கள்; "நான் அழகு ராணிப்போட்டியில் முதலிடம் பெற உற்ற தோழியாய் விளங்கியது சாந்தி சவர்க்காரம் அதற்கு என்நன்றி" ஆம்! உலகத்துப் பேரழகிகளும் சினிமாத்தாரகைகளும் தினமும் உபயோகிப்பது சாந்தி சவர்க்காரமே!

மனத்தைக் கொள்ளைகொள்ளும் மணம்: நாளில் ஒருமுறை "சாந்தியோடு நீராடினால் போதும் நாள்முழுவதும் அதன் சுகந்தம் உங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கும்! மனச்சாந்தியும் உங்களை விட்டகலாது!..... இவ்வாறு தொடர்ந்து எழுதுக.

## பகுதி: 1 செயல்: 8

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (3) | 3. (1) | 4. (3) | 5. (4) | 6. (3) | 7. (4) |
| 8. (2) | 9. (1) | 10. (2) | 11. (3) | 12. (4) | 13. (4) | 14. (1) |
| 15. (3) | 16. (4) | 17. (2) | 18. (3) | 19. (4) | 20. (2) | 21. (1) |
| 22. (4) | 23. (2) | 24. (4) | 25. (3) | 26. (2) | 27. (1) | 28. (4) |
| 29. (2) | 30. (1) | | | | | |

## பகுதி: 1 செயல்: 9

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 3. (3) | 4. (1) | 5. (3) | 6. (2) | 7. (1) |
| 8. (2) | 9. (3) | 10. (4) | 11. (4) | 12. (3) | 13. (4) | 14. (2) |
| 15. (1) | 16. (2) | 17. (3) | 18. (2) | 19. (4) | 20. (3) | 21. (2) |
| 22. (1) | 23. (2) | 24. (3) | 25. (4) | 26. (2) | 27. (3) | 28. (1) |
| 29. (3) | 30. (3) | | | | | |

## பகுதி: 11

3.(அ) (1) தமிழிசையின் பெருஞ்சிறப்பு (11) இராவணனுக்கும் அகத்திய முனிவருக்குமிடையே நடந்த இசைப்போட்டியை எடுத்துக்காட்டுவதன் மூலம் புலப்படுத்துகிறது.

5. பண்டைக்காலத்திலிருந்த சான்றோர்களான பெண்பாற் புலவர்களிற் சிறந்தவரான ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் மன்னனைப்பற்றி பாடிய பாடல்கள் புறநானூறு என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி: 1 செயல்: 10

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (1) | 2. (4) | 3. (2) | 4. (4) | 5. (2) | 6. (3) | 7. (1) |
| 8. (3) | 9. (2) | 10. (2) | 11. (2) | 12. (1) | 13. (2) | 14. (1) |
| 15. (2) | 16. (3) | 17. (2) | 18. (3) | 19. (2) | 20. (2) | 21. (4) |
| 22. (3) | 23. (1) | 24. (2) | 25. (3) | 26. (4) | 27. (1) | 28. (4) |
| 29. (1) | 30. (2) | | | | | |

2. (ஆ) காட்சி 5 இல் இடம்பெறவேண்டிய புறநானூற்றுப்பாடல் எண்: 50

3. (ஈ) மானிட வாழ்க்கை நிலையில்லாதது. (2) நீரலையால் அலையும் சிறு துரும்பொன்றை உவமையாக்கிப் புலப்படுத்துகின்றார். (3) மனிதன் பிறந்து வாழும் காலத்தில் இன்பதுன்பங்களை அனுபவித்து மரணம் அடைவர். மீண்டும் பிறந்து அவ்வாறே உழல்வர் இதன்மூலம் சோகவுணர்வு புலப்படுகிறது.

## பகுதி: 1 செயல்: 11

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (1) | 2. (3) | 3. (2) | 4. (4) | 5. (2) | 6. (3) | 7. (4) |
| 8. (3) | 9. (2) | 10. (3) | 11. (1) | 12. (2) | 13. (4) | 14. (4) |
| 15. (4) | 16. (1) | 17. (2) | 18. (4) | 19. (3) | 20. (3) | 21. (4) |
| 22. (2) | 23. (2) | 24. (4) | 25. (3) | 26. (3) | 27. (3) | 28. (1) |
| 29. (3) | 30. (1) | | | | | |

## பகுதி 11

3. (உ) (1) பூரணசந்திரன் கீழ்த்திசையிலே தோன்றுதல். (2) வானப்பின்னணியை வருணித்தும் பூரண சந்திரனை வெள்ளி வெண்கும்பத்துக்கு உவமித்தும் கருத்தைப் புலப்படுத்துகிறார்.

## பகுதி 1 செயல் 12

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (2) | 3. (1) | 4. (4) | 5. (3) | 6. (3) | 7. (2) |
| 8. (2) | 9. (1) | 10. (4) | 11. (2) | 12. (4) | 13. (2) | 14. (3) |
| 15. (4) | 16. (4) | 17. (3) | 18. (2) | 19. (4) | 20. (3) | 21. (2) |
| 22. (2) | 23. (4) | 24. (1) | 25. (1) | 26. (4) | 27. (4) | 28. (3) |
| 29. (2) | 30. (3) | | | | | |

3. (ஊ) (1) சென்றவற்றை எண்ணிக் கவலை கொள்ளாதவர்: நிகழ்காலத்தில் இன்பமுடன் வாழவேண்டுமென்னுங் கருத்துக் கொண்டவர்.

(2) கவலையின்றி மனிதன் இன்பமாக வாழவேண்டிய முறையை அவர் காட்டுவதால் அவர் கொள்கை எமக்குப் புத்தி புகட்டுவதாகவும் ஏற்கக் கூடியதாகவும் இருக்கிறது.

## பகுதி: 1 செயல்: 13

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (1) | 3. (4) | 4. (2) | 5. (3) | 6. (4) | 7. (3) |
| 8. (1) | 9. (3) | 10. (4) | 11. (3) | 12. (3) | 13. (2) | 14. (4) |
| 15. (3) | 16. (2) | 17. (2) | 18. (4) | 19. (2) | 20. (4) | 21. (2) |
| 22. (1) | 23. (3) | 24. (1) | 25. (4) | 26. (3) | 27. (2) | 28. (3) |
| 29. (3) | 30. (3) | | | | | |

## பகுதி 11

1. (அ) சந்தை ஒன்றில் நீர்கண்ட காட்சிகள்: (1) சந்தை எது வென்பதும் சென்ற காரணமும் (2) நாற்றிசைகளிலிருந்தும் விற்பனைப் பொருள்கள் வந்து சேரும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சந்தையினுள்ளே பலவகைப் பொருள்களும் பல்வேறு பகுதிகளிற் காணப்பட்ட காட்சி (4) வாங்குவோர் விற்போருக்கிடையே நடைபெற்ற உரையாடல்; ஆரவாரம் (5) சந்தை கலைந்த பின் கண்ட காட்சி.

(ஆ) எனது மனங்கவர்ந்த பொழுதுபோக்கு ; (1) பொழுது போக்குகளில் நல்லனவும் தீயனவும் உண்டு: முத்திரை சேகரித்தல், வீட்டுத்தோட்டம், வாசிப்பு, தேனீ வளர்ப்பு முதலியன நல்லன. இவற்றுள் எதை விரும்புகிறீர் என்பது (2) விரும்பும் காரணங்கள். (3) விரும்பும் பொழுது போக்கின் செயல் முறைகள் (4) அதனால் உண்டாகும் பலவகை நன்மைகள்.

(இ) விடுதி மாணவன் ஒருவன்....கடிதம் (1) கடிதவுறுப்புக்களும் விளிப்பும் (2) குறித்த நேரத்தில் குறித்த கருமங்களைச் செய்யும் ஒழுங்குமுறை: படிப்பில் ஆர்வமுண்டானமை (3) பணத்தின் அருமையையும் குடும்பநிலையையும் உணர்ந்து கவனமாகப் படித்தல் (4) பெற்றோர், சகோதரரோடு பழகமுடியாமை (5) முடிப்பு

## பகுதி 1 செயல் 14

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 3. (2) | 4. (3) | 5. (4) | 6. (2) | 7. (4) |
| 8. (1) | 9. (2) | 10. (4) | 11. (4) | 12. (3) | 13. (3) | 14. (1) |
| 15. (3) | 16. (2) | 17. (4) | 18. (3) | 19. (4) | 20. (1) | 21. (3) |
| 22. (4) | 23. (4) | 24. (3) | 25. (1) | 26. (3) | 27. (4) | 28. (4) |
| 29. (3) | 30. (4) | | | | | |

## பகுதி: 11

1.(அ) கடல் நீர் முழுவதும் ........ கற்பனைக் கட்டுரை ; (1) நன்னீர் இன்மையால் வருந்தும் மக்களும் தண்ணீர்ப்பற்றாக்குறையால் வாடும் மக்களும் களிப்படைவர் (2) வானம் பார்த்துப் பயிர் செய்யப்படும் இடங்களிற் பல போக வேளாண்மை செய்யப்படும். (3) எந்திரங்கள் மூலம் நீர்ப்பாய்ச்சிப் பாலைவனங்கள் சோலை வனமாகும்.(4) உணவுப்பற்றாக்குறை நீங்கும் (5) உப்பு, தங்கம் போல விலை மதிப்புக்குரிய பொருளாகும்.

(ஆ) "ஏர்ப்பின்னது உலகு" (1) ஏர் - கலப்பை; இங்கு ஏராற் செய்யப்படும் உழவுத் தொழிலைக் குறிக்கும் "சுழன்றும் ஏர்ப்பினது உலகு: அதனால் உழந்தும் உழவே தலை" என்னும் திருக்குறள் விளக்கம் (2) உலக மக்களனைவர்க்கும் உணவளிப்பது (3) உழவே மற்றை எல்லாத் தொழிலுக்கும் ஆதாரமானது.

(4) பெரும் பிணியான பசிப்பிணியைப் போக்குவது

(5) உழவு நடைபெற்றால்தான் கலைகள் வளரும்; அறம் நிலவும்; செல்வம் கொழிக்கும்

(இ) பத்திரிகைச்செய்தி: (1) தீ விபத்து நிகழ்ந்த இடமும் அதற்கான காரணமும் (2) பாதிக்கப்பட்ட வீடுகள், பிறதாபனங்கள் (3) பாதிக்கப்பட்ட மக்களின் தொகை(4) நாசமடைந்த பொருளின் உத்தேச மதிப்பீடு (5) நிவாரண உதவி

4. பரந்த புகழினையுடைய பிரகலாதன் திருமாலை முழுமுதற் கடவுளாய் எண்ணி வணங்கியதைப் பொறாத அவன் தந்தையான இரணியன் மனம் புழுங்கிப் பிரகலாதனைப் பலவாகிய கட்டுக்கள் பொருந்தக் கட்ட, அதனால் அவன் துன்புற்றான்.

## பகுதி 1 செயல் 15

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (2) | 3. (3) | 4. (1) | 5. (2) | 6. (3) | 7. (1) |
| 8. (3) | 9. (4) | 10. (2) | 11. (1) | 12. (4) | 13. (2) | 14. (2) |
| 15. (3) | 16. (3) | 17. (3) | 18. (4) | 19. (4) | 20. (3) | 21. (1) |
| 22. (2) | 23. (2) | 24. (4) | 25. (1) | 26. (3) | 27. (1) | 28. (4) |
| 29. (3) | 30. (4) | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 11

1. (அ) எமக்கு வாய்பேசாத நண்பர்கள். (1) ஆரம்பம்: எமது வாழ்க்கை கூட்டுறவு கொண்டது. அக்கூட்டுறவில் மக்கள் மாத்திரமன்றிச் சில விலங்குகளும் உதவுதல் அவற்றில் சில: மாடு, எருமை, ஆடு, ஒட்டகம் முதலியன (2) அவற்றின் பொதுவான சிறப்பியல்புகள் (3) எமது வாழ்வு வளமுற அவை செய்யம் உதவிகள் (4) அவற்றோடு கொள்ளும் அன்புத்தொடர்பு: அவற்றினைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமையும் முறையும்

(ஆ) நீரும் அதனால் நாம் அடையும் பயன்களும்: (1) நீரின்றி உயிரினம் வாழமுடியாமை, (2) நீரின் பலவகைப் பயன்கள்: உடல் ஆரோக்கியம், விவசாயம் , சுத்தம் செய்தல், நீர்வாழ் உயிரினங்கள் வாழ உதவுதல் முதலியன. (3) நீரை உபயோகிக்கும் முறை: வீணாக்காமை, சுத்திகரித்து அருந்துதல்

(இ) தாவரங்கள் எவையும் பூக்காது விடுமானால் ...... (1) தாவரங்களின் பெரும் பயன்: அவை உற்பத்தியாக்கியாய் அமைதல் (2) அவை பரவும் முறை (3) பூவின் முதன்மை (4) பூவில்லையேல் இனப்பெருக்கம் இல்லை. (5) சீவராசிகள் வாழ முடியாமை (6) மழையின்மை (7) வாயுமண்டலம் அசுத்தமடைதல் (8) உயிர்கள் வாழமுடியாத இடமாதல்

## பகுதி 1

## செயல் 16

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (1) | 3. (2) | 4. (4) | 5. (3) | 6. (2) | 7. (3) |
| 8. (1) | 9. (3) | 10. (1) | 11. (3) | 12. (3) | 13. (4) | 14. (2) |
| 15. (3) | 16. (3) | 17. (3) | 18. (4) | 19. (3) | 20. (2) | 21. (2) |
| 22. (3) | 23. (1) | 24. (2) | 25. (3) | 26. (2) | 27. (1) | 28. (2) |
| 29. (4) | 30. (1) | | | | | |

## பகுதி 11

1. (அ) பாடுபட்டவன் பட்டம் பெறுவான் (குட்டி நாடகம்): காட்சி:1 பாத்திரங்கள் சிவகாமி: தாய்: தன் மகன் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்னும் பெருவிருப்பு கொண்டவள். நாதன்: மகன் - உத்தியோகம் தேடிக் களைத்து எந்தத் தொழிலும் செய்யலாம் என்ற எண்ணம் உடையவன்: இருவரிடையேயும் நிகழும் உரையாடல். காட்சி:2 பாத்திரங்கள்: நாதன், பெனடிக்ற்: நாதனின் பாலிய நண்பன்: கடற்றொழில் செய்து நல்வாழ்வு வாழ்பவன்: இருவரும் சந்தித்து உரையாடல். பெனடிக்ற் எல்லாத் தொழிலும் சிறந்தது என்றும் பாடுபட்டால் நல்வாழ்வு வாழலாம் எனவும் கூறல். நாதன் நண்பனுடன் கடற்றொழில் செய்யத் தீர்மானித்தல்.

காட்சி:3 பாத்திரங்கள்: சிவகாமி, நாதன். நாதன் சிவகாமியிடம் தனக்கு உத்தியோகம் கிடைத்ததாகவும் அது இரவு வேலை எனவும் கூறல். சிறப்பாக உடை உடுத்து இரவில் புறப்படல். உடை மாற்றி நண்பனுடன் கடலுக்குச் செல்லுதல். காட்சி:4 சிவகாமி, நாதன். நாதன் தாயிடம் மாதந்தோறும் பெரும் தொகைப்பணம் கொடுத்தல் நல்வாழ்வு வாழல் உண்மையை வெளிப்படுத்தல்.

(ஆ) (3) பூரணை இரவில் நான் கண்ட காட்சிகள்: (1) கீழ்வானில் சந்திரன் உதித்தல் (2) வானத்து விண்மீன்களும் சந்திரனும்: முகில்களும் சந்திரனும்(3)தாவரங்கள் நிலவொளியிற் பளபளத்தல்: சில மலர்கள் மலர்தல் (4) சிறுவர் பாட்டு பாடி மகிழ்தல்.

(இ) உமது பாடசாலையில் ...... வரவேற்புரை: (1) விளிப்பு: தலைவர், பிரதம அதிதி, ஆசிரியர், சபையோர் முதலியோரை விளித்தல் (2) பிரதம அதிதியின் பெருமைகளைக் கூறி வரவேற்றல் (3) பெற்றோர் செய்த உதவிகளைக் கூறி வரவேற்றல் (4) பழைய மாணவர் சேவைகளைச் சுட்டிக்காட்டி வரவேற்றல் (5) ஏனையோரை வரவேற்றல்

(ஆ) நல்லதோர் வீணை உவமானம் நல்லறிவுடைய மனிதன் உவமேயம் (4) நலன்கெடப் புழுதியில் எறிதல் உவமானம்: அறிவுடைய மனிதன் ஆற்றலின்றி சமூகத்திற்கு பயன்படாது வாழ்தல் - உவமேயம்(இ) (3) அறிவும் வல்லமையும் உடையவராய்ச் சமூகத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் மனப்பான்மை கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 1 செயல் 17

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (4) | 2. (2) | 3. (1) | 4. (2) | 5. (1) | 6. (4) | 7. (2) |
| 8. (3) | 9. (2) | 10. (3) | 11. (3) | 12. (4) | 13. (1) | 14. (2) |
| 15. (3) | 16. (4) | 17. (2) | 18. (4) | 19. (1) | 20. (3) | 21. (3) |
| 22. (4) | 23. (2) | 24. (1) | 25. (2) | 26. (2) | 27. (3) | 28. (4) |
| 29. (2) | 30. (3) | | | | | |

## பகுதி 11

1. (அ) நான் வாழும் கிராமம் அல்லது நகரம்: அமைவிடமும் எல்லையும் (2) அதன் இயற்கைவளங்கள் (3) மக்கள் வாழ்க்கை முறை: தொழில்கள் (4) குறிப்பிடத்தக்க பொதுத் தாபனங்களும் செயற்பாடுகளும் (5) குறிப்பிடத்தக்க விழாக்களும் நடைபெறும் முறைகளும்

(ஆ) முயற்சி திருவினையாக்கும் (சிறுகதை), (1) குணாளன், ஆண்டு 6 வரைபடித்த விவேகமுள்ள ஏழைச்சிறுவன் (2) பணக்காரர் ஒருவர் வீட்டில் வேலைக்காரனாய்ச் சேர்தல் (3) அவனுடைய மகன் சுகுணன் ஆண்டு 9 படிப்பவன். அவனிடம் புத்தகங்கள் வாங்கி ஓய்வு வேளைகளிற் படித்தல்:விளங்காதவற்றைச் சுகுணனிடம் கேட்டல் (4) க.பொ.த.தேர்வு சிறப்புச் சித்தி பெறல் (5) சுகுணனின் தந்தை குணாளனை தன் தொழிற்சாலையில் உதவி முகாமையாளராக்கல்

(இ) கொட்டும் மழையில்...... அனுபவங்களும் (1) கொட்டும் மழையில் நனைய வேண்டிய சந்தர்ப்பம்: குடையின்மை: அயலில் வீடு வாசல் இன்மை (2) ஒதுக்கிடம் தேடிப் பார்த்தல்: காய்ச்சல் வந்து விடுமோ என அஞ்சுதல்(3) மழையில் நனைந்த குளிர்ச்சி: சிறு நடுக்கம்: மழை பெய்யும் அழகு: வெள்ளத்தில் நடக்கும் இன்பம்: மழையில் மரஞ்செடி கொடிகள்: பறவைகள் மிருகங்கள்.

4. (ஆ)மிகமிக மிருதுவானது.

## பகுதி 1 செயல் 18

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (1) | 2. (2) | 3. (4) | 4. (1) | 5. (3) | 6. (3) | 7. (2) |
| 8. (4) | 9. (2) | 10. (3) | 11. (1) | 12. (3) | 13. (2) | 14. (1) |
| 15. (2) | 16. (3) | 17. (2) | 18. (4) | 19. (2) | 20. (4) | 21. (2) |
| 22. (4) | 23. (3) | 24. (3) | 25. (4) | 26. (4) | 27. (2) | 28. (2) |
| 29. (2) | 30. (2) | | | | | |

## பகுதி 11

1. (அ) விஞ்ஞானம் தந்த வாழ்க்கை வசதிகள்: (1) ஆரம்பம்: உலக முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் காரணியாதல் (2) வீட்டு வாழ்வினுக்குத் தந்த வசதிகள் (3) போக்குவரத்து (4) விவசாயமும் கைத்தொழிலும் (5) மருத்துவம் (6) பிறவசதிகள்

(ஆ) நீர் கண்ட மறியற் போராட்டம்..... பத்திரிகைச் செய்தி (1) ஆரம்பம்: தலையங்கம் அதன் கீழ் அடைப்புக்குறிக்குள் எந்த இடத்து நிருபர் என்பது (2) மறியற் போராட்டம் நடந்த இடம்: காரணம் (3) சுலோக அட்டை வாசகங்கள் (4) முடிவில் பேசியோர் விபரம்

(இ) இளைப்பாறும் ஆசிரியர் ....ஆற்றிய உரை: (1) விளித்துக்கூறல் (2) ஆசிரியரின் குணநலம் (3) கடமையுணர்ச்சி (4) கற்பிக்கும்திறன் (5) பாடசாலை வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள்

3. (அ) (1) சிறுவீடு கட்டி சிறு சோறு சமைத்தல்: பந்தடித்தல்

(ஆ)(5) இருவரும் ஒருவரையொருவர் நேசித்தனர்

(ஈ) (4) அன்போடும் குறும்போடும் பார்த்து மனதில் இன்பத்தை உண்டாக்கித் துன்புறுத்தல்
(5) சிறுபட்டி மீது கொண்ட அன்புப்பெருக்கால் செல்லமாக கள்வன் மகன் என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153

DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.
நூலகம்
இப்புத்தகம் கீழ்க்குறிப்பிடப்படும் திகதியில் அல்லது அதற்குமுன்னர் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்குள் ஒப்படைக்காத புத்தகத்திற்கு நாளொன்றிற்கு 2ரூபா வீதம் அறவிடப்படும்.
-ஆசிரிய நூலகர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரித விற்பனையாகின்றன!

## இந்நூலாசிரியரின் - ஏனைய நூல்கள்

செயல் நூல் - ஆண்டு 3
செயல் நூல் - ஆண்டு 4
செயல் நூல் - ஆண்டு 5
செயல் நூல் - ஆண்டு 6
செயல் நூல் - ஆண்டு 7
செயல் நூல் - ஆண்டு 10
செயல் நூல் - ஆண்டு 11

30 கட்டுரை மஞ்சரி - ஆண்டு 7
40 கட்டுரை மஞ்சரி - (ஆண்டு 10, 11)
கட்டுரை மஞ்சரி பகுதி - 11
(100 சொற் கட்டுரை)
(ஆண்டு 10, 11)

### அடிப்படை இலக்கணம்

ஆண்டு- 10, 11

1987 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் அடிப்படை இலக்கணப் பொருட் கூறுகளை மாணவர் சுயமாக விளங்கிக்கொள்ளும் வகையில் அமைந்தது

**லங்கா புத்தகசாலை**
G.L1.2 டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு 12 ☎ 341942

Cover Design by Two Tone Graphic Tel: 441486

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org